எபிரெயர்

பழைய ஏற்பாட்டு பிரமாணம் எவ்வாறு கிறிஸ்துவின் கிரியையுடன் சம்பந்தப்பட்டது என்பது ஆதியிலிருந்து யூதக் கிறிஸ்தவர்கள் அநேகருக்குப் புரிந்து கொள்வது கடினமாக இருந்ததென்பதை அப்போஸ்தலர் நடபடிகளையும், கலாத்தியரையும் நாம் கற்றுக் கொண்ட போது கண்டோம். யூதமார்க்கத்தார் விருத்தசேதனத்தை வற்புறுத்தினர். பவுல் இவர்களை எதிர்த்து, விசுவாசத்தினால் மாத்திரம் உண்டாகும் இரட்சிப்பின் உண்மை சுவிசேஷத்தைத் தற்காக்க வேண்டியதிருந்தது. யூதக் கிறிஸ்தவர்களில் வேறுசிலர் யூதமார்க்கத்தை விட்டு, கிறிஸ்துவில் முழுமையான நம்பிக்கையை வைப்பதற்கு மாறாக, தொடர்ந்து ஆலயத்தையும், அதன் சடாங்காச்சாரங்களையும் பற்றிக் கொண்டார்கள். இவ்வித நிலையிலிருந்த விசுவாசிகளுக்கு எபிரெயர் ஆக்கியோன் தனது நிருபத்தை எழுதினார்.

ஆக்கியோனும், பின்னணியும்

எபிரெயர் நிருபத்தில் ஆக்கியோனின் பெயர் குறிக்கப்படாததால், இதன் ஆக்கியோன் இன்னாரென்று திட்டவட்டமாக அறியப்பட வில்லை. இதைப் பற்றிய நம்பகமான வேறெந்தத் தகவலுமில்லை. பவுல், பர்னபா, அப்பொல்லோ (அல்லது மற்றவர்கள்) இதன் ஆக்கியோனாக இருக்கக் கூடுமென வேதாகம வல்லுநர்கள் கருதுகின்றனர். இருப்பினும், இதன் அமைப்பும், பொருளடக்கமும் இவர்களில் எவரேனும் ஒருவர் ஆக்கியோனாக

இருக்கலாமென முடிவாகச் சுட்டிக் காட்ட முடியவில்லை. யாருக்கு இந்த நிருபத்தை ஆக்கியோன் எழுதினாரோ அவர்களைச் சந்திக்கும்படி இவர் விரும்பினதையும், இவர் தீமோத்தேயுவை அறிந்திருந்ததையும் நாம் அறிந்து கொள்கிறோம் (13:19,23). ஆரம்பத்திலிருந்த சீஷர்களில் ஒருவராக இவர் இருக்கவில்லை என்பதும் புலனாகிறது (2:3). அப்போஸ்தலர்களின் போதனைக்கு இவரது போதனை முற்றிலும் ஒத்துப் போவதாக இருந்த போதிலும், இந்நிருபம் முழுவதிலும் தெய்வீக உந்துதலின் அடையாளத்தை நாம் காணக்கூடும்.

இந்நிருபத்தின் பெயரிலிருந்து, இது யூதக் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது என்பது தெளிவு. எந்தப் பட்டணத்தின் பெயரும் இதில் குறிப்பிடப்படாததால், இந்தக் கிறிஸ்தவர்கள் எங்கு வாழ்ந்தார்கள் என்பதும் அறியப்பட வில்லை. ரோமாபுரியும், எருசலேமும் ஏறத்தாழ ஒரே மாதிரியான இடங்கள் என்று கருதப்பட்டன (13:24). கிபி. 70-இல் எருசலேமும், தேவாலயமும் அழிக்கப்படுவதற்கு சிலகாலத்துக்கு முன் இந்நிருபம் எழுதப்பட்டிருக்கலாம்.

பொருளடக்கமும், அதன் சுருக்கமும்

எபிரெய நிருபக்காரன் யாருக்கு நிருபம் எழுதினாரோ, அவர்கள் கிறிஸ்துவோடு கூடத் தங்களை இணைத்துக் கொண்டதிலிருந்து பின்வாங்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதை உணர்ந்திருந்தார்.

எபிரெயர்

அவர்கள், தேவனால் அவருடைய குமாரன் மூலம் வெளியாக்கப்பட்ட வெளிப்படுத்தலுக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும், தேவாலயத்தையும், அதன் பாரம்பரிய சடாங்காச்சாரங்களையும் கடைப்பிடிக்கும் மனப்பான்மை உடையவர்களாக இருப்பதை இவர் கண்டார். ஆதலால், அவர்களுடைய மிகுந்த அபாயகரமான நிலவரத்தை அவர்களுக்கு உணர்த்துவதற்கும், அவர்களுடைய சடாங்காச்சாரங்கள், நியாயப்பிரமாணத்தின் முறைமைகள் எல்லாவற்றுக்கும் மேலோங்கி நிற்கும் கிறிஸ்துவின் மேன்மையையும், அவருடைய பாவநிவாரணக் கிரியையையும் அவர்களுக்கு விவரித்துக் கூறுவதற்கும் இந்த நிருபத்தை எழுதினார்.

எவ்விதம் கிறிஸ்து தூதர்களை விடப் பெரியவர் *(1:1-2:18)*, மோசேயை விடப் பெரியவர் *(3:1-4:13)*, பூமிக்குரிய பிரதான ஆசாரியனாகிய ஆரோனை விடப் பெரியவர் என்பதை நிரூபித்துக் காட்டுகிறார் *(4:14-7:28)*.

கிறிஸ்துவானவர் எவ்விதம் மனுஷருக்கு நித்திய சுதந்தரத்தையும், பாவத்திலிருந்து விடுதலையையும் வாக்குப்பண்ணி, மனுஷருக்கும் தேவனுக்கும் இடையில் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரானார் என்பதை எபிரெய நிருபக்காரன் விளக்குகிறார் *(8:1-9:28)*. இயேசு கிறிஸ்துவின் சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்த சித்தத்தின்படிவிசுவாசிகள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறார்.

ஸ்ரீ இது இன்றைக்கு நமக்கும் முக்கியமானதே. அவர்களைப் போல நாமும், யூத மார்க்கத்துக்குரிய பாரம்பரியங்களும், சடங்காச்சாரங்களும் யாருக்குள் நிறைவேறியதோ அந்தக் கிறிஸ்துவே நம்முடைய மகா பிரதான ஆசாரியராயிருக்கிறார் என்று உணர வேண்டும். அவர்களைப் போல நமக்கும் ஓர் பந்தய ஓட்டம் உண்டு. நாம் நம் கண்களை இயேசுவில் மாத்திரம் பதித்துக் கொண்டு பொறுமையோடு ஓடுவோமாக *(12:1,2)*.

இந்த வேளையிலுங்கூட இயேசுவானவர் தொடர்ந்து நமக்காகப் பிதாவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்று அறிவது எவ்வளவு ஆச்சரியமானது *(7:25)*. ஆக்கிபோன், சபை வளர்வதிலும், எதிர்ப்புகளைச் சந்திப்பதிலும் உள்ள சவால்களைச் சந்திப்பதில் ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு உதவிசெய்து, அவர்களுடைய ஆவிக்குரிய சுதந்திரத்தைப் பற்றிய சத்தியங்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். இன்றைக்குரிய விசுவாசிகளுக்கும் அவருடைய வார்த்தை மற்றும் பரிசுத்த ஆவியின் வரங்களின் மூலம் ஞானத்தையும், வழிநடத்துதலையும் அளிக்கிறார். "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" *(4:15)*.

முக்கியமான தகவலின் மறுபார்வை

1. முதலாம் பேதுரு, விசுவாசிகள் பரிசுத்தமான ஜீவியம் செய்யும்படி புத்திமதி கூறுகிறது, அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியுமாறு ஊக்குவிக்கிறது. கிறிஸ்தவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தையையும், கடமைகளையும் வரையறுக்கிறது. உபத்திரவங்களை சகிக்கும்பொழுது கிறிஸ்துவை முதன்மையான மாதிரியாக வெளிப்படுத்துகிறது.

எபிரெயர்

2. எபிரெயர் நிருபத்தில் நான்கு பகுதிகளில் கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் இவ்வுலகப் பிரதான ஆசாரியனின் ஊழியத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது:

5:4-6 - ஆரோன் ஆசாரியனாயிருக்கும்படி அழைக்கப்பட்டான். கிறிஸ்து மெல்கிசேதேக்கின்படி முறைமையின்படி (துவக்கமும், முடிவும் இல்லாதவர்) ஆசாரியனாயிருக்கும்படி அழைக்கப்பட்டார்.

7:23-25 - இவ்வுலக ஆசாரியர்கள் தற்காலிகமாக ஊழியஞ் செய்தார்கள். ஏனெனில் அவர்கள் அனைவரும் மரித்தனர். கிறிஸ்து நிரந்தரமாக ஊழியஞ் செய்கிறார். ஏனெனில், இவர் என்றென்றைக்கும் ஜீவிக்கிறார்.

9:11-14 - இவ்வுலக ஆசாரியர்கள் மனுஷருடைய கையினால் செய்யப்பட்ட கூடாரத்துக்குள், மிருகங்களின் இரத்தத்தோடு பிரவேசித்தார்கள். கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தோடும் பரலோகக் கூடாரத்துக்குள் பிரவேசித்தார்.

9:23-28 - இவ்வுலக ஆசாரியர்கள் பாவத்திற்காக வருஷந்தோறும் பலிகளைச் செலுத்தினார்கள். கிறிஸ்து பாவத்திற்காக என்றென்றுமாக ஒரே தரம் தம்மைத்தாமே பலியிட்டார்.

3. நாம் இவ்விதமாகச் செய்வோம் எனக் கூறும் சில புத்திமதிகள் எபிரெயர் நிருபத்தில் இடம் பெற்றுள்ளன:

4:1 - உங்களில் ஒருவனும் அதை அடையாமல் (அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பது) பின்வாங்கிப் போகாதபடிக்கு பயந்திருக்கக் கடவோம்.

4:11 - நாம் இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்.

4:14 - நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம்.

4:16 - தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக் கடவோம்.

6:3 - அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக.

10:22 - பூரண நிச்சயத்தோடும் (தேவனிடம்) சேரக் கடவோம்.

10:23 - நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்.

10:24 - அன்புக்கும், நற்கிரியைக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போம்.

10:25 - நாம் சபை கூடிவருதலை விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்.

12:1 - பாரமான யாவற்றையும், சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிடுவோம்.

12:1 - நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

12:1 - நம் கண்கள் இயேசுவையே நோக்கட்டும்.

12:28 - தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக் கடவோம்.

13:13 - நாம் அவரிடத்திற்கு (இயேசுவிடம்) புறப்பட்டுப் போகக் கடவோம்.

13:15 - ஸ்தோத்திரபலியை எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்.

எபிரெயர்

4. அநேக எச்சரிப்புகளும் இந்நிருபத்தில் இடம் பெற்றுள்ளன:

அ. இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருக்கக் கூடாது *(2:1-4)*

ஆ. அவிசுவாசத்தினால் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகக் கூடாது *(3:7-19)*.

இ. கீழ்ப்படியாதவர்களாய் இருக்கக் கூடாது *(4:11-13)*.

ஈ. தொடர்ந்து குழந்தையாய் இருக்கக் கூடாது *(5:11- 6:12)*.

உ. தேவனுடைய குமாரனைப் புறக்கணிக்கக் கூடாது *(10:19-31)*.

ஊ. வானத்திலிருந்து பேசுகிறவருக்கு செவிகொடுக்க மாட்டோமென்று விலகக் கூடாது *(12:25-29)*.

தேவகுமாரனின் மேன்மை
எபிரெயர் 1:1-14

முன்னுரை

அ. எபிரெயர் நிருபம் தேவகுமாரனின் மேன்மை பற்றிய விளக்கத்துடன் ஆரம்பிக்கிறது. பத்தாம் அதிகாரத்திலும் இந்த மைப்பொருளின் முக்கிய விஷயங்கள் தொடருகின்றன. அவரது பணிகளும் மேன்மையுள்ளவைகள். அவர் யாரைவிட, எவற்றைவிட மேன்மை உள்ளவர் என்பதை நாம் கீழே காண்போம்:

1. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்.

2. தேவதூதர்கள்.

3. மோசே.

4. பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவம்.

5. பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை, பரிசுத்த ஸ்தலம், பலிகள்.

1. தேவகுமாரன் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை விட மேன்மை உள்ளவர் (1:1-3).

அ. வசனம் 1. "பூர்வ காலங்களில் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்." "பூர்வகாலங்களில்" என்பது தேவகுமாரன் அவதரிப்பதற்கு முன்னருள்ளக் காலத்தைக் குறிப்பதாகும். அக்காலத்தில், கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தினார். (ஆமோஸ் 3:7).

"தீர்க்கதரிசிகள்" என்பது பழைய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் அனைவரையும் குறிக்கிறது.

ஆ. வசனம் 1. "பங்குபங்காகவும் வகைவகையாகவும்" "பங்குபங்காக" என்பதில் பழைய ஏற்பாட்டு யூதர்களின் வரலாறு முழுவதிலும், கர்த்தர் தீர்க்கதரிசிகளின் மூலம் யூதர்களோடு பேசிய காலங்கள் அடங்கும். "வகைவகையாக" என்பதில் தரிசனங்கள், தூதர்களின் வெளிப்படுத்தல்கள், தீர்க்கதரிசன வார்த்தைகள், குறிப்படையாளங்கள், தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையிலுள்ள சம்பவங்கள் மற்றும் இது போன்றவைகள் அடங்கும்.

இ. வசனம் 2. "இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்". "இந்தக் கடைசி நாட்கள்" என்பது, "புதிய யுகம் - மேசியாவின் யுகம்; கிறிஸ்துவின் பிறப்புக்கும், சபைக்காக அவர் மீண்டும் வருவதற்கும் இடைப்பட்டக் காலம்" ஆகும். இதே தேவன் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மற்றும் அவரது குமாரன் மூலமாகவும் பேசினார். இருப்பினும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவைகள் முடிவு பெறாதவைகளாயிருந்தன.

ஈ. ஒவ்வொரு தீர்க்கதரிசியும் ஓர் குறிப்பிட்ட அம்சத்தையே வெளிப்படுத்திக் காட்டினார். எடுத்துக்காட்டாக, தானியேல், யுகத்தின் முடிவில் எருசலேமுக்கும், இஸ்ரவேலர்களுக்குமான தேவனுடைய திட்டங்களை வெளிப்படுத்தினார். அவர்களால் சொல்லப்பட்டிருந்த பெரும்பான்மையான தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலுக்காக, தேவகுமாரனின் வரவை அவைகள் காத்திருந்தன. (மத்தேயு 5:17)

உ. வசனம் 2,3. "இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்".

தேவகுமாரனின் மேன்மை
எபிரெயர் 1:1-14

இப்பொழுது எபிரெய நிருபக்காரன், குமாரன் ஒவ்வொரு விதத்திலும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை விட மேன்மையுள்ளவர் என்பதைக் காண்பிக்க ஆரம்பிக்கிறார். ஆதலால், தீர்க்கதரிசிகள் மூலம் தேவனால் வெளிப்படுத்தப் பட்டவைகளையும், குமாரன் மூலம் தேவனால் வெளிப்படுத்தப் பட்டவைகளையும் ஒப்பிடுவது சாத்தியமற்றதாகும்:

1. "இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்"—தமது குமாரன் சிருஷ்டிகள் அனைத்தையும் சுதந்தரிப்பது பிதாவாகிய தேவனால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

2. வசனம் 2. "இவரைக் கொண்டு (தேவன்) உலகங்களையும் உண்டாக்கினார்".—தேவனே சிருஷ்டிகர், ஆனால் அவர் தமது குமாரன் மூலம் சிருஷ்டிப்பின் வேலையை நிறைவேற்றினார் (யோவான் 1:3,10; 1 கொரிந்தியர் 8:6; கொலோசெயர் 1:16).

3. வசனம் 3. "இவர் (குமாரன்) அவருடைய (தேவன்) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து.."—தேவனுடைய சகல பரிபூரணமும் குமாரன் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. (கொலோசெயர் 1:19). இயேசு அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமாயிருக்கிறார் (கொலோசெயர் 1:15). இவர் அதே தன்மையும், அதே சாரமும் உடையவராய் சரீரத்தில் வெளிப்பட்டிருக்கிறார்!

4. வசனம் 3. "சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினால் தாங்குகிறவராய்" — அண்டசராசரங்களும் அதன் முடிவான இலக்கை நோக்கிச் செல்லும்படியாகக் குமாரன், தமது வல்லமையுள்ள வார்த்தையினால், (அவர் சொன்னபடியே சகல சிருஷ்டியும் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கப்பட்டது). அண்டசராசரங்களிலுள்ள ஒவ்வொன்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

5. வசனம் 3. "தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்." தேவகுமாரனாகிய கிறிஸ்து மீண்டும் பரலோகத்துக்குள் பிரவேசித்த பொழுது எந்தவித புதிய கனத்தையும், மேன்மையையும் பெற்றுக் கொள்ளவில்லை. அவர் மனுக்குலத்தின் பாவங்களுக்காகத் தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக் கொடுத்த பின்னர், தமக்கே உரித்தான நித்திய கனத்தையும், அதிகாரத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொண்டுவிட்டார். (ரோமர் 3:25; யோவான் 17:24; பிலிப்பியர் 2:6-11).

2. தேவகுமாரன் தூதர்களை விட மேன்மையுள்ளவர் (1:4-14).

அ. வசனம் 4. "இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்". யூதர்களில் அநேகர் தூதர்களை மிக உயர்வாக எண்ணி கனப்படுத்தினர். ஏனெனில், சீனாய் மலையில் பழைய ஏற்பாட்டு பிரமாணம் அவர்கள் மூலம் கையளிக்கப்பட்டது. (கலாத்தியர் 3:19; எபிரெயர் 2:2). யூதர்களில் பலர் தூதர்களை இவ்விதம் தவறாகக் கருதி வந்தனர்:

1. அவர்கள் தேவனுக்கும், மனுஷருக்கும் இடையிலான மத்தியஸ்தர்கள். தேவன் தூதர்கள் மூலம் மனுஷரோடு பேசினார். தூதர் மனுஷர்களின் ஜெபங்களைத் தேவசமூகத்திற்கு எடுத்துச் சென்றார்கள்.

தேவகுமாரனின் மேன்மை
எபிரெயர் 1:1-14

2. அவர்கள் உலகத்தில் தேவனுடைய சித்தம் செய்தார்கள்.

3. அவர்கள் விசேஷித்த அறிவைப் பெற்றிருந்தனர். ஏனெனில், அவர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்தில் திரைச்சீலைக்குப் பின்னால் இருந்தனர்.

4. தேவன் தமது திட்டமிடப்பட்ட செயல்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டபொழுது, தூதர்களுக்கு ஏதேனும் மாற்றமளிப்பதற்கு முன் அவர்களைக் கலந்தாலோசித்தார்.

ஆ. தூதர்களைப் பற்றி இவ்விதம் தவறான கருத்துக்கள் நிலவி வந்ததால், ஒவ்வொரு விதத்திலும் கிறிஸ்து தூதர்களை விட மேன்மையுள்ளவர் என்பதைக் காண்பிப்பதில் எபிரெய நிருபக்காரன் முனைத்துள்ளார். இதன் மூலம் அவர் வெளிப்படுத்துவதாவது:

1. தூதர்கள் மூலமாக அல்ல, கிறிஸ்துவின் மூலமாகவே மனுஷர் தேவசமூகத்துக்கு வருகின்றனர் (1 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 9:15)

2. தேவகுமாரனுக்கும், பிதாவாகிய தேவனுக்கும் இடையே மத்தியஸ்தம் பண்ணுவதற்கு தேவதூதர்கள் அவசியமில்லை.

இ. கிறிஸ்து சுதந்தரித்துக் கொண்ட நாமம் தேவகுமாரன் என்பதே. குமாரன் என்னும் இந்த நிலவரம் தூதர்களின் நிலவரத்தைவிட அதிஉன்னத மேன்மை வாய்ந்தது. உண்மையில், இயேசு பிதாவிடமிருந்து வந்தவரானதால் அவர் தேவகுமாரன் என அழைக்கப்படுகிறார். இவரின் பிறப்பு பிதாவின் இயற்கைக்கு அப்பாற்பட்ட நேரிடையான விளைவேயாகும். (லூக்கா 1:35).

ஈ. கிறிஸ்து தூதர்களைக் காட்டிலும் மேன்மையுள்ளவர் என்பதற்குப் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களில் ஆதாரங்களுண்டு:

1. தேவன் தமது குமாரனைப் பற்றிக் கூறுவதாவது:

அ. "நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்" (2 சாமுவேல் 7:14; 1 நாளாகமம் 17:13; சங்கீதம் 2:7).

ஆ. என்னுடைய தூதர்கள் உம்மைத் தொழுது கொள்வார்கள் (சங்கீதம் 97:7)

இ. நீர் தேவன், என்னுடைய சிங்காசனத்தில் வீற்றிருப்பீர் (சங்கீதம் 45:6,7)

ஈ. வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது (சங்கீதம் 102:25-27).

உ. நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார் (ஏனெனில் இவர் தேவனுடைய கனத்திலும், வல்லமையிலும், மகிமையிலும் சமமானவர்) (சங்கீதம் 110:1).

2. மறுபக்கத்தில் தூதர்களைக் குறித்து தேவன் கூறுவதாவது:

அ. தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார். (சங்கீதம் 104:4)

உ. வசனம் 14. "அவர்களெல்லாரும் (தூதர்கள்) அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" தூதர்கள் (கேருபீன்கள், சேராபீன்கள், பிரதான தூதர்கள் ஆகியோர் உட்பட) பரலோகத்தில் தேவனுக்கும், பூமியில் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கும் பணிவிடை செய்கிறவர்களாயிருக்கும் போது,

தேவகுமாரனின் மேன்மை
எபிரெயர் 1:1-14

கிறிஸ்து பரலோகத்தில் பிதாவோடு கூட அவருடைய சிங்காசனத்தில் ஆளுகை செய்கிறார் என்பது சிந்தனைக்குரியது. (சங்கீதம் 91:11; 103:20). இதன் பொருள் யாதெனில், இவர்கள் பணியாட்களைப் போல பணிவிடை செய்கிறார்கள், உதவிக்காரரைப் போல உதவி சேவை செய்கின்றனர், தேவனுடைய அதிகாரத்தின் படியும், நடத்திப்பின் படியும் தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஜனத்திற்கு நிவாரணம் அளிக்கின்றனர் (சங்கீதம் 103:20). எனவே, மேன்மையில் முதன்மையானவர் யார் என்ற கேள்விக்கு இடமேயில்லை.

ஊ. வசனம் 14. "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு.." கடைசி வரைக்கும் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தில் தொடர்ந்திருப்பவர்களே இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்கள் ஆவர். கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மூலம் பாவ சுபாவத்திலிருந்தும், சாத்தானின் ஆளுகையிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டு, தேவ கோபாக்கினையிலிருந்து தப்புவிக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதே "இரட்சிப்பு" எனப்படுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு பணிவிடை செய்யவே தூதர்கள் அனுப்பப்படுகிறார்கள்!

எ. இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்கள் கிறிஸ்துவோடு கூட "சுதந்தரரும்", "உடன் சுதந்தரருமாய்" இருக்கிறார்கள். (ரோமர் 8:17; கலாத்தியர் 4:6,7). இதில் அடங்குபவை:

1. தேவனுடைய பார்வையில் பரிசுத்தரும், குற்றமற்றவர்களுமாய் இருத்தல்.

2. தேவனுடைய குடும்பத்திற்குள் புத்திர சுவிகாரம் பெறுதல்.

3. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்படைதல்.

4. பாவங்களுக்கு மன்னிப்பு பெறுதல்.

5. மகிமையுள்ள சரீரத்தைப் பெறுதல்.

6. பிதாவோடும், கிறிஸ்துவோடும் நித்திய ராஜ்யத்தில் நித்திய ஜீவனை அடையும் வாக்குத்தத்தத்தைப் பெறுதல் (எபேசியர் 1:4-7; ரோமர் 8:11; யோவான் 3:16).

முடிவுரை

அ. ஒவ்வொரு விதத்தில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், தூதர்களை விட தேவகுமாரன் மேன்மையுள்ளவர். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் குமாரனின் மேன்மை இவற்றால் வெளிப்படுத்தப்படுகிறது:

1. சிருஷ்டிகள் அனைத்துக்கும் சுதந்தரவாளியாகக் குமாரன் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

2. குமாரன் மூலம் தேவன் உலகங்களை உண்டாக்கினார்.

3. குமாரன் அதரிசனமான தேவனின் அதே தற்சுரூபமும், அவரை வெளிப்படுத்தினவருமாயிருக்கிறார்.

4. சிருஷ்டிகள் அனைத்தையும் தமது வசனத்தின் வல்லமையால் குமாரன் தாங்குகிறார்.

5. மனுக்குலத்தின் பாவங்களுக்காகத் தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக் கொடுத்த பின்னர், பரலோகத்தில் தேவனுடைய மகத்துவத்தின் (கனம், வல்லமை, அதிகாரம்) வலது பாரிசத்தில் உட்காருகிறார்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

**தேவகுமாரனின்
மேன்மை
எபிரெயர் 1:1-14**

ஆ. தூதர்களை விடச் சிறந்த குமாரனுடைய மேன்மையை இவற்றால் காணலாம்:

1. தேவனுடைய குமாரன் என அழைக்கப்படுகிறார்.

2. குமாரனுடைய பிதா எனத் தேவன் தம்மைத்தாமே அழைக்கிறார்.

3. தேவதூதர்கள் குமாரனைத் தொழுது கொண்டார்கள்.

4. குமாரனே தேவனாக இருந்து, பரலோகத்திலுள்ள தேவனுடைய சிங்காசனத்தில் (அவருடைய கனம், வல்லமை, அதிகாரம்) வீற்றிருக்கிறார்.

5. குமாரன் மூலம் தேவன் உலகங்களை உண்டாக்கினார்.

இயேசு மோசேயைக் காட்டிலும் மேன்மையுள்ளவர் எபிரெயர் 3:1-6

முன்னுரை

அ. எபிரெய நிருபக்காரன் இயேசு மிகவும் மேன்மை உள்ளவர் என்ற வாதத்தைத் தொடர்ந்து விளக்குகிறார். முதல் அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மற்றும் தூதர்களைக் காட்டிலும் குமாரன் மேன்மையுள்ளவர் என அறிவிக்கப்பட்டுள்ளது (மேலும் 2:5-8 காண்க).

ஆ. இந்த வேதாகமப் பகுதியில், சகல மனிதரிலும் மேன்மையுள்ளவர் என யூதர்களால் மதிக்கப்பட்ட மோசேயின் பக்கம் ஆக்கியோன் தமது கவனத்தைத் திருப்புகிறார். இவர் மோசே பெரியவர் என்பதை ஒத்துக் கொள்ளுகிறார். ஆனால் இயேசு அவரைக் காட்டிலும் மேன்மையுள்ளவர் என்பதை விவாதிக்கிறார். மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்!

1. மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராயிருந்தது போல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார் (3:1,2)

அ. வசனம் 1. "இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே", "பரிசுத்தம்" என்பதின் அர்த்தம், தேவனுக்கென்று பிரதிஷ்டித்தல், அர்ப்பணித்தல், உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, வேறுபிரிக்கப்பட்டு, தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்படுதல் என்பதாகும். விசுவாசிகளிடையே பயன்படுத்தப்படும் அன்பான கிறிஸ்தவ வாழ்த்துதலே "சகோதரர்" என்பது. ஏனெனில் அவர்கள் தங்களுடைய பிரதிஷ்டையிலும், அர்ப்பணிப்பிலும் தொடர்ந்திருந்து பரம அழைப்புக்குப் பாத்திரராகிறார்கள்.

ஆ. அவர்கள் தங்களை அழைத்தவரோடு (பிதாவாகிய தேவன்) இணைக்கப்பட்டு ஒன்றாகி, மனுஷரிடையே அவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறார்கள். (அவர் ஆண்டவரும், இரட்சகருமாயிருக்கிறார் என மற்றவர்களிடம் அறிக்கையிடுகிறார்கள்). அவர்கள் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்று, கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின்மூலம் தேவனுக்கென்று வேறு பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் (1 பேதுரு 2:9,10; அப்போஸ்தலர் 26:17,18; மேலும் காண்க ரோமர் 1:7; 8:30). அவர்கள் தங்களுடைய சிந்தைகளை இயேசுவுக்குள் வைத்திருக்கிறார்கள்.

இ. வசனம் 1. "கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்". கவனித்துப் பாருங்கள் என்பதின் அர்த்தம் நம்முடைய சிந்தைகளை அவரில் பதிப்பதாகும். அதாவது, ஏதோ ஒன்றின் மேல் நம்முடைய கவனத்தைச் சீராகச் செலுத்துவது, அதைப் பற்றிக் கற்பிக்கப்படும் உண்மைப் பொருளை கற்றுக் கொள்ளும் வரை, கவனம் செலுத்துவரை விட்டு விடக் கூடாது. இயேசு தம்மைப் பின்பற்றினவர்களிடம், "காகங்களை... காட்டுப்புஷ்பங்களைக் கவனித்துப் பாருங்கள்" (லூக்கா 12:24,27,28) என்று கூறியபொழுது இந்த அர்த்தத்திலேயே சொன்னார். அதாவது, காகங்கள், காட்டுப்புஷ்பங்கள் ஆகியவற்றின் மீது உங்கள் சிந்தையைப் பதித்து, அவற்றின் மூலம் கர்த்தர் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கும்படி விரும்பும் பாடத்தை விளங்கிக் கொண்டு அவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள் என்பதே.

இயேசு மோசேயைக் காட்டிலும் மேன்மையுள்ளவர் எபிரெயர் 3:1-6

ஈ. இயேசுவின் மேலேயே நம்முடைய கவனம் வைப்பமிட வேண்டும்: இவர் மோசேயை விட மேன்மையுள்ளவர் என்ற சத்தியத்தைப் போதுமானபடி கற்கும் வரைக்கும் நமது கவனம் திசை திருப்பப்படக் கூடாது. இவர் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளையும் (1:1,2), தூதர்களையும் (1:4-13; 2:5-8) விட மேன்மையுள்ளவர் என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். இப்பொழுது எபிரெயர் நிருபக்காரன் மோசேயை விட குமாரன் மேன்மையுள்ளவர் என்பதை நிரூபிக்க முற்படுகிறார். மேலும், இயேசுவால் கூறப்படுபவைகள், ஜனங்களுக்கு மோசே கொடுத்த பழைய ஏற்பாட்டு பிரமாணத்தைக் காட்டிலும் மேன்மையுள்ளது என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது!

உ. வசனம் 1. "நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற...". "அப்போஸ்தலர்" என்பவர் "அனுப்பப்பட்டவர்"; மனுஷரிடையே தேவனுடைய பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர் (யோவான் 17:18; எபேசியர் 4:11). கல்வாரியில் பிதாவின் நோக்கங்களை நிறைவேற்றும்படியாக கிறிஸ்து அவரால் அனுப்பப்பட்டார். "பிரதான ஆசாரியர்" எனக் குறிப்பிடுவது, ஜனங்களுக்காக, தேவனுக்கு முன்பு பரிந்து பேசுகிறவராயிருப்பதாகும். கிறிஸ்து இவ்விரண்டு கிரியைகளையும் நடப்பிப்பதால் மோசேயைக் காட்டிலும் மேன்மையுள்ளவர் எனப்படுகிறார். '

பிரதான ஆசாரியர்" பற்றிய மையப் பொருளின் விளக்கம் இந்த நிருபத்தின் கடைசியில் இடம் பெற்றுள்ளதுஊ. வசனம் 2. "மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தது போல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்". கிறிஸ்து எதைச் செய்யும்படியாகப் பிதாவினால் ஏற்படுத்தப் பட்டிருந்தாரோ அதற்கு உண்மையுள்ளவராயிருந்ததே இங்கு குறிப்பிடப்படுவதாகும். "உண்மையுள்ளவர்" என்பதின் பொருள், நம்பகமாயிருத்தல், எதைச் செய்யும்படி நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்களோ அதற்கு உண்மையாயிருப்பது என்பதாகும். மோசே உண்மையுள்ளவராயிருந்தது போல, இயேசுவும் தமக்கு நியமிக்கப்பட்டப் பணியில் உண்மையுள்ள வராயிருந்தார்.

2. இயேசுவானவர் மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார் (3:3,4)

அ. வசனம் 3. "மோசேயைப் பார்க்கிலும் இவர் (இயேசு) அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்". இக்கூற்று அன்றும் இன்றும் யூதர்களிடையே அருவருப்பாக கருதப்பட்டு வருகிறது. இங்கே, "மகிமை" என்பதின் பொருள், கனம், மதிப்பு, புகழ் மற்றும் வணக்கம் எனப் பொருள்படும். இயேசுவானவர் மோசேயைக் காட்டிலும் பயபக்திக்கும் மரியாதைக்கும், மகிமைக்கும், புகழ்ச்சிக்கும் வணக்கத்திற்கும் மிகவும் பாத்திரராயிருக்கிறார்.

ஆ. வசனம் 3. "வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப் பார்க்கிலும் கனத்திற்குரியவனாயிருக்கிறான்" கனத்தைப் பெறுவதில் மோசேயைக் காட்டிலும் இயேசு மிகவும் பாத்திரராயிருக்கிறார் என்ற உண்மையைக் காண்பிக்கவே இந்த ஒப்புமை பயன்படுத்தப்பட்டுள்ளது. மோசே தேவனுடைய ஜனங்களில் ஒருவராக, அவருடைய வீடாக இருந்தார். அவர்களிடையே அவருக்கு மிகுந்த கனம் இருந்தது, ஆனால் ஒருபோதும் அவர் அவர்களில் எவரைக் காட்டிலும் மேன்மையுள்ளவராயிருக்கவில்லை.

இ. மறுபக்கத்தில், இயேசுதாமே தேவனுடைய ஆவிக்குரிய வீட்டைக் கட்டுகிறவராகயிருந்தார் (மத்தேயு 16:18).

இயேசு மோசேயைக் காட்டிலும் மேன்மையுள்ளவர் எபிரெயர் 3:1-6

இயேசுவைப் பிதா சபையின் தலையாக நியமித்திருக்கிறார் (எபேசியர் 1:22). பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய தேவனுடைய ஜனங்கள் எல்லாருக்கும் தலையாயிருக்கிறார் என்பதே இதன் பொருள் என்பது எபேசியர் நிருபத்தில் கூறப்பட்டுள்ளது (எபேசியர் 2:11-22; 3:6).

ஈ) வசனம் 4. "ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்". கட்டுகிறவரும், எல்லாவற்றுக்கும் சிருஷ்டிகருமான தேவன் தம்முடைய வீட்டைக் கட்டும்படி இயேசுவை நியமித்திருக்கிறபடியால், தேவ ஜனங்களின் மத்தியில் அவருடைய வீட்டில் வாசஞ் செய்த மோசேயைக் காட்டிலும் மிகுந்த கனத்தைப் பெறப் பாத்திரராயிருக்கிறார்.

3. மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான், கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்.

அ. வசனம் 5. "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்" இது எண்ணாகமம் 12:6-8லிருந்து மேற்கோள் காட்டப்பட்டதாகும். மேலும் இந்த மேற்கோளில், மற்றவர்கள் எவருக்கும் இல்லாத விதத்தில், தேவன் மோசேயுடன் முகமுகமாகவும், பிரதியட்சமாகவும் பேசினார் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால், மோசேயைக் காட்டிலும் தேவனுக்கு மிகச் சமீபமாக வேறு யாரும் இருந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்வது யூதர்களுக்கு அசாத்தியமாயிருந்தது.

ஆ. மோசே தேவனுக்கு "உண்மையுள்ளவனாய்" இருந்தார். அவர் தன்னுடைய அழைப்புக்கு உண்மை உள்ளவராயிருந்தார். பிறர் அவரை சார்ந்திருப்பதற்கும், நம்புவதற்கும் உரியவராக காணப்பட்டார். அவர் ஒப்பற்ற விதத்தில் தேவனால் நடத்தப்பட்டார். இருப்பினும், அவர் "பணிவிடைக்காரனாய்" இருந்தார். இதன் அர்த்தமாவது, அவர் மதிப்போடும், சுயாதீனத்தோடும் பணிவிடை செய்தார். அவர் தேவனுடைய "வீட்டில் உள்ள" சாதாரண வேலைகளையும் நிறைவேற்றினார். இருப்பினும் அவர் வீட்டிற்கு மேற்பட்டவராக இருக்கவில்லை.

இ. இங்கே, "தேவனுடைய வீடு" என்பதின் அர்த்தம், தேவனுடைய வீட்டார், தேவனுடைய ஜனங்கள், தேவனுடைய குடும்பம் என்பதேயாகும். எகிப்திலிருந்து தேவஜனங்கள் புறப்பட்டு, வனாந்தரத்தில் நாற்பது வருடங்கள் பிரயாணஞ் செய்தபோது, அவர்களுக்குள்ளேயும், அவர்கள் மத்தியிலேயும் மோசே பணிவிடை செய்து, தன்னை அவர்கள் சார்ந்திருப்பதற்கும், நம்புவதற்கும் உரியவராக நிரூபித்தார்.

ஈ. வசனம் 5. "சொல்லப்படப் போகிற காரியங்களுக்கு சாட்சியாக". மோசே பேசியபொழுது தன்னைப் பற்றி அவர் பேசவில்லை. இயேசுதாமே, தம்மையும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தையும் குறித்து (எபிரெயர் 2:3 காண்க) என்ன சொல்லப் போகிறார் என்பதைச் சுட்டிக் காண்பிப்பதே மோசேயின் முக்கியமான வேலையாயிருந்தது. தாம் இன்னாரென்று கிறிஸ்து வெளிப்படுத்தவிருந்த காரியங்களையும் கூட சாட்சியாகச் சுட்டிக் காட்டியிருக்கலாம்.

இயேசு மோசேயைக் காட்டிலும் மேன்மையுள்ளவர் எபிரெயர் 3:1-6

2. கிறிஸ்துவின் வருகையையும், தேவசமுகத்திலுள்ள நம்முடைய நித்திய வீட்டையும் பற்றிய நம்பிக்கையில் (மேலும் மேன்மை பாராட்டுவதைப் பற்றி எபிரெயர் 11:1,13,16) உண்மை. இருப்பினும், தங்களுடைய சாட்சியையும், தைரியத்தையும் முடிவுபரியந்தம் பற்றிக் கொண்டிருப்பவர்களே தேவனுடைய நித்திய வீட்டாரோடு சேர்க்கப்படுவார்கள்.

முடிவுரை

அ. மோசே பெரியவர், ஆனால் இயேசுவானவர் மேன்மையுள்வராயிருக்கிறார்:

1. மோசே எதற்காக நியமிக்கப்பட்டாரோ அதற்கு உண்மையுள்ளவராயிருந்தது போல இயேசு தேவனுக்கு உண்மை உள்ளவராயிருந்தார்.

2. இருப்பினும், இயேசு மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

3. இயேசு குமாரனாக தேவனுடைய வீட்டுக்கு மேற்பட்டவராக உண்மையுள்ளவரா யிருக்கிறார். இருப்பினும், மோசே தேவனுடைய வீட்டிலுள்ள "பணிவிடைக்காரனாய்" உண்மையுள்ளவராயிருக்கிறார்.

ஆ. (பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உள்ள) ஒவ்வொரு விசுவாசியும் சபையாகிய தேவனுடைய ஆவிக்குரிய வீட்டின் ஓர் அங்கமாயிருக்கின்றனர். இயேசு சபைக்கு மேற்பட்ட ஆண்டவராயிருக்கிறார். நாம் கீழ்க்கண்டவற்றைப் பற்றிக் கொள்ளும் வரைக்கும், சபையாகிய அமைப்பில் முக்கியமான ஜீவனுள்ள கல்லாக நிலைத்திருப்போம்:

1. கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்திற்காக தைரியமான, பகிரங்க சாட்சி.

2. கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய நம்முடைய நம்பிக்கை.

இயேசு மோசேயைக் காட்டிலும் மேன்மையுள்ளவர்
எபிரெயர் 3:1-6

1. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவஜனங்களை மோசே விடுவித்த போது அவருடைய ஜீவியம் கிறிஸ்து "விடுவிக்கிறார்" என்பதை முன்னறிவிப்பதாய், சுட்டிக்காட்டுவதாய் இருந்தது.

2. வனாந்தரத்தில் தேவனுடைய ஜனங்களுக்காக மோசே பரிந்து பேசியபோது கிறிஸ்து "பரிந்து பேசுகிறவர்" என்பதை மோசே சுட்டிக் காட்டுவதாயிருந்தது.

3. வனாந்தரத்தில் மன்னாவும், பாறையிலிருந்து தண்ணீரும் கொடுக்கப்பட்டபோது, கிறிஸ்துவே "ஜீவஅப்பம், ஜீவதண்ணீர்" என்பதை மோசே சுட்டிக்காட்டுவதாயிருந்தது.

4. வனாந்தரத்தில் கோலில் வெண்கலச் சர்ப்பம் உயர்த்தப்பட்டபோது, மனுஷகுமாரனாகிய கிறிஸ்துவும் சிலுவையில் உயர்த்தப்படுவார் என்பதை மோசே சுட்டிக் காட்டுவதாயிருந்தது.

சீனாய் மலையில் தேவனுடைய ஜனங்களுக்கு மோசே பிரமாணங்களைக் கொடுத்தபொழுது, கிறிஸ்து "பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின் நிறைவாயிருந்தார்" என்பதை சுட்டிக் காட்டினார்.

உ. வசனம் 6. "கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்."

1. மோசே தேவனுடைய உண்மையுள்ள பணிவிடைக் காரனாய் இருந்தார், இயேசு உண்மையுள்ள தேவகுமாரனாயிருக்கிறார்.

2. மோசே தனிப்பட்ட அடிப்படையில் தேவனை அறிந்திருந்தார்,

இயேசு தேவனுடைய சாரத்தைப் பெற்றிருந்த (சாயல், தன்மை) குமாரனாகிய தேவனாயிருந்தார்.

3. மோசே தேவனுடைய வீட்டில் பணிவிடை செய்தார், தேவகுமாரனாகிய இயேசு அதைக் காட்டினார்!

4. மோசே தேவஜனங்களுக்கு உண்மையோடு பணிவிடை செய்தார், இயேசு தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் மேற்பட்டவராயிருக்கிறார்.

ஊ. வசனம் 6. "நாமே அவருடைய வீடாயிருப்போம்" புதிய ஏற்பாட்டு சபையிலுள்ள விசுவாசிகள் தேவனுடைய வீடு என்றும், அவருடைய வீட்டார் என்றும் நிரூபக்காரன் அடையாளங் காட்டுகிறார். (எபேசியர் 2:19, 1பேதுரு 2:5).

எ. வசனம் 6. "நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில்,". நாம் கீழ்க்கண்டவற்றுக்கு உண்மையாயிருக்கும் வரை, ஜீவனுள்ள ஆவிக்குரிய சபை அமைப்பில் நாம் முக்கியமான ஜீவனுள்ள கல்லாக நிலைத்திருப்போம்:-

1. கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்திலுள்ள நம்முடைய தைரியமான, பகிரங்க சாட்சியில் (மேன்மை பாராட்டுக்குரியதைப் பற்றி) உண்மை

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

முன்னுரை

அ. விசுவாசத்திலிருந்து தேவஜனம் வழுவிப் போவதையும், தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கக் கூடாமற் போவதையும் பற்றி எபிரெயர் 3:7 இல் ஆரம்பித்த எச்சரிப்பின் முடிவுரையே இந்தப் பகுதியாகும். அதென்னவெனில், கிறிஸ்துவின் மேல் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுகிறவர்களே இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள் என்பதே.

ஆ. ஆதலால், தாங்களாக அப்படியே தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து விடலாம் என கிறிஸ்தவர்கள் எண்ணக் கூடாது. அவர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்த பிறகு கீழ்ப்படியாமையிலும், அவிசுவாசத்திலும் விழுந்து விடாதபடிக்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். விழுவதற்கு ஏதுவானப் பாவத்தில் வஞ்சனையினாலே ஒருவரும் கடினப்பட்டுப் போகாதபடிக்கு, நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும்.

இ. வனாந்தரத்தில் தேவனைப் புறக்கணித்த இஸ்ரவேலர் மேல் தேவகோபாக்கினை மூண்டதுபோல, இன்றைக்கும், அவரைப் புறக்கணிக்கிறவர்கள் மேல் தேவ கோபம் மூள்வது நிச்சயம்! வாக்குத்தத்த தேசத்தில் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்குத் தேவன் இஸ்ரவேலர்களை அனுமதியாதது போல, இப்படிப்பட்டவர்களையும் நித்திய இளைப்பாறுதலுக்குள் தேவன் அனுமதிக்க மாட்டார்.

1.தேவனுடைய ளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும் வாக்குத்தத்தம் இன்னும் நிறைவேறவில்லை (4:1-5)

அ. வசனம் 1. "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் (இன்னும் நிறைவேறாமல்) நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்". தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதைப் பற்றி இஸ்ரவேலர்களுக்கு உண்டான வாக்குத்தத்தம் இன்றைக்கும் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, முடிவுபரியந்தம் இந்த நம்பிக்கையில் உறுதியாய் இருக்கும் எவருக்கும் உண்டாயிருக்கிறது.

ஆ. "நாம் பயந்திருக்கக்கடவோம்" என்பதின் உண்மைப் பொருள் "நாம் ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம்" என்பதே. "உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்கு" என்பதின் அர்த்தமாவது:

1. இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கக் கூடாற் போகத் தக்கதாகத் தேவனால் நியாயந் தீர்க்கப்படுவது.

2. தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதிலிருந்து நீங்கள் விழுந்தீர்கள் என்பதை உங்களுடைய மனதிலும், இருதயத்திலும் அறிந்து கொள்வது.

இ. இதன் பின்பு ஆக்கியோன் சொல்லுகிறதாவது:
"தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கக் கூடாதபடிக்கு நாம் பின்வாங்கிப் போய், அவரால் நியாயந்தீர்க்கப்படும் (நம் இருதயங்களில் அறியப்படும்) இடத்திற்கு வாராதபடிக்கு நாம் பயந்திருக்கக்கடவோம்!

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

பாவங்களின் வஞ்சனையினால் ஓர் விசுவாசியின் இருதயம் கிறிஸ்துவுக்கும், சுவிசேஷத்திற்கும் எதிராகக் கடினப்படும்பொழுது இது சம்பவிக்கிறது. இதன் பின்பு, தன்னை இரட்சிக்கும்படியாகக் கிறிஸ்துவிலுள்ள நம்பிக்கையை அவன் இழக்கிறான்.

ஈ. விழுகை சம்பவிப்பதற்கான அடையாளங்கள் யாவை?

1. ஆராதிப்பதற்கும் வசனத்தைப் பிரசங்கிப்பதற்கும், அந்நியோந்நியத்திற்கும், புத்திசொல்வதற்கும், ஜெபத்திற்கும் மற்ற விசுவாசிகளுடன் ஒன்று சேர்வதில்லை.

2. ஊழியத்தையும், உள்ளூர் சபைகளின் சுற்றுவட்டார சுவிசேஷப் பணிகளையும் தாங்குவதில்லை.

3. நண்பர்கள், அயலகத்தார், உறவினர் ஆகியோரின் மத்தியிலும், இதரப் பட்டணங்களிலும், வெளிநாடுகளிலும் இழந்து போனவர்களை ஆதாயப்படுத்தும்படியான வைராக்கியத்தையும், தைரியத்தையும் இழந்து விடுவதுண்டு.

4. இயேசு கிறிஸ்து தங்களுடைய ஆண்டவரும், இரட்சகருமாய் இருக்கிறார் என்று பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் அறிக்கை பண்ணுவதில்லை.

5. அவிசுவாசிகளுடன் கைகோர்த்துக் கொண்டு அவர்களுடன் பிணைக்கப்படுவதுண்டு.

உ. விழுகை எவ்விதம் சம்பவிக்கிறது? கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போகும்படி (விழுகை) விசுவாசிக்குள் திட்டமிடப்பட்ட முன்னேற்றம் படிப்படியாய் நடைபெறுகிறது. சரீரத்தில் பாவத்தை நடப்பிப்பதற்கு முன்னர் ஒருசில நிமிடங்களில், அல்லது சில விஷயங்களைப் பொருத்தவரையில், நாட்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் பாவம் ஓர் விசுவாசிக்குள் விசுவரூபம் எடுக்க ஆரம்பிக்கிறது.

1. பிரிவு -- விசுவாசிகள் அந்நியோந்நியத்திலிருந்து விலகிப் போகின்றனர்; சபையிலிருந்து சபைக்குத் தாவுகின்றனர்; எந்த சபைக்கும் போவதுமில்லை.

2. சோதனை -- கர்த்தருடைய கரிசனையையும், பாதுகாப்பையும் குறித்து, சாத்தானாலும், அசுத்த ஆவிகளாலும் தீமையான எண்ணங்களும், சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றன.

3. இழுக்கப்படுதல் -- பயமான பொல்லாத நினைவுகள், பாவங்களைக் காண்பதில் மகிழுதல், கர்த்தருடைய கரிசனையையும், பாதுகாப்பையும் மோசமாகக் கேள்விகள் கேட்கின்றனர்.

4. சிக்குண்டு போதல் - தேவனிலும், கிறிஸ்துவிலும் உள்ள வாஞ்சையும், நம்பிக்கையும் பலவீனப்படுகிறது.

5. இச்சை கர்ப்பந்தரித்தல் - இணங்குதல், சந்தேகித்தல், ஒப்புக்கொடுத்தல்.

6. பாவம் -- பாவக் கிரியை சரீரத்தில் உண்டாகிறது, தேவனிலும், கிறிஸ்துவிலும் நம்பிக்கைக்கு இடமேயில்லை.

7. மரணம் -- ஆவிக்குரிய மரணம், தேவனிலும், கிறிஸ்துவிலுமிருந்து பிரிக்கப்படுதல் (யாக்கோபு 1:14,15).

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

ஊ. இருப்பினும், மேற்கண்ட எந்த நிலையில் மனிதன் இருந்தாலும் பரிசுத்த ஆவியினால் பாவ சுபாவத்தின் வல்லமை மேற்கொள்ளப்பட்டு, அவன் விடுதலையாக்கப்படக் கூடும். அவன் கிறிஸ்துவிடம் திரும்பும் அக்கணமே அவனுடைய பாவம் மன்னிக்கப்பட்டு, பிதாவோடுள்ள அந்நியோந்நியத்துக்கு மறுபடியும் கொண்டுவரப்படுவான்.

எ. வசனம் 2. "ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது." "சுவிசேஷம்" என்பது, தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும் நற்செய்தியாகும். இன்று நாம் கேட்பது போல இஸ்ரவேலர்கள் "நற்செய்தியைக்" கேட்டார்கள்.

ஏ. வசனம் 2,3. "கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை" கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டால் மாத்திரம் போதாது என்பதற்கு வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களுக்கு நடந்த சம்பவமே நிரூபணமாகும். கேட்கும் நற்செய்தி விசுவாசத்தோடு ஒன்றாகக் கலக்கவேண்டும். எபிரெய நிருபக்காரன் இதற்கு ஆதாரமாக சங்கீதத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார். "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்".

ஐ. வசனம் 3. "விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்"; சுவிசேஷமாகிய "நற்செய்தியைக் கேட்டு, தங்களுடைய இருதயங்களில் விசுவாசிக்கிறவர்கள் தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார்கள் (ரோமர் 10:9,10). இருப்பினும், இந்த விசுவாசத்தை முடிவுபரியந்தம் பற்றியிருப்பதைபே இது சார்ந்துள்ளது. (காண்க 3:6,14).

ஒ. வசனம் 4. "மேலும், தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று ஏழாம் நாளைக் குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்". எபிரெயர் நிருபக்காரன் சங்கீதம் 95:11-ஐ மறுபடியும் மேற்கோள் காட்டி, அதனை ஆதியாகமம் 2:2 உடன் இணைத்து, தேவன் தமது கிரியைகளை முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்பதைக் காண்பிக்கிறார். நாம் எவற்றைக் காணும்படி அவர் விரும்புகிறார்?

1. சிருஷ்டிப்பின் வேலை முடிந்தது முதற்கொண்டு முழு மனுக்குலத்துக்கும் தேவனுடைய இளைப்பாறுதல் கிடைக்கக் கூடியதாய் இருக்கிறது.

2. இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படியான அவருடைய இளைப்பாறுதல் இன்றைக்கும் உண்டாயிருக் கிறது.

3. நற்செய்தியைக் கேட்பவர்களுக்கு அது பலனளிக்க வேண்டுமானால் நற்செய்தி விசுவாசத்துடன் ஒன்றாகக் கலந்திருக்க வேண்டும்.

4. தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் நாம் பிரவேசிக்க வேண்டுமானால் முடிவுபரியந்தம் இந்த விசுவாசத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும். ஆகையால், நாம் பின்வாங்கிப் போகிறவர்களாகக் காணப்படாதபடிக்கு எப்போதும் பயந்திருக்கக்கடவோம்!

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

2. மனுஷர் தேவனுடைய இளைப் பாறுதலில் பிரவேசிப்பதற்கு வேறொரு நாளைக் குறித்திருக்கிறார் (4:6-10).

அ. வசனம் 6. "சிலர் அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற காரியமாயிருக்கிறது." தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கான அழைப்பு ஒருபோதும் திரும்பப் பெறப்படவில்லை. சிலர் தாங்கள் செவி மடுக்கும் "நற்செய்தியை" விசுவாசத்துடன் ஒருங்கிணைத்துக் கொள்வார்கள். அவர்கள் முடிவுபரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டு, தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள்.

ஆ. வசனம் 6. "சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள் கீழ்ப்படியாமையினாலே அதில் பிரவேசியாமற்போன படியினாலும்," 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த இஸ்ரவேலர்களை இது குறிக்கிறது. அவர்களுடைய அவிசுவாசத்தின் மூலம் அவர்கள் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கவில்லை. (வாக்குத்தத்த நாட்டில்) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாறுதலாகிய "நற்செய்தியை" அவர்கள் விசுவாசத்துடன் ஒருங்கிணைக்கத் தவறினர்.

இ. வசனம் 7. "இன்று என்று சொல்வதினாலே பின்னும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்." ஆக்கியோன், தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் மனுஷர் பிரவேசிப்பதற்கு வேறொரு நாளைக் குறித்திருக்கிறார் என்பதை விளக்குவதற்கு சங்கீதம் 95:7,8 வசனங்களிலிருந்து "இன்று" என்னும் வார்த்தையை மேற்கோள் காட்டுகிறார்.

உண்மையில், "நற்செய்தியைக்" கேட்டு, அதைவிசுவாசத்துடன் ஒருங்கிணைத்திருக்கும் எவருக்கும் இது எப்போதும் "இன்று" எனப்படும் (எபிரெயர் 3:13). குறிப்பாக, விசுவாசித்த பிறகு பின்வாங்கிப் போனவர்கள் இதில் அடங்குவர்.

ஈ. வசனம் 7. "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா திருங்கள்." இது சங்கீதம் 95:7,8இல் (தாவீதின் சங்கீதம்) இருந்து எடுக்கப்பட்ட நேரிடையான மேற்கோளாகும். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போகிறவர்களுக்கான (விழுகை) எச்சரிப்பாக இது அமைந்துள்ளது. மனந்திரும்பி, கிறிஸ்துவிடம் திரும்பும்படி அழைக்கும் தேவனுடைய சத்தத்தை இன்று நீங்கள் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத் தாதிருங்கள்.

உ. வசனம் 8. "யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்குட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக் குறித்துச் சொல்லி யிருக்க மாட்டாரே." இதில் மறைந்திருக்கும் உண்மையாவது:

1. இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படியான ஜனங்கள் தேவனுக்கு உண்டாயிருப்பார்கள். அவருடைய வாக்குத்தத்தம் நிச்சயம் நிறைவேறும்.

2. எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர்களை யோசுவா தேவனுடைய வாக்குத்தத்த இளைப்பாறுதலுக்குள் உட்படுத்தவில்லை.

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

3. எனவே, அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படி வேறு சிலர் தெரிந்தெடுக்கப்பட வேண்டியதாயிருந்தது.

4. ஆதலால், இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படி "இன்று" எனச் சொல்லப்படும் வேறொரு நாளைத் தேவன் குறித்திருக்கிறார்! இன்று "நற்செய்தியைக்" கேட்டு, அதனை விசுவாசத்தோடு ஒருங்கிணைக்கும் எவரும் (தம்முடைய சிருஷ்டிப்பைத் தேவன் முடித்த பொழுது ஏற்படுத்திய) அவருடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்குத் தெரிந்தெடுப்பார்கள்.

ஊ. வசனம் 9. "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது". தாங்கள் கேட்ட "தேவனுடைய இளைப்பாறுதலாகிய நற்செய்தியை" விசுவாசத்தோடு ஒருங்கிணைத்தார்கள் அவருடைய ஓய்வுநாளின் (ஏழாம் நாள்) இளைப்பாறுதலில் அவரோடு கூட பங்கு பெறுவார்கள். இவர்கள் தேவனுடைய பிள்ளைகளும், அவருடைய ஜனங்களுமாயிருக்கிறார்கள் (1 பேதுரு 2:10; மேலும் காண்க ரோமர் 9:25; ஓசியா 2:23). எகிப்திலிருந்து வெளியே வந்த இஸ்ரவேலர் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கவில்லை. ஆனால், இவர்களோ இப்பொழுது தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள்

எ. வசனம் 10. "தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்".

தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் வேலையை முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததுபோல, ஒருவன் தன்னுடைய சொந்த வேலைகளிலிருந்து ஓய்ந்திருப்பதே தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பது என்பதின் பொருளாகும். (பழைய ஏற்பாட்டு பிரமாணத்தைக் கைக்கொண்டு) கிரியைகளின் மூலம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படி முயற்சிக்கும் யூதர்களை இது குறிக்கிறது. ரோமருக்கும், எபேசியருக்கும் எழுதின தன்னுடைய நிருபங்களில் பவுல் இவற்றைத் திட்டவட்டமாக எழுதுகிறார். (ரோமர் 3:21,22; 9:30-32; எபேசியர் 2:8,9)

ஏ. இரட்சிப்பு விசுவாசத்தினால் மாத்திரமே வருகிறது. இதைத் தேடுகிறவர்களுக்கு, விசுவாசம் இப்பொழுது சமாதானத்தையும், (யோவான் 14:27; மத்தேயு 11:28), வருங்காலத்தில் இளைப்பாறுதலையும் (வெளிப்படுத்தின விசேஷம் 14:13) அளிக்கிறது.

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலோ அல்லது சுய பெலத்தினாலும், முயற்சியினாலோ இரட்சிக்கப்படக் கூடும் என ஒருவன் எண்ணுவானேயாகில் அவன் கிருபையிலிருந்து விழக்கூடும். (கலாத்தியர் 5:4-6)

3. தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்க நாம் ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம் (4:11-13)

அ. வசனம் 11. "நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்". "ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்" என்பதின் பொருள், ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்ளுவது, நம்பிக்கையுடனும், ஊக்கமுடனுமிருப்பது, உறுதியாயிருப்பது, கவனமாயிருப்பது, செயல்படுத்துவது என்பனவாகும்.

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சத்தியமாகும். இந்த எச்சரிப்புக்குள் ஆக்கியோன் தன்னையும் உட்படுத்திக் கொள்ளுகிறார்! தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க வேறொரு நாள் குறிக்கப்பட்டிருக்கிறபடியால், அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படி நாம் முயற்சி செய்வோமாக!

ஆ. வசனம் 11. "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு". இந்த நிருபம் விசுவாசிகளுக்கு அனுப்பப்படுகிறது. எனவே, "ஒருவனாகிலும்" என்னும் பதம் விசுவாசிகளைக் குறிக்கிறது. "விழுதல்" என்பதின் அர்த்தம் கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்திலிருந்து விழுந்து போதல் அல்லது பிரிந்து போதல் என்பதாகும். வனாந்தரத்தி லிருந்த இஸ்ரவேலர்களின் மாதிரியையும், அவர்கள் அவிசுவாசத்தில் விழுந்து போனதையுங் குறித்து விசுவாசிகள் எச்சரிக்கப்படுகின்றனர்.

இ. இந்த வசனத்திலுள்ள "கீழ்ப்படியாமை" என்பதின் அர்த்தம், மீண்டும் கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்திற்கு நம்மைத் திருப்பும்படி, பரிசுத்த ஆவியானவராலும் முடியாதபடி, நாம் வேதனை நிறைந்த கீழ்ப்படியாமையின் உச்சநிலைக்கு சென்றுவிடுவது.

ஈ. வசனம் 12. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளது..." "தேவனுடைய வார்த்தை" என்பது தேவனால் கூறப்பட்டவைகள் யாவையும் குறிக்கிறது.

பழைய, புதிய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் அனைத்தும், குறிப்பாக, தமது குமாரன் மூலம் தேவன் விளம்பினவைகள் அனைத்தும் இதில் அடங்கும். "தேவனுடைய வார்த்தை ஜீவனும், வல்லமையும் உள்ளது" என ஆக்கியோன் கூறுவதின் பொருள், ஜனங்களின் ஜீவியத்தில் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றும் விதத்தில் தேவனுடைய வார்த்தை உயிர்ப்பிக்கக் கூடியதும், விசையியக்கமுடையதும், சக்தியும், ஆற்றலுமுடையது என்பதே (ஏசாயா 55:10,11).

உ. தேவவார்த்தையை ஆக்கியோன் இவ்வாறு விவரிக்கிறார்:

1. இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலுள்ள கருக்கானது.

2. ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்தக் கூடியது.

3. இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கக்கூடியது.

ஊ. பட்டயம் மனிதனின் சரீரத்தை எவ்விதம் ஊடுருவி கூறுபடுத்துகிறதோ அவ்வண்ணமாகவே தேவனுடைய வார்த்தை உள்ளான மனுஷனுக்குள் உருவக் குத்தக்கூடிய தாயுள்ளது. ஆவிக்குரிய மனிதனின் மையப் பகுதியை வார்த்தை ஊடுருவும் போது, அவனுடைய இருதயத்தின் எண்ணங்களையும், நினைவுகளையும் (உணர்வுகள்), (தேவனுடைய வார்த்தையில் வரையறுக்கப்பட்ட) தெய்வீக வாழ்க்கையின் அளவுடன் ஒப்பிட்டுப் பார்க்க உதவுகிறது.

எ. வசனம் 13. "மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது".

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

12-ஆம் வசனத்திலுள்ள அதே கருத்தே இதில் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆக்கியோன் கையாண்ட உருவகத்தில் மட்டும் சற்று வித்தியாசம் உள்ளது. நிர்வாணம் என்பதின் பொருள் "மூடப்படவில்லை" என்பதே. மனித சரீரம் ஆடையின்றி நிர்வாணமாயிருப்பது போல, நம்முடைய இருதயத்தின் (உள்ளான மனுஷன்) எண்ணங்களும், யோசனைகளும் தேவனுக்கு முன்பாக நிர்வாணமா யிருக்கிறது. அவருடைய கண்களின் அசைவுக்கு மறைவானது ஒன்றுமேயில்லை. அவருடைய வார்த்தையின் அளவின்படி அவர் எதைக் காண்கிறாரோ அதன்படி அவர் நியாயந் தீர்க்கிறார்.

ஏ. வசனம் 13 "அவருக்கே நான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்". ஒவ்வொரு மனிதனும் இருதயத்தின் எண்ணங்களுக்கும், நினைவுகளுக்கும் (உணர்வுகள்) தொடர்ந்து உத்தரவாதம் உள்ளவனாயிருக்கிறான். ஆகையால் தேவனுடைய வார்த்தை நம்முடைய உள்ளான நிலவரத்தை அவருடைய கண்களுக்கு வெளிப்படுத்தும் பொழுது, நாம் கிறிஸ்துவிலிருந்து விழுந்து கொண்டிருக்கிறோமா இல்லையா என்பதை வெளிப்படுத்தும்.

1. நீங்கள் தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும் படி மறுபடியுமாகக் கிறிஸ்துவிடம் திரும்புங்கள்.

2. நம்முடைய இருதயங்களில் பொல்லாத எண்ணங்கள், தீய நினைவுகளின் அடிப்படையில் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற நரகத்திற்கென்று

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு,

1. நித்திய நித்தியமாகத் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவோம். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் நாம் கண்டு கொண்ட கிருபைக்காக, பாவத்தின் வாஞ்சையினால் விழக்கூடிய வேளையிலும் நம்மைத் தூக்கியெடுக்கும் கிருபைக்காக நம் தேவனை ஸ்தோத்தரிப்போமாக!

முடிவுரை

அ. தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதிலிருந்து விழுந்து விடக் கூடிய நிலையில் நாம் அதைரியப்படவோ, கடினப்படவோ அவசியமில்லை.

ஆ. நம்முடைய பலவீனங்களைக் (நாம் எவ்விதம் துன்புறுகிறோம், எவ்விதம் சோதனைகளை உணருகிறோம்) குறித்து பரிதபிக்கக் கூடிய பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார். இயேசு தேவனிலுள்ள விசுவாசத்தையும், நம்பிக்கையையும் விட்டு விடும்படிக்கு, நம்மைப் போலவே பாவத்தினால் சோதிக்கப்பட்டார் (ஆனால் பாவமில்லாதவராய் இருந்தார்).

இ. ஆகையால், தேவனுடைய வார்த்தை நம்முடைய உள்ளான மனுஷனுக்குள் ஊடுருவிச் செல்லும்பொழுது இரக்கத்தையும் கிருபையையும் அடையும்படி விடுதலையோடும், தைரியத்தோடும் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். அப்போது நாம்

1. கடுமையாகச் சோதிக்கப்படுவதைக் கண்டறிகிறோம்.

2. தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதிலிருந்து விழக்கூடிய விதத்தில் படிப்படியாகக் கடந்து வருவதை உணருகிறோம்.

தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்
எபிரெயர் 4:1-13

3. பாவஞ் செய்திருப்பதால், நம்முடைய இருதயத்திற்குத் தேவ கிருபை தேவை என்பதை உணருகிறோம்.

1. ஈ. தன்னுடைய முதலாவது நிருபத்தில் யோவான் இவ்விதம் கூறுகிறார்: "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து (நம்முடைய பிரதான ஆசாரியர்) நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2:1)

நம்முடைய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக்கொள்ளுதல்

எபிரெயர் 4:14-16

முன்னுரை

அ. இந்த வதபகுதி எபிரெயர் 2:17,18 உடன் நேரிடைத் தொடர்புடையது. இந்த வேதபகுதியில் ஆக்கியோன் கிறிஸ்துவைப் பற்றி இவ்விதம் கூறுகிறார்:

1. எவ்விதம் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது—மனிதனாகத் தோன்றி, மனிதர் மத்தியில் வாழ்ந்து, மனிதரோடு ஒருவராயிருந்தார். நம்முடைய மனுஷிக நிலவரங்களைப் பற்றி அவர் அறிந்திருக்கிறார்.

2. மற்றெல்லா மனிதர்களையும் போல அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டார் மனுஷிகக் கஷ்டங்களையும், துன்பங்களையும், சோதனைகளையும் பற்றி அவர் அறிந்திருக்கிறார்.

ஆ. இவை நிமித்தமாக, இதே விதத்தில் சோதிக்கப்படுகிறவர்களுக்காகப் பரிதபிக்கவும், உதவி செய்யவும் வல்லவராயிருக்கிறார்! இவர் அவர்களுடைய இரக்கமுள்ள பிரதான ஆசாரியராகக் கூடியவராயிருக்கிறார்!

2. நம்முடைய விசுவாசத்தை நாம் உறுதியாய்ப் பற்றிக் கொள்ளக் கூடும். ஏனெனில், நம்முடைய மகா பிரதான ஆசாரியர் நமக்காக பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருக்கிறார் (4:14) அ. "மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்"

1. இங்கே "மகா" என்னும் வார்த்தை இயேசு மற்ற எல்லா பிரதான ஆசாரியர்களை விடப் பெரியவர் என்பதைக் காட்டும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர் பழைய ஏற்பாட்டு ஆரோனையும், மற்றெல்லா லேவியத்துவ ஆசாரியர்களையும் காட்டிலும் மேன்மையுள்ளவர். "மகா" என்பதின் அர்த்தங்கள், பெரிய, மிகப்பெரிய, மிக வல்லமையுள்ள, எல்லாவற்றிலும் மிகப் பெரிய என்பவைகளாகும்.

ஆ. "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போனவர்". ஆரோனும், அவருக்குப் பின் வந்த மற்றெல்லாப் பிரதான ஆசாரியர்களும், ஜனங்களின் பார்வையிலிருந்து கடந்து மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள், தேவனுடைய சந்நிதானத்துக்குள் பிரவேசித்தது போல (லேவியராகமம் 16:15,17), இயேசு தமது சீஷர்களின் பார்வையைக் கடந்து, பரலோகத்தில் பிதாவாகிய தேவனுடைய சமூகத்துக்குள், பரலோகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் (அப்போஸ்தலர் 1:9; 2:33) பிரவேசித்தார்.

இ. இப்பொழுது பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசுவானவர் நமக்காகப் பிதாவிடம் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார் (ரோமர் 8:34; மேலும் காண்க எபிரெயர் 7:25; 9:24; 1 யோவான் 2:1). அவர் இடைவிடாமல் நமக்காகப் பிதாவிடம் பேசிக் கொண்டிருக்கிறார்.

ஈ. "தேவகுமாரனாகிய இயேசு." இயேசுவின் மேன்மையை மேலும் வலியுறுத்தும் வண்ணம் இந்தப் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அவர் தெய்வீகமானவர் என்பதை விளங்கப்பண்ண இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நம்முடைய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக்கொள்ளுதல்

எபிரெயர் 4:14-16

இயேசுவானவர் மனுஷனாக அவதரித்து, மனிதர் மத்தியில் வாசம்பண்ணியது மாத்திரமன்றி (கூடாரம்), அவரே தேவனுடைய ஒரே பேறான குமாரனாயிருந்தார்.அவர் நம்மோடிருக்கும் கர்த்தர் (மத்தேயு 1:22,23; ஏசாயா 7:14).

1. இயேசு மற்றவர்களால் தேவனுடைய குமாரன் என அழைக்கப்படுகிறார் (மத்தேயு 16:16,17; 8:29; 14:33; மாற்கு 1:1;லூக்கா 1:35; 4:41)

2. இயேசு தாமே தம்மைத் தேவனுடைய குமாரன் எனக் குறிப்பிடுகிறார் (யோவான் 5:25; 10:36; 11:4).

உ. புதிய ஏற்பாட்டு வேதாகமங்களில் இயேசுவானவர் இவ்விதம் அழைக்கப்படுகிறார்:

1. தேவன் (யோவான் 1:1; 20:28; ரோமர் 9:5; தீத்து 2:13; எபிரெயர் 1:8; 1 யோவான் 5:20).

2. கர்த்தர் (அப்போஸ்தலர் 4:33; 16:31; லூக்கா 2:11; அப்போஸ்தலர் 9:17; மத்தேயு 22:43-45).

இது வல்லமையுள்ள தேவனுக்கு, உன்னதமான தேவனுக்குப் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தும் பதமாகும்.ஊ. "நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்".

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு இவ்விதமிருக்கிறார்:

1. வேறெந்த ஆசாரியரைப் பார்க்கிலும் மகாபெரியவரும், மிகுந்த வல்லமையுமுள்ளவருமாயிருக்கிறார்.

2. உண்மையில் தேவனுடைய குமாரனாயிருக்கிறார்.

3. தற்போது பரலோகத்தில் பிதாவாகிய தேவனுடைய சமூகத்திலிருந்து நமக்காக இடைவிடாமல் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். இதனிமித்தம், நாம் நம்முடைய வார்த்தையினாலும், வாழ்க்கையினாலும் மற்றவர்களிடம் அறிக்கை பண்ணுகிற கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளக் கூடியவர்களாயிருப்போம்.

எ. "உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்பது" என்பதின் அர்த்தம், அதை நாம் விட்டு விடாதபடிக்குப் பிடித்துக் கொண்டிருப்பது. இந்த எண்ணம் நம்மிலிருந்து போகாத படிக்கு இதை நம் மனதில் நிறுத்தி வைப்பது; இதனை ஓர் உடமையாக நாம் கைவசப்படுத்தி, நம்மிடம் தக்கவைத்துக் கொள்ளுதல் என்பவையாகும்.

2. நாம் சோதிக்கப்படும்போது நமக்காகப் பரிதபிக்கக் கூடிய பிரதான ஆசரியர் நமக்கிருப்பதால் நாம் நம்முடைய விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும் (4:15)

அ. "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நக்கிருக்கிறார்." "பரிதபித்தல்" என்பதின் அர்த்தம் நாம் பாடுபடும்போது இயேசுவும் பாடுபடுகிறார் என்பதே.

நம்முடைய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக்கொள்ளுதல்

எபிரெயர் 4:14-16

நம்மேல் இரக்கமுள்ளவராயிருக்கிறபடியால் நாம் உணருவதைப் போல கஷ்டங்களையும், பாடுகளையும் உணரக்கூடியவராக இருக்கிறார். "பலவீனம்" என்பதின் அர்த்தம், சரீரத்திலும் மனதிலும் பலம் இழத்தல்; நலிவுறுதல், நோயில் அவதியுறுதல், தேவையில் இருத்தல் போன்றவையாகும்!

ஆ. இயேசு உலகுக்கு வந்தபொழுது, அவரது தெய்வீகத்துடன் மனுஷீகமும் சேர்ந்தது. இதனிமித்தம், அவர் மனுஷனுக்குரிய எல்லா கஷ்டங்களையும், சோதனைகளையும் அனுபவித்தார்:

1. பிசாசினால் சோதிக்கப்பட்டார் (மத்தேயு *4:1-11*).

2. சரீரப்பிரகாரமாக மரித்தார் (மத்தேயு *27:50*).

3. பசியுள்ளவராயும், தாகமுள்ளவராயும் இருந்தார் (மத்தேயு *4:2;* யோவான் *19:28*).

4. சரீரத்தில் களைப்புள்ளவரானார், நித்திரையாயிருந்தார் (யோவான் *4:6;* மத்தேயு *8:24*).

5. மனதிலும் சரீரத்திலும் வளர்ந்து, முதிர்ச்சி அடைந்தார் (லூக்கா *2:52*).

6. மனிதரின் இரக்கத்தை நாடினார் (மத்தேயு *26:40*)

7. அடிக்கப்பட்டு, முள்முடி சூட்டப்பட்டு, இகழப்பட்டு, புறக்கணிக்கப்பட்டார்.

இ. எபிரெய நிருபக்காரன் இவ்விதம் எழுதுகிறார்: "எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும்" நாம் தேவையிலும், கஷ்டங்களிலும் இருக்கும் பொழுதும், தேவனுக்கு விரோதமானப் பாவஞ் செய்யும்படி சோதிக்கப்படும் பொழுதும் நாம் உணருவது போல கிறிஸ்துவும் உணர்ந்து, நமக்காக இரக்கப்படுகிறார். இது அவருக்கு சாத்தியமானது, ஏனெனில் தற்போது நாம் அனுபவித்துக் கொண்டிருப்பதைப் போல அவரும் எல்லாவிதத்திலும் பாடுகள்பட்டு, பாவத்தினால் சோதிக்கப்பட்டார்.

ஈ. "பாவமில்லாதவராயிருக்கிறார்". நமக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள ஒரே வித்தியாசம் யாதெனில், அவர் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருந்தார். கொரிந்தியருக்கு எழுதின தனது இரண்டாம் நிருபத்தில் பவுல் இவ்விதம் எழுதுகிறார்: "...பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (*2 கொரிந்தியர் 5:21;* மேலும் காண்க 1 பேதுரு *2:22;* 1 யோவான் *3:5*).

இயேசுவானவர் தம்முடைய கஷ்டங்களில் விடுவிக்கும்படியான தேவன் பேரிலுள்ள விசுவாசத்தை ஒருபோதும் இழந்து விடவுமில்லை. பாவக்கிரியைகளுக்கு உடன்படும்படியான சோதனைகளுக்கு ஒருபோதும் அவர் இடங்கொடுக்கவுமில்லை.

உ. இருப்பினும், நாம் காணும்படி எபிரெய நிருபக்காரன் விரும்புவது யாதெனில், நாம் இல்லலுற்று பாடுபடும் வேளையிலும், பாவத்திற்கு உடன்படத்தக்க விதத்தில் சோதிக்கப்படும் வேளையிலும் நம்முடைய மகா பரலோகப் பிரதான ஆசாரியராகிய இயேசு நம்மோடு கூடப் பாடுபடுகிறார்.

நம்முடைய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக்கொள்ளுதல்

எபிரெயர் 4:14-16

நாம் இவற்றை ஜெபத்தின் மூலம் பரலோகப் பிதாவுக்குக் கொண்டு செல்லும்போது, இயேசு நமக்காக மனதுருகி, பிதாவிடம் நமக்காகப் பேசுகிறார். நாம் நம்முடைய விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ளவும், அவருடைய இரட்சிப்பின் கிருபைக்கு சாட்சியாக விளங்கவும் இது நமக்குப் பெரிதும் உதவுகிறது.

3. நம்முடைய பிரதான ஆசாரியன் ஏற்ற சமயத்தில் நமக்கு சகாயஞ் செய்வதால் நாம் நம்முடைய விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளக்கூடும் (4:16)

அ. "கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்". இவ்வித நிலவரத்திலிருப்பவர்களுக்குத் தேவனுடைய இலவசமான, அளவற்ற இரக்கம் கொடுக்கப்படும் இடமே "கிருபாசனம்":

1. இவ்வுலகத்தில் கஷ்டங்களில், பாடுகளில் இருப்பவர்களுக்கு.

2. சரீரத்திலும், மனதிலும் பலவீனமானவர்களுக்கு.

3. மிகவும் சோதிக்கப்பட்டவர்கள் அல்லது பாவச்செய்கைக்கு உள்ளானவர்கள்.

ஆ. "தைரியமாய்... சேரக்கடவோம்". இதன் அர்த்தம் நீங்களாகவே நேரிடையாகவே பிதாவாகிய தேவனை அணுகலாம் என்பதும்,

அவ்விதம் அவரண்டயில் செல்லும்பொழுது எவ்விதத் தடையும் இல்லையென்பதுமாகும். மேலும் இது விளக்குவது யாதெனில், பயமின்றி இருத்தல் என்பதும், நீங்கள் கிருபாசனத்தின் அருகில் நெருங்கும்போது உங்களுடைய விண்ணப்பங்கள் கேட்கப்பட்டு, பதிலைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தைரியமாக இருத்தல் என்பதுமாகும்.

இ. "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும்கிருபையை அடையவும்". தேவனுடைய கிருபாசனத்தை நாம் நெருங்குவதற்கானக் காரணங்கள்:

1. இரக்கத்தைப் பெறுதல்--பிதாவானவர் இரக்கத்துடன் நம்மைக் கண்ணோக்குகிறார்.

2. கிருபையை அடைதல்--தேவனுடைய தெய்வீகக் கிருபையும், அவருடைய பிரியமும், மனஉருக்கமும் அளவின்றி அளிக்கப்படுகிறது.

ஈ. "ஏற்ற சமயத்தில் சகாயம்". இது ஏற்ற உதவியை; சரியான நேரத்தில் பெறும் சரியான உதவியைக் குறிக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து அவருடைய உதவியின் தேவையில் இருக்கிறோம். நாம் எதை அவரிடமிருந்து பெறுகிறோமோ அதுவே சகாயம். இதற்கான ஒரே வழி தாழ்மையோடும், தைரியத்தோடும் கிருபாசனத்தை அணுகுவதேயாகும்.

உ. இங்கே "சகாயம்" என்பதன் அர்த்தம் உதவுதல், துணை புரிதல்; இரண்டாக உடைந்து கொண்டிருக்கும் கப்பலைச் சுற்றிலும் கயிறுகளாலும், சங்கிலிகளாலும் கட்டுவதைப் போன்றது, தாங்குதல், அல்லது மீண்டும் பத்திரமாக இருக்கும்படிச் செய்தல் என்பனவாகும் (அப்போஸ்தலர் 27:17).

நம்முடைய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக்கொள்ளுதல்

எபிரெயர் 4:14-16

ஊ. உங்களுடைய தேவையின் வேளையில் தேவன் உங்களுக்கு உதவுகிறார், ஏனெனில் கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய விசுவாசத்தை நீங்கள் உறுதியாய்ப் பற்றிக் கொண்டு, முடிவுபரியந்தம் அதில் நிலைத்திருக்கும்படி அவர் விரும்புகிறார். கிறிஸ்து எப்போதும் அவருடைய சமூகத்திலிருந்து, அவரோடுகூடப் பேசி, உங்களுக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருப்பதாலும் அவர் உங்களுக்கு உதவுகிறார்.

முடிவுரை

அ. நாம் நம்முடைய விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளக் கூடும் (அதை விட்டுவிடாதபடிக்குப் பிடித்துக் கொள்தல், இந்த எண்ணத்தைத் தொடர்ந்து நம் மனதில் நிறுத்துதல்; அதை அடைந்து, அதனை ஓர் உடமையாகத் தக்கவைத்தல்). ஏனெனில்,

1. நம்முடைய பிரதான ஆசாரியர் (இயேசுகிறிஸ்து) பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, நமக்காகப் பிதாவுக்கு முன்பாகத் தொடர்ந்து பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

2. நாம் தேவையிலிருக்கும்பொழுது நம்முடைய பிரதான ஆசாரியர் நமக்காகப் பரிதபிக்கக் கூடியவராயிருக்கிறார். ஏனெனில், நம்மைப்போல அவர் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார்.

3. நம்முடைய தேவையின் வேளையில் நம்முடைய பரமபிதா நமக்கு உதவி செய்கிறார்.

ஆ. ஆதலால், தேவனுடைய கிருபாசனத்தண்டையில் தாழ்மையோடு நெருங்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் கூறப்படும் ஆலோசனை யாதெனில்:

1. கஷ்டத்திலும், பாடுகளிலும் இருப்பவர்களும்,

2. சரீரத்திலும், மனதிலும் பலவீனமுள்ளவர்களும்,

3. மிகவும் சோதிக்கப்படுபவர்களும், அல்லது சோதனைக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களும்,

தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்... அவருடைய கிருபையை அடைந்து கொள்ளுங்கள்.

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராகும்படி கிறிஸ்து தேவனாலே அழைக்கப்பட்டார்

எபிரெயர் 5:1-10

முன்னுரை

அ. இந்த வேதப்பகுதி மகாபிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், ஆரோனின் ஆசாரியத்துவத்துக்கும் இடையே உள்ள ஒப்பனையாகும். ஆரோனைப் போல இயேசுவும் தேவனுடைய காரியங்களில் மனிதனின் பிரதிநிதியாய் அழைக்கப்பட்டார்.

ஆ. இருப்பினும், இவர்கள் இருவருக்குமிடையே பெரிய வித்தியாசமுண்டு. ஆரோன் மற்றும் அவர் வழி வந்தவர்களின் ஆசாரியத்துவத்தைக் காட்டிலும், இயேசுவின் பிரதான ஆசாரியத்துவம் மேன்மையுள்ளது. காரணமென்னவெனில்,

1. இவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார்,

2. இவர் மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைக்குட்பட்டவர்.

1. பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியன் மனுஷருக்காகத் தேவகாரியங்களைப் பற்றி நியமிக்கப்படுகிறான் (5:1-4)

அ. வசனம் 1. "அன்றியும், மனுஷரில் தெரிந்து கொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காகத் தேவ காரியங்களைப் பற்றி நியமிக்கப்படுகிறான்".

"தெரிந்து கொள்ளப்படுதல்" என்பதின் பொருள் "மனிதர்மத்தியிலிருந்துதேர்ந்தெடுக்கப்படுதல் என்பதாகும்." "நியமிக்கப்படுகிறான்" என்பதின் பொருள் தேவகாரியங்களைப் பற்றிய விஷயத்தில் மனுஷரின் பிரதிநிதியாக நிரந்தரமாக அமர்த்தப்படுதல் (ஏற்படுத்தப்படுதல்) என்பதாகும்.

ஆ. ஜனங்களின் பாவங்களுக்காகப் பலிகளை செலுத்துவது பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியனின் விசேஷித்த ஊழியமாயிருந்தது. பாவம் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையேயுள்ள உறவை உடைக்கிறது. இந்த உறவை மீண்டும் புதுப்பிக்கும்படி ஜனங்களின் நிமித்தம் பிரதான ஆசாரியனால் பலிகள் செலுத்தப்பட்டன. இந்த வசனம் பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியனின் தெரிந்தெடுப்பையும்,ஊழியத்தையும்பற்றியமேலோட்டமாகும் (மேலும் காண்க எபிரெயர் 8:3; 9:9)

இ. "பாவங்களுக்காகக் காணிக்கைகளும், பலிகளும்" என்பதில், மனப்பூர்வமாகவும், கட்டளையாகவும் செலுத்தப்படும் தானியமும், மிருகமும் (இரத்தம்) அடங்கும்:

1. சர்வாங்க தகன பலி--மிருகத்தைப் பலியிடுதல்:

மனப்பூர்வமான ஆராதித்தல்; தற்செயலாய்ச் செய்த பாவத்திற்காக நிவர்த்தித்தல்; கர்த்தருக்காக அர்ப்பணித்தலும் முழுமையாக ஒப்புக் கொடுத்தலும் (லேவியராகமம் 1, 6:8-13; 8:18-21; 16:24).

2. போஜனபலி (தானியம்)--மனப்பூர்வமாக ஆராதித்தல்; தேவனுடைய நன்மைகளையும், அவர் அளிப்பவற்றையும் உணருதல்; தேவனுக்குப் பயபக்தியாயிருத்தல் (லேவியராகமம் 2; 6:14-23).

3. சமாதான பலி (அந்நியோந்நியம்)--மிருகத்தைப் பலியிடுதல்; மனப்பூர்வமாக ஆராதித்தல்; நன்றிசெலுத்துவதற்காகவும்,ஐக்கியத்துக்காகவும் (ஆசாரியர்களின் ஆகாரமும் இதில் அடங்கும்) (லேவியராகமம் 3; 7:11-34). தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போகப் பண்ணுவேன் (எசே 29:12).

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராகும்படி கிறிஸ்து தேவனாலே அழைக்கப்பட்டார்
எபிரெயர் 5:1-10

4. பாவநிவாரணபலி--மிருகத்தைப் பலி யிடுதல்; தற்செயலாய்ச் செய்த குறிப்பிட்ட பாவத்திற்கான கட்டளை; பாவத்தை அறிக்கையிடுதல்; பாவத்தை மன்னித்தல், தீட்டிலி ருந்து சுத்திகரித்தல் (லேவியராகமம் 4:1 - 5:13; 6:23-30; 8:14-17; 16:3-22).

5. குற்ற நிவாரணபலி--மிருகத்தைப் பலி யிடுதல்; அறியாமல் செய்த பாவ நிவர்த்திக்கான கட்டளை; தீட்டிலிருந்து சுத்திகரித்தல் (5:14- 6:7; 7:1-6)

ஈ. வசனம் 2. "தானும் (பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன்) பலவீனமுள்ளவனான படியினாலே, அறியாதவர்களுக்கும், நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனா யிருக்கிறான்."

1. தேவனுடைய கட்டளைகளை அறியாமலும், விளங்கிக் கொள்ளாமலும் இருப்பவர்கள் அல்லது அதைக் கவனிக்க மனதற்றவர்கள்

2. தேவனுடைய நல்வழியை விட்டு விலகினவர்களும், பின்னிட்டுச் செல்ல விரும்பினவர்களும்.

"இரங்கத்தக்கவனாயிருக்கிறான்" என்பதின் அர்த்தம், ஒருவனது ஜீவியத்தின் பலவீனத்தைக் கண்டு எரிச்சலடையாது, அதை பொறுத்துக் கொள்வது; பிறருடைய மூடத்தனத்தையும், செய்த அதே தவறை மீண்டும் மீண்டும் செய்வதையும் கண்டு உங்களுடைய கோபத்தை இழக்காமல் இருத்தல் என்பதாகும்.

உ. பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன் இப்படிப்பட்டவர்களோடு இரக்கமாக நடந்து

கொண்டு, அவர்களுடைய நிலவரத்தை உள்ளபடி புரிந்து கொண்டார் ஏனெனில், அவர்கள் தங்கள் ஜீவியத்தில் பலவீனரும், நலி ந்தவருமாயிருந்தனர். இதன் பொருள் யாதெனில், அவர் தேவனுக்கு முன்பாக நிறுத்திய இஸ்ரவேலருக்குள் இருந்த பலவீனத்தினால் இவனும் தரிப்பிக்கப்பட்டிருந்தான். முதல் பிரதான ஆசாரியனாகிய ஆரோன் வனாந்திரப் பிரயாணத்தில் குறைந்தது இரண்டு சந்தர்ப்பங்களில் அறியாமையினால் கிரியை செய்து தூரப்போயிருக்கிறான். (யாத்திராகமம் 32:1-6; எண்ணாகமம் 12:1,2).

ஊ. வசனம் 3. "அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிட வேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது." பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன் பாவமுள்ள மனிதனாயிருந்து, பாவநிவாரண நாளில் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலி செலுத்துவதற்கு முன் தன்னுடைய சொந்த பாவங்களுக்காக பலிகள் செலுத்த வேண்டியது அவசியம் என்பதை அறிந்திருந்தார் (லேவியராகமம் 16:11-15)

எ. வசனம் 4. "மேலும், ஆரோனைப் போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை." "ஒருவனும் தானாய் ஏற்படுகிறதில்லை" என்பதின் அர்த்தம், சுயமாக நியமிக்கப்பட்ட அல்லது மனுஷரால் நியமிக்கப்பட்ட பிரதான ஆசாரியர்கள் யாருமில்லை என்பதே.

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராகும்படி கிறிஸ்து தேவனாலே அழைக்கப்பட்டார்
எபிரெயர் 5:1-10

ஏற்பாட்டு பிரதான ஆசாரியனின் ஊழியம் தெய்வீக அழைப்பும், நியமனமும் பெற்றது. ஆரோனின் விஷயத்தில் இவ்விதமே நடந்தது. வருங்கால பிரதான ஆசாரியர்களை நியமிப்பதற்கான மாதிரியை அவர் ஏற்படுத்தினார் (யாத்திராகமம் 28:1-3). இது கிறிஸ்துவுக்கும் பொருந்துவதை நாம் 5,6 வசனங்களில் காண்கிறோம்.

ஏ. இதன் காரணமாகவே, பிரதான ஆசாரியனின் கடமைகளைத் தாங்களாகவே செய்யும்படி துணிந்தவர்கள் அழிவைச் சந்தித்தனர்:

1. கோராகும், அவனோடிருந்தவர்களும் (எண்ணாகமம் 16:1-11).

2. சவுல் (1 சாமுவேல் 13:8-10).

3. உசியா (2 நாளாகமம் 26:16-19).

2. கிறிஸ்து தேவனுடைய காரியங்களில் மனுஷருக்காக மெல்கிசேதேக்கின் முறைமையின்படி பிரதான ஆசாரியராக அழைக்கப்பட்டார் (5:5-10).

அ. வசனம் 5,6. "அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; ...அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்." ஆரோனைப் போல, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் பிரதான ஆசாரியனாயிருக்கும்படி பிதாவினால் நியமிக்கப்பட்டார் (யோவான் 8:54; 17:4). தேவனுடைய பிரதான ஆசாரியராயிருக்கும்படி அவர் தம்மைத்தாமே உயர்த்தவில்லை.

இந்தச் சத்தியத்திற்கு ஆதாரமாக எபிரெய நிருபக்காரன் மேசியாவைப் பற்றிய இரண்டு சங்கீதங்களை மேற்கோள் காட்டுகிறார்:

1. "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் (அதாவது, நான் இன்று உம் பிதாவானேன்)" (சங்கீதம் 2:7). கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் தேவனுடைய குமாரன் என்பதுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது அவருடைய மனுஷீக வம்ச வரலாற்றுடன் சம்பந்தப்பட்டதல்ல. பிதாவாகிய தேவன் கிறிஸ்துவைப் பிரதான ஆசாரியனாக ஏற்படுத்தினார் என்பதை மாத்திரமல்லாது, ஆரோனும், அவனுடைய சந்ததிக்கும் நியமிக்கப்பட்டிருந்த ஆசாரியத்துவத்தைக் காட்டிலும், இவருடைய ஆசாரியத்துவம் மேன்மையுள்ளதாயிருந்தது என்பதையும் இது காட்டுகிறது.

2. "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்." (சங்கீதம் 110:4).

"மெல்கிசேதேக்கின் முறைமையின்படி" என்பதை "மெல்கிசேதேக்கைப் போன்ற அதே முறைமை" என வாசிக்க வேண்டும். இதன் பொருள், தேவனுடைய பிரதான ஆசாரியரான கிறிஸ்துவின் ஊழியம் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தைப் போன்றது, அல்லது அதைப் பிரதிபலிப்பது என்பதாகும் (ஆதியாகமம் 14:18-20). எபிரெய நிருபக்காரன் இதைக் கூடுதலாக விவரித்து இவ்விதம் கூறுகிறார்: "இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ...அவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான் ... இவன் ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்.

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராகும்படி கிறிஸ்து தேவனாலே அழைக்கப்பட்டார்
எபிரெயர் 5:1-10

கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல், அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்" (எபிரெயர் 7:1,3,6,15,16).

ஆ. மெல்கிசேதேக் போன்ற அதே விதமான ஆசாரியராக கிறிஸ்து இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் மெல்கிசேதேக்:

1. ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான் (மெல்கிசேதேக் பெரியவர் என்பதைக் காண்பிக்கிறது) (எபிரெயர் 7:6,7).

2. "நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், என்றென்றைக்கும் ஆசாரியனாயிருந்தார்".

3. மனுஷீக வம்ச வரலாற்றின்படியான ஆசாரியத்துவம் அற்றவராயிருந்தார்.

4. கிறிஸ்து "அழியாத (நித்திய) ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்" (அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தார் - அப்போஸ்தலர் 2:31; சங்கீதம் 16:10; ரோமர் 1:4).

இ. இவைகள் அனைத்தும் ஆரோன் மற்றும் அவனுடைய சந்ததியாரின் ஆசாரியத்துவத்தை விடக் கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மேன்மை வாய்ந்தது என்பதைப் புலப்படுத்தும் கூடுதல் ஆதாரங்களாகும்.

மேலும், ஆரோனின் ஆசாரியத்துவம் கிறிஸ்துவினால் மாற்றப்பட்டதுபோல, கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பூரணப்படுத்தப்படவோ அல்லது மாற்றப்படவோ வேண்டிய அவசியமில்லை என்பதையும் மேற்கண்ட குறிப்புகள் புலப்படுத்துகின்றன. (எபிரெயர் 7:18-22).

ஈ. வசனம் 7-9. கிறிஸ்து என்றென்றும் நம்முடைய பிரதான ஆசாரியராயிருப்பதற்கு முற்றிலும் தகுதியுள்ளவர் என்பதையும்; ஆரோனின் பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் இது மேன்மையுள்ளது என்பதையும் காண்பிப்பதற்கான கூடுதல் தகவல்களை எபிரெய நிருபக்காரன் நமக்களிக்கிறார்:

1. வசனம் 7. இயேசு மாம்சத்திலிருந்த நாட்களில் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்தார். இந்த வசனத்தில், தேவஜனங்களின் நிமித்தமாக மகா பிரதான ஆசாரியராகக் கிறிஸ்துவைத் தகுதிப்படுத்தும் அவருடைய விண்ணப்பங்களும், வேண்டுதல்களும் (பரிந்துபேசுதல்) முதற்கண் வலியுறுத்தப்படுகின்றன. இங்கே, "விண்ணப்பங்கள்" என்பதின் பொருள் கேட்டல், மன்றாடல் என்பனவாகும். "வேண்டுதல்கள்" என்பதற்கு, தேவைகளைச் சந்திப்பதற்குப் போதுமானதைக் காட்டிலும் அதிகமாக, ஏற்ற சமயத்தில் சகாயத்தைப் பெற்றுக் கொள்ளும்படி பிதாவாகிய தேவனிடம் கிட்டிச் சேருதல் என்பது பொருளாகும்.

2. வசனம் 7. "பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும்." பலத்த சத்தமும், கண்ணீரும், கெத்சமெனே தோட்டத்தில் இரத்த வியர்வை தரையிலே விழ கிறிஸ்து ஜெபித்த ஜெபத்தைக் குறிப்பிடுகின்றன. நம்முடைய தேவையை சந்திப்பதற்குப் போதுமானதை விட அதிகமாக, ஏற்ற சமயத்தில் நமக்காக நம்முடைய பிரதான ஆசாரியர் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள், வேண்டுதல்களின் உச்ச நிலையை இது வெளிப்படுத்துகிறது (மத்தேயு 26:36-46).

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராகும்படி கிறிஸ்து தேவனாலே அழைக்கப்பட்டார்
எபிரெயர் 5:1-10

வசனம் 7. "தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு". கெத்சமெனே தோட்டத்தில் கிறிஸ்து பிதாவின் சித்தத்துக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தப்படியால் அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது. (மத்தேயு 26:39,42). பொல்லாத மனுஷரின் கைகளினால் பாடுபடவும், கல்வாரியில் சிலுவையிலறையப்படவும் பிதாவின் சித்தத்துக்கென்று அவர் தம்மை பயபக்தியுடன் ஒப்புக்கொடுத்தபடியால் நமக்காக அவர் ஏறெடுக்கும் ஜெபங்களும் கேட்கப்படும் என்பது தெளிவு.

4. வசனம் 8."அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு." கிறிஸ்து இப்பூவுலகில் வாழ்ந்த நாட்களில் அவர் முழுக்க முழுக்க மனிதனாகவும், அதே வேளையில் தெய்வமாகவும் இருந்தார் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்' மற்றெல்லா மனிதர்களையும் போல அவர் கீழ்ப்படியாமலிருக்கவில்லை. அவர் பாவம் அறியாதவராயிருந்தார் (2 கொரிந்தியர் 5:21). ஆனால் அவர் மனிதனாக, மற்ற எல்லா மனுஷரையும் போல அறிவிலும், வளர்த்தியிலும், பாடுகளின் மூலம் கீழ்ப்படிதலிலும் விருத்தியடைந்தார். (பிலிப்பியர் 2:6-8; லூக்கா 2:52; நீதிமொழிகள் 3:11,12; எபிரெயர் 12:2-4,7).

5. வசனம் 9. "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக்காரணராகி,"பூரணரானார் என்பதின் அர்த்தம் முடிவுறச்செய்தல், முழுமையாகச் செய்தல், நிறைவேற்றுதல் என்பனவாகும்.

கிறிஸ்து மிகுந்த சோதனைகளையும், பாடுகளையும் சகிக்க வேண்டியதிருந்த போதிலும் கூட, தமது பிதாவின் சித்தத்தை முழுவதுமாகச் செய்து முடித்தார். அவர் கீழ்ப்படிந்து கல்வாரியில் மனுக்குலத்தின் பாவங்களுக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். இதன் விளைவாக என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் பூரணத்தை அவர் ஏற்படுத்தினார் (மேலும் காண்க எபிரெயர் 2:10; 7:28).

உ. இவை எல்லாவற்றின் நிமித்தம் கிறிஸ்து தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்காக, நித்திய இரட்சிப்பின் (ஆவியின்படி மீட்டு, தேவனோடுள்ள முடிவில்லாத பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு வருதல்) அதிபதியாக (ஏதோ ஒரு சம்பவத்தைத் துவக்குகிறவர்) மாறியிருக்கிறார். "கீழ்ப்படிகிறவர்கள்" என்பதின் அர்த்தம்:

1. கவனமாய் அவரைக் கவனிக்கிறவர்கள்.

2. தொடர்ந்து செவிசாய்த்து, அவருடைய கட்டளைகளுக்கும் ஏற்ப நடக்கிறவர்கள்.

ஊ. வசனம் 10. "மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்". (தேவனுடைய குமாரனாகிய) கிறிஸ்து பெரும் சோதனைகளுக்கும், பாடுகளுக்கும் மத்தியில் அவருடைய பிதாவின் சித்தத்தை முற்றிலும் நிறைவேற்றி, பாவமற்றவராக இருந்தபடியால், அவருடைய பிதாவின் ஜனங்களுக்காக என்றென்றும் பிரதான ஆசாரியராயிருக்கும் படி நாமம் தரிக்கப்பட்டார். இது ஆரோனின் ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் உயர்ந்த புதிய ஆசாரியத்துவ ஒழுங்காகும்.

முடிவுரை

அ. ஆரோனின் பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தையும், கிறிஸ்துவையும் ஒப்பிடும்பொழுது, கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மிகவும் மேன்மையுள்ளது என்பதற்கு ஐயமில்லை:

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியராகும்படி கிறிஸ்து தேவனாலே அழைக்கப்பட்டார்
எபிரெயர் 5:1-10

கிறிஸ்து ஆரோனைப் போல தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதான ஆசாரியராயிருக்கும்படி பிதாவாகிய தேவனால் நியமிக்கப்பட்டார்.

2. ஜனங்களின் பாவங்களுக்காக ஆரோன் பலிசெலுத்துவதற்கு முன் தன்னுடைய சொந்தபாவங்களுக்காகப் பலிகளைச் செலுத்தியது போல கிறிஸ்து பலி செலுத்த வேண்டியதில்லை.

3. கிறிஸ்து ஆரோனைப் போலிராமல், மெல்கிசேதேக்கைப் போன்ற அதே விதமான ஆசாரியராயிருந்தார். மெல்கிசேதேக்:

அ. கோத்திரப் பிதாவாகிய ஆபிரகாமை விட மேன்மையுள்ளவர்.

ஆ. நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், என்றென்றைக்கும் ஆசாரியனாயிருந்தார்.

இ. மனுஷீக வம்ச வரலாறு அடிப்படையில் நியமிக்கப்படாதவர்.

4. கிறிஸ்து ஆரோனைப் போலல்லாது, அழியாத நித்திய ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்.

ஆ. கிறிஸ்துவைத் தேவனுடைய பிரதான ஆசாரியனாகத் தகுதிப்படுத்தும் இதர உண்மைகளாவன:

1. பிதாவுக்கு எத்தகைய ஊக்கத்துடன் ஜெபங்களையும், விண்ணப்பங்களையும் ஏறெடுக்க வேண்டுமென்பதை கிறிஸ்து அறிந்திருக்கிறார்.

2. கிறிஸ்து எப்போதும் பிதாவிடம் பயபக்தியாயிருந்து, எப்போதும் அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறபடியால், பிதாவிடம் அவர் ஏறெடுக்கும் விண்ணப்பங்களும், மன்றாட்டுகளும் கேட்கப்பட்டு, பதில் அளிக்கப்படுகிறது.

இ. இவை அனைத்தும் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய பிரதான ஆசாரியராக்குகிறது. மேலும், அவரையே கவனித்து, தொடர்ந்து அவருக்குச் செவிசாய்த்து, அவருடைய கட்டளைகளுக்கும், அதிகாரத்துக்கும் ஏற்ப நடக்கிறவர்களுக்காக அவர் நித்திய இரட்சிப்பின் அதிபதியாயிருக்கிறார்.

ஆவிக்குரிய முதிர்ச்சி அடைதல்
எபிரெயர் 5:11-6:3

முன்னுரை

அ. இதற்கு முந்திய வேதபகுதியில், ஆரோன் மற்றும் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களைக் காட்டிலும் பிரதான ஆசாரியராகிய இயேசு மேன்மையுள்ளவர் என்பது விளக்கப்பட்டது.

ஆ. இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான நித்திய ஆசாரியரானார் என எபிரெய நிருபக்காரன் விவரித்ததை முடிப்பதற்கு முன்னர், அவர் இச்சத்தியத்தைக் கேட்பவர்கள் ஆவிக்குரிய சோம்பலும், மந்தமுமுள்ளவர்களாய் இருப்பதை எச்சரிக்க வேண்டியதின் அவசியத்தை உணருகிறார்.

இ. (எபிரெயர் 7:1 முதல் மீண்டும்) ஆக்கியோன் போதிக்கவிருப்பதை அவர்கள் கிரகித்துக் கொள்ள வேண்டுமானால், பின்வருபவற்றுக்கு அவர்கள் மனப்பூர்வமாய் இருக்க வேண்டும்:

1. கிறிஸ்துவிலுள்ள அவர்களுடைய விசுவாசத்தைப் பற்றிய மூல உபதேசங்களை விட்டு விட வேண்டும்.

2. நீதியைப் பற்றிய அவர்களுடைய அறிவில் பூரண வயதுள்ளவர்களாகும்படி முன்னேற வேண்டும். இந்த அறிவை அவர்களுடைய அனுதின வாழ்க்கையில் பயிற்சி செய்யவும் வேண்டும்.

1. விசுவாசிகளில் அநேகர் ஆவிக்குரிய முதிர்ச்சி அற்றவர்களாக உள்ளனர் (5:11-14).

அ. வசனம் 11. "இந்த மெல்கிசேதேக்கைப் பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம்". இங்கே "மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான" கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தைப் பற்றி ஆக்கியோன் விவரித்துக் கொண்டு வருகிறார். இதைக் குறித்து மீண்டும் எபிரெயர் 7:1-லிருந்து ஆக்கியோன் விவரிப்பார்.

ஆ. வசனம்11. "நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப் பண்ணுகிறது அரிதாயிருக்கும்". "விளங்கப் பண்ணுகிறது அரிதாயிருக்கும்" என்பது ஆக்கியோனைப் பற்றியதல்ல. அவர் இந்த விஷயத்தை நன்கறிந்திருக்கிறார், மற்றவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் அதை விளங்கப்பண்ணவும் அவரால் கூடும் ஆனால் ஆவிக்குரிய முதிர்ச்சி அற்றவர்களுக்கு இதனை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில், மிகவும் விளக்கமாக, கூடுதலான எடுத்துக்காட்டுகளுடன், மிக நுணுக்கமாகப் பகுத்து விளக்க வேண்டியதாயுள்ளது. உண்மையில், சத்தியங்களைக் கேட்கிறவர்கள் அதன் யதார்த்தத்தைக் கிரகித்துக் கொள்ளக் கூடிய வகையில் முதிர்ச்சியடையும்வரை அநேக ஆவிக்குரிய சத்தியங்களைப் போதிப்பதைத் தாமதப்படுத்த வேண்டியது அத்தியாவசியமே.

இ. "மந்தமுள்ளவர்கள்" என்பது ஆவிக்குரிய அக்கறையின்றி, சோம்பலுள்ளவர்களாயிருப்பார்கள் என்பதாகும். எபிரெயர் நிருபத்தைப் பெற்றுக் கொள்ளவிருந்தவர்கள், கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் பற்றிய முழுமையான விளக்கத்தை விரும்பாமல் (அல்லது கவனிப்பதற்கு மறுத்தவர்களாக) ஆவியின்படியும் மனதின்படியும் சோம்பலுற்று, மந்தமுள்ளவர்களும், புத்தி பேதலித்தவர்களைப்போலவும் இருந்திருக்கக்கூடும். இதன்விளைவாக கிறிஸ்துவை விட்டுத் தூரம் போகும்படியான மனதுடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் அசதியுள்ளவர்களாகவும் மாறிப்போனார்கள் (காண்க 6:11).

ஆவிக்குரிய முதிர்ச்சி அடைதல் எபிரெயர் 5:11-6:3

ஈ. வசனம் 12" காலத்தைப் பார்த்தால்,போதகராயிருக் வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டிய தாயிருக்கிறது.இந்நிருபத்தை வாசிக்கவிருப்பமுள்ளவர்கள் "மந்தமுள்ளவர்கள்" என்பதற்கான விளக்கத்தை ஆக்கியோன் விவரிக்கத் துவக்குகிறார்.

உ. அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை அறிவைப் பெற்று, அதை மற்றவர்களுக்கும் போதிக்கக்கூடிய அளவுக்கு நீண்டகாலமாகக் கிறிஸ்தவர்களாக இருந்திருக்கின்றனர். இதற்கு மாறாக, கிறிஸ்தவ விசுவாசத்தின் (அ, ஆ-வைப் போன்ற) மூல உபதேசங்களை மீண்டும் அவர்களுக்குப் போதிக்க வேண்டிய அளவுக்கு ஆவிக்குரிய முதிர்ச்சி அற்றவர்களாக இருந்தனர் (காண்க 6:1,2).

ஊ. ஆவிக்குரிய முதிர்ச்சியடையாதவர்களுக்குப் போதிக்கும் முதிர்ச்சியற்ற விசுவாசிகள் இன்றும் பல உள்ளூர் சபைகளில் இருக்கிறார்கள். இது அநேகருடைய குழப்பத்துக்கும், சமுதாய ஒருமைப்பாட்டு இழப்புக்கும், சபையில் நிலைத்திருக்க வேண்டிய அநேகர் வழிவிலகப் போவதற்கும் வழிகோலுகிறது' எத்தனை பரிதாபமான நிலை இது' சரியான விதத்தில் பயிற்சிவிக்கப்படாத மேய்ப்பர்களும், போதகர்களும் பொறுப்பில் இருப்பதே இதன் முக்கிய காரணமாகும்.

எ. இதன் பொருட்டே பவுல் இவ்விதம் எச்சரிக்கிறார்: "ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே." (1 தீமோத்தேயு 5:22).

பயிற்சியும், முதிர்ச்சியும் இல்லாத விசுவாசிகள் அதிகாரத்திலோ அல்லது, மற்றவர்கள் பின்பற்றக்கூடிய மாதிரிகளாக வாழ்ந்து போதிக்கக் கூடிய இடத்திலோ வைக்கப்படக் கூடாது.

ஏ. வசனம் 12. "நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்." இங்கே, "பால்" கிறிஸ்தவ விசுவாசத்தின் மூல உபதேசத்தையும், "பலமான ஆகாரம்" நீதியின் வசனத்திலும், கிறிஸ்துவைப் பற்றிய (மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கும் கிறிஸ்து) பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களிலும் உள்ள கூடுதல் அறிவையும் காண்பிக்கிறது. "நீங்கள்" என்பது தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டிய நிலையில் ஆவிக்குரிய குழந்தைகளாக இருக்கும் நீண்ட கால விசுவாசிகளைக் குறிக்கிறது (1 கொரிந்தியர் 3:1,2; 14:20; எபேசியர் 4:13-15; 1 பேதுரு 2:2)

ஐ. வசனம் 13. "பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிற படியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனா யிருக்கிறான்." ஒப்புமை தொடர்கிறது. கிறிஸ்துவ விசுவாசத்தின் ("அ"னா, "ஆ"வன்னா போன்ற மூல உபதேசங்களைக் கற்பிக்க வேண்டியதில் அவசியத்திலிருப்பவர்கள் நீதியைப் பற்றிய வசனத்தில் (குற்றமின்மை, பரிசுத்தம், தேவனோடு சரியாயிருத்தல்) பழக்கமில்லாதவர் களாயிருக்கிறார்கள். மேலும் இவர்கள்

1. நீதியைப் பற்றிய சத்தியத்தை உணராமலும், அதைப் பற்றிக் கொள்ளாமலும்,

2. அனுதின வாழ்க்கையில் அதை சேர்த்துக் கொள்ளாமலும் இருக்கிறார்கள்.

ஒ. வசனம்14. "பலமான ஆகாரமானது ... பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்".

ஆவிக்குரிய முதிர்ச்சி அடைதல்
எபிரெயர் 5:11-6:3

மிகவும் முதிர்ச்சியடைந்த விசுவாசிகளுக்கு மட்டுமே நீதியைப் பற்றிய பூரண உபதேசம் போதனை அவசியம். உண்மையில், ஆவிக்குரிய முதிர்ச்சி உள்ளவர்களுக்கே பலமான ஆவிக்குரிய ஆகாரத்திற்கான வாஞ்சை இருக்கும். அவர்கள் இருக்குமிடத்தில் உகந்த ஆகாரத்தினால் போஷிக்கப்படாவிட்டால், போஷாக்குள்ள இடத்திற்கு அவர்கள் போய் விடுவார்கள் (போகத்தான் வேண்டும்)!

ஓ. வசனம் 14. "நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானாந்திரியங்களையுடையவர்கள்". நீதியின் வசனத்தில் பழக்கமும், அனுபவமும் உள்ளவர்கள் நன்மை எது, தீமை எது எனப் பகுத்தறியக் கூடியவர்களாயிருக்கிறார்கள் (வித்தியாசத்தை அறிகிறார்கள்). இதன் காரணமாக தேவனுக்குப் பிரியமான ஜீவியம் செய்யக் கூடும். முதிர்ச்சியற்ற விசுவாசிகளும் இதனைக் கடைப்பிடித்து, நீதியைப் பற்றிய அறிவில் அனுபவமடைந்து, மூல உபதேசங்களை விட்டு, பூரணத்திற்குக் கடந்து போகக் கூடும்.

2. தேவனுடைய உதவியினால் நாம் ஆவிக்குரிய முதிர்ச்சியை அடையக் கூடும். (6:1-3)

அ. வசனம் 2. "கிறிஸ்துவைப் பற்றிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும் படி கடந்து போவோமாக". ஆக்கியோன் தனது வாசகர்களுக்கு முன் ஓர் சவாலை வைக்கிறார். இதற்கு முன் "மூல உபதேசத்தின்" பட்டியலை வரிசைப்படுத்துகிறார் (வசனம் 1,2) இவை கிறிஸ்துவ விசுவாசத்தின் மூல உபதேசங்களாகும். "பூரணராகும் படி கடந்து போவோமாக" என்பதின் பொருள்.

1. கிறிஸ்துவ விசுவாசத்தின் உண்மைகளையும், மேன்மையையும் ஆழமாகக் கிரகித்துக் கொள்ளுதல்.

2. நம்முடைய ஜீவியத்தில் கிறிஸ்துவை மென்மேலும் பிரதிபலித்தல் (2 கொரிந்தியர் 3:18; 2 பேதுரு 1:5-7; ரோமர் 5:3). நம்முடைய கிறிஸ்துவ விசுவாசத்தின் அறிவிலும், கிறிஸ்துவோடு நடப்பதிலும் முதிர்ச்சியடைய வேண்டும். நாம் இதைப் பின்தொடர்ந்து, நேரம் செலவழித்து, முயற்சித்து, இதை வாழ்க்கையின் முதன்மையாக்கிக் கொள்ளும்படி நம் இருதயங்களில் தீர்மானிக்க வேண்டும் (எபிரெயர் 3:13; 10:25; அப்போஸ்தலர் 2:42).

ஆ. வசனம் 1,2. கிறிஸ்துவத்தின் மூல உபதேசங்களாக ஆதிச் சபை கொண்டிருந்தவைகளை நாம் இந்த வசனங்களில் காண்கிறோம்:

1. "செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்"--மனந்திரும்புதல் இருதயத்தின் நிலவரமாகும். ஒருவன் தான் செய்த பாவங்களுக்காகத் தனிப்பட்ட விதத்தில் மனஸ்தாபப்பட்டு, இயேசுவை கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்று, மனதில் மாறுதல் உண்டாகும்பொழுது மனந்திரும்புகிறான். தான் செய்த பாவங்களுக்காகத் துக்கப்பட்டு, பாவமன்னிப்பைப் பெறுவதின் தேவையை உணர்ந்து, கிறிஸ்துவின் மூலம் சுத்திகரிக்கப்படவும் வேண்டும். மனந்திரும்புதல், கிறிஸ்து, யோவான் ஸ்நானன், பன்னிரெண்டு அப்போஸ்தலர், பேதுரு, பவுல் ஆகியோரால் பிரசங்கிக்கப்பட்டது ஆகும். "செத்த கிரியை" என்பது, ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்கி, தேவனிடமிருந்து பிரித்து, நரகத்தில் பங்கடையச் செய்யும் பாவக் கிரியைகள் என்பதாகும் (ரோமர் 6:23). இரட்சிக்கப்படும்படிக்கு பழைய ஏற்பாட்டு பிரமாணங்களையும், சடங்காச்சாரங்களையும் கைக்கொள்வதும் பாவக்கிரியைகளே. நியாயப்பிரமாணம் மரணத்திற்குள்ளாக மட்டுமே தீர்த்தது (ரோமர் 3:20; 7:7,9; கலாத்தியர் 5:4). இதற்கு மீட்கும்படியான தன்மை இருக்கவில்லை.

ஆவிக்குரிய
முதிர்ச்சி அடைதல்
எபிரெயர் 5:11-6:3

2. "தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்"-- பவுல் இவ்விதம் கூறுகிறார்: "விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி (தேவனோடு சரியாயிருத்தல் விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" (ரோமர் 1:17; மேலும் காண்க 3:21,22,28,30;4:3). சுவிசேஷத்தின் செய்தியைக் கேட்டு விசுவாசித்து, பாவத்திலிருந்து கிறிஸ்துவினிடமாகத் திரும்ப வேண்டுமென்று இருதயத்தில் தீர்மானிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படும் தேனுடைய ஈவு இரட்சிப்புக்கான விசுவாசம் ஆகும். இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது தேவனால் அருளப்படும் திறன் ஆகும் (ரோமர் 10:14,15,17; எபேசியர் 2:8).

3. "ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்"-- "ஸ்நானங்கள்" என்பதற்கு "சரீரத்தை சுத்திகரிக்கும் சடங்கு" என்பது பொருளாகும். ஆதலால், இது புதிய ஏற்பாட்டு தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டு விசுவாசிக்கு, கிறிஸ்துவின் பலியின் இரத்தத்தினால் விசுவாசத்தின் மூலமாய் பாவங்களும், குற்றங்களும் கழுவப்பட்டதற்கான வெளிப்படையான அறிக்கையாயிரு க்கிறது. கிறிஸ்தவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திருத்துவரோடுள்ள ஐக்கியத்துக்குள்ளும், அவரின் ஆளுகையின் கீழும் கொண்டு வரப்படுவதற்கான அடையாளமாயிருக்கிறது. எனவே, இது மனந்திரும்புதலையும், கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தையும் தொடர்ந்து வரும் அனுபவமாகும் (மத்தேயு 28:19,20; மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38; ரோமர் 10:9,10; மேலும் காண்க ரோமர் 6:3-13).

யோவான் ஸ்நானனின் ஞானஸ்நானத்துக்கும், கழுவுவதின் மூலம் சுத்திகரிக்கும் யூதரின் சடாங்காச்சாரங் களுக்கும், கிறிஸ்தவ ஞானஸ்நானத்துக்கும் வித்தியாசங் களுண்டு (அப்போஸ்தலர் 18:24-26; 19:3-5; லேவியராகமம் அதிகாரங்கள் 14-17). ஸ்நானங்களுக்கடுத்த உபதேசத்தில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் அடங்கும் (லூக்கா 24:48; யோவான் 1:33; அப்போஸ்தலர் 1:4,5; 2:1-4; 8:17; 9:17; 10:44-46; 19:2,6)4. "கைகளை வைக்குதல்"--பழைய ஏற்பாட்டில் தலைவர்களை நியமித்தல், லேவியரின் சடங்குகள் ஆகிய இரண்டிலும் இந்தப் பழக்கம் வழக்கத்திலிருந்தது (எண்ணாகமம் 8:10; 27:18,23; உபாகமம் 34:9; லேவியராகமம் 1:4; 3:2; 4:4). புதிய ஏற்பாட்டில் கீழ்க்கண்ட இரண்டு காரணங்களுக்காக கைகள் வைக்கப்பட்டன:

அ. தெய்வீக சுகத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தவர்களின் விசுவாசத்தைக் கட்டியெழுப்பி, அவர்களை உற்சாகப்படுத்தும் படிக்கும் (மாற்கு 16:18; லூக்கா 4:40; அப்போஸ்தலர் 9:12,17; 28:8; யாக்கோபு 5:14), பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெறவேண்டியவர்களுக்காகவும் (அப்போஸ்தலர் 17,18; 9:17; 19:6).

மூப்பராகவும் (அப்போஸ்தலர் 6:6), போதகராகவும் (1 தீமோத்தேயு 5:22); அப்போஸ்தலராகவும் (அப்போஸ்தலர் 13:3; 1 தீமோத்தேயு 4:14; 2 தீமோத்தேயு 1:6) ஏற்படுத்துகிறவர்களை அங்கீகரிக்கும்படிக்கும், உற்று நோக்குவோமானால் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் "கைகளை வைக்குதல்" ஒரே காரணத்திற்காகவே!

5. "மரித்தோரின் உயிர்த்தெழுதல்" -- ஏறக்குறைய தன்னுடைய எல்லா நிருபங்களிலும் பவுல் இதைப் பற்றி ஓரளவுக்காவது எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆவிக்குரிய முதிர்ச்சி அடைதல்
எபிரெயர் 5:11-6:3

இதைப் பற்றிய முக்கிய போதனைகள் தெசலோனிக்கேயருக்கும், கொரிந்தியருக்கும் எழுதிய முதல் நிருபங்களில் இடம் பெற்றுள்ளன (1 தெசலோனிக்கேயர் 4:16,17; 1 கொரிந்தியர் 15:42-44;49,51,52; மேலும் காண்க ரோமர் 8:11). கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் ஆவிகள் கிறிஸ்துவோடு கூட பரலோகத்தில் இருக்கின்றன (2 கொரிந்தியர் 5:6; பிலிப்பியர் 1:22,23) சபை எடுத்துக்கொள்ளப்படும்போது அவர்கள் கிறிஸ்துவோடு வருவார்கள் (1 தெசலோனிக்கேயர் 3:11; 4:14). அவர்கள் உயிர்ந்தெழுந்து, மகிமையுள்ள சரீரத்தில் மத்திய ஆகாயத்தில் அவரைச் சந்திப்பார்கள். சபை எடுத்துக்கொள்ளப்படும்போது உயிரோடிருக்கும் நம்முடைய சரீரமும் மறுரூபமடைந்து, மகிமையடையும். அதன் பின் நாமும் ஆவியிலும், சரீரத்தில் மத்திய ஆகாயத்தில் கிறிஸ்துவோடு கூட எடுத்துக் கொள்ளப்பட்டு அவரைச் சந்திப்போம்.

6. "நித்திய நியாயத்தீர்ப்பு"-- நித்திய நியாயத்தீர்ப்பு என்பது நித்திய நரக அக்கினியைக் குறிக்கிறது. எல்லா காலங்களிலும் இரட்சிக்கப்படாதவர்களாய் மரித்தவர்கள் எல்லாரும் "தேவனுடைய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின்" போது உயிர்த்தெழும்புவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15; 21:8). அவர்களுடைய மரணம் முதல் அவர்கள் இருந்ததான வாதிக்கப்படும் பாதாளத்திலிருந்து (ஹேடீஸ்) அவர்களுடைய ஆவிகளுடன் இணைந்து விடுவார்கள். (லூக்கா 16:19-31). அவர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படாததால், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காகவும், முரட்டாட்டங்களுக்காகவும் நியாயந் தீர்க்கப்பட்டு, நரக அக்கினியில் தள்ளப்பட்டு (சரீரமும், ஆவியும்), என்றென்றுமாக தேவனுடைய சமூகத்தை விட்டு அகன்று போவார்கள் (மத்தேயு 10:28; 25:46; 2 தெசலோனிக்கேயர் 1:9). சாத்தான், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி ஆகியோரின் நித்திய வாசஸ்தலமும் இதுவே. (வெளிப்படுத்தின விசேஷம் 20:7-10).

இ. வசனம் 3. "தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்". நாம் கிறிஸ்துவத்தின் மூல உபதேசங்களை விட்டு, பூரணராகும்படி கடந்து போவதைக் காண்பிக்கிறது. "தேவனுக்குச் சித்தமானால்" என்பதின் பொருள், தங்களுடைய விசுவாசத்தில் ஜனங்கள் முன்னேறி, முதிர்ச்சியடைய வேண்டுமென்பதே தேவனுடைய வாஞ்சையாயிருக்கிறது என்பதில் எவ்வளவும் ஐயமில்லை என்பதாகும். பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையின்றி இது சாத்தியமில்லை என்பதும் அறியலாகிறது. தம்முடைய ஜனங்களின் ஜீவியத்தில் இதைச் செயல்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆதலால், பூரண வயதுள்ளவர்களாய் மாறும்படியான வழிமுறைகளைத் தொடரும்படி தங்கள் இருதயங்களில் தீர்மானிப்பவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் தம்முடைய பகுதியிலான கிரியை நடப்பிப்பார்.

முடிவுரை

அ. விசுவாசிகளில் அநேகர் பல்வேறு காரணங்களினால் ஆவிக்குரிய முதிர்ச்சி அற்றவர்களாகவே உள்ளனர். இருப்பினும், இதன் முக்கியமான காரணம் ஆவிக்குரிய சோம்பலும், அசதியுமேயாகும்.

ஆ. இதன் காரணமாக அவர்கள்,

1. சபையின் மூல உபதேசங்கள், கிறிஸ்துவத்தின் ஆரம்ப போதனைகள் ஆகியவற்றை கடந்து முன்னேற முடியாமலுள்ளனர்.

ஆவிக்குரிய முதிர்ச்சி அடைதல்
எபிரெயர் 5:11-6:3

2. நீதியைப் பற்றிய போதனை, நன்மை தீமையின்னதென்று பகுத்தறிதல் ஆகியவற்றில் பழக்கமற்றவர்களாக உள்ளனர்.

இ. இந்நிலை அநேகர் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை விட்டு விலகி, தங்களுடைய பழைய வாழ்க்கைக்கும், பழைய வழிகளுக்கும் செல்லும்படி வழிகோலுகிறது. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்பி கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து போகிறார்கள் (கலாத்தியர் 5:4)

ஈ. ஆதலால், கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆரம்ப போதனைகளை விட்டுக் கடந்து, பூரணராகும்படிக்கும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய இருதயங்களில் தீர்மானிப்போமாக! நம்முடைய நேரத்தையும், முயற்சியையும் இதற்காகவே செலவிடுவோம். நம் வாழ்க்கையில் இதற்கு முக்கியத்துவம் கொடுப்போம். நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் உணர்ந்து, புரிந்து கொண்டு, நன்மையானதை நம் அன்றாட வாழ்வில் பின்பற்றுவோம்! நம் ஆவிக்குரிய வாழ்வின் ஆதாரம் அதுவே!

பிரதான ஆசாரியருடைய ஊழியத்தின் மேன்மையும், இயேசு கிறிஸ்துவால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையும்

எபிரெயர் 8:1-13

முன்னுரை

அ. கிறிஸ்துவை பிரதான ஆசாரயராக எபிரெய நிருபக்காரன் விளங்கப் பண்ணியிருக்கிறார். (1) நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் (2) வம்ச வரலாறும் இல்லாத மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்தை விவரித்து முடித்திருக்கிறார். மேலும், கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியத்தையும் விவரித்திருக்கிறார்:

1. தேர்ந்தெடுப்பும், நியமனமும் ஆணையினால் உறுதிப்பட்டுள்ளது.

2. தெய்வீகக் குமாரத்துவத்திலும், தனிப்பட்ட மேன்மையிலும், கீழ்ப்படிதலின் ஜீவியத்திலும், ஊக்கமான ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் அஸ்திபாரமிடப்பட்டுள்ளது.

3. அழிவில்லாத ஜீவனை அடிப்படையாகக் கொண்டது.

4. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், தூதர்கள், மோசே, ஆபிரகாம் குறிப்பாக, ஆரோனின் ஆசாரியத்துவம் ஆகியவற்றைக் காட்டிலும் மேன்மையுள்ளது.

5. பரிசுத்தமானது, சொந்தப் பாவங்களுக்காக வேறெந்த பலியும் தேவையில்லை.

ஆ. பரலோகத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்துக்கு நிழலாய் அல்லது சாயலாய் இருக்கிற மனுஷரால் உண்டாக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியஞ் செய்யும் பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியனுக்கு, மெய்யான பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியஞ் செய்யும் பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவை ஒப்பிட்டு விவரிக்க ஆரம்பிக்கிறார். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே கிறிஸ்து உட்கார்ந்திருக்கிறார் எனக் கூறி தனது விளக்கத்தை அவர் துவக்குகிறார்.

இ. மனுக்குலத்தோடு தேவன் செய்த பழைய, புதிய உடன்படிக்கைகளையும் ஆக்கியோன் ஒப்பிட்டு விளக்குகிறார். நாள் பட்டதும், உருவழிந்து போகக் காலம் சமீபத்திருக்கிறதுமான பழைய உடன்படிக்கைக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டப் புதிய உடன்படிக்கைக்கு கிறிஸ்து மத்தியஸ்தராயிருக்கிறார் என விளக்குகிறார்.

1. மெய்யான, பரலோகக் கூடாரத்தில் கிறிஸ்து ஊழியஞ் செய்கிறார் (8:1,2)

அ. வசனம் 1,2. "(இவ்விதமான) பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு". நமக்கிருக்கும் பிரதான ஆசாரியர் கிறிஸ்துவே. இவர்:

1. மெல்கிசேதேக்கைப் போன்ற அதே பிரதான ஆசாரியராக ஓர் ஆணையின் மூலம் பிதாவாகிய தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்:

அ. மரணம் அவருடைய ஊழியத்தைத் தடை செய்ய முடியாதபடி என்றென்றுமாக நிலைத்திருக்கிறார்.

ஆ. தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்

இ. வம்ச வரலாற்றின் அடிப்படையிலல்ல, அழியாத ஜீவனின் வல்லமைப்படி ஆசாரியராயிருக்கிறார்.

பிரதான ஆசாரியருடைய ஊழியத்தின் மேன்மையும், இயேசு கிறிஸ்துவால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையும்
எபிரெயர் 8:1-13

2. கிறிஸ்து பாவமற்றவராயிருந்தார், சொந்தப் பாவங்களுக்காக அவர் பலியிட வேண்டிய அவசியமிருக்க வில்லை (7:11-28).

அ. கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, மெய்யான பரலோகக் கூடாரத்தில் ஊழியஞ் செய்வதால், ஆரோனின் ஆசாரியத்துவத்தைக் காட்டிலும், கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மேன்மை உள்ளதாயிருக்கிறது:

ஆ. வசனம் 1. "பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்". இந்தக் குறிப்பு ஏற்கனவே முதலாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. (1:3; மேலும் காண்க 10:12; 12:2). உட்கார்ந்தார் என்பது கிறிஸ்துவின் வேலை முடிவடைந்ததைச் சுட்டிக் காட்டுகிறது (சங்கீதம் 110:1)அ) "மகத்துவம்" என்பதின் பொருள் தெய்வீக மேன்மை, சிறப்பு என்பதாகும். இது பிதாவாகிய தேவனையே விளங்கப் பண்ணுகிறது (மேலும் காண்க யூதா 25)

இ. நம்முடைய பிரதான ஆசாரியர் தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார் (உன்னத கனத்திற்குரிய இடம், அதிகாரத்திலும் வல்லமையிலும் தேவனுக்கு ஒப்பாக இருப்பது) என்பது, தேவ சமுகத்தில் நின்று, முடிவில்லாத வேலையைச் செய்த (சொந்தப் பாவங்களுக்காகவும், ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் முடிவில்லாமல் பலி செலுத்துதல்) ஆரோனின் ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேன்மையுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

ஈ. வசனம் 2. "பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்து வருகிறார்". இது கிறிஸ்து தொடர்ந்து பரலோகத்தில் செய்யும் ஊழியத்தை விளக்குகிறது. மெய்யான கூடாரம் என்பது, இஸ்ரவேலர் வனாந்திரத்தில் பிரயாணம் செய்த போது ஆரோன் ஊழியஞ் செய்த "ஆசரிப்புக் கூடாரம்" என்பதிலிருந்து உருவகப்படுத்திக் கூறப்பட்டது. (யாத்திராகமம் 27:21).

உ. எபிரெய நிருபக்காரன் கிறிஸ்து இப்பொழுது ஊழியம் செய்யும் இடத்தின் மேன்மையை நாம் காணும்படி விரும்பி, பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடாரத்துடன் ஒப்பிட்டு இவ்விதம் கூறுகிறார்:

1. இது மெய்யான கூடாரம்--உண்மையான, சரியான ஒன்றாகும்.

2. இது மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது--இதன் பொருள், இது ஓரிடத்தில் கர்த்தரால் முளையடித்து உறுதியாகப் பொருத்தப்பட்டுள்ளது; ஒருவர் கூடாரமடிப்பது போல கர்த்தரால் நாட்டப்பட்டுள்ளது என்பதாகும்.

ஊ. நமக்கு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும், தகுதிவாய்ந்த பிரதான ஆசாரியர் இருப்பது மட்டுமல்லாது, பரலோகத்தில் கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மெய்யான கூடாரத்தில் அவர் நமக்காக ஊழியஞ் செய்து கொண்டிருக்கிறார்.

3. பரலோகக் கூடாரத்துக்கு ஒப்பான ஒன்றில் பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன் ஊழியஞ் செய்தார் (8:3-5).

அ. வசனம் 3. "ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்:"

பிரதான ஆசாரியருடைய ஊழியத்தின் மேன்மையும், இயேசு கிறிஸ்துவால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையும்
எபிரெயர் 8:1-13

"பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி" (எபிரெயர் 5:1) என்று முன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மனப்பூர்வமாகவும், கட்டளையாகவும் செலுத்தப்படும் காணிக்கைகளும் பலிகளும் அடங்கும். அவை: சர்வாங்க தகனபலி, போஜனபலி, சமாதானபலி, பாவநிவாரண பலி, குற்றநிவாரணபலி ஆகியவையாகும். (இந்தப் புத்தகத்தில் முந்தின அத்தியாயத்தில் காண்க (எபிரெயர் 5:1-10 போதனை, குறிப்பு 1-அ). குறிப்பாக பாவநிவர்த்தி செய்யும் நாளில் செலுத்தப்பட்ட பலிகள், இங்கே ஆக்கியோனின் மனதில் இருந்திருக்கக் கூடும். இந்தப் பலிகள் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் மீண்டும் மீண்டும் செலுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது (எபிரெயர் 10:1-3).

ஆ. வசனம் 3. "ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் (கிறிஸ்துவுக்கும்) அவசியம் வேண்டியதா யிருக்கிறது". பழைய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியனுடைய முக்கியமான ஊழியம் இப்பொழுது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆனால், ஆரோனுக்கும், அவனுடைய சந்ததிக்கும் இருந்த ஊழியத்தைக் காட்டிலும் மிகவும் மேன்மையான விதத்தில் இவரில் நிறைவேற்றப்படுகிறது. இந்த இடத்தில் இவருக்கு "அவசியம் வேண்டியதாயிருந்தது" பலி இன்னதென்று சொல்லப்படவில்லை. எபிரெயர் 7:27 மற்றும் 9:14-இல் கிறிஸ்து தாமே அந்தப் பலியானார் என்று நாம் காண்கிறோம்!

இ. செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் "அவசியம் வேண்டியதாயிருக்கிறது"

ஆ. என்று எபிரெய நிருபக்காரன் எழுதுகிறார். மனுக்குலத்தின் பாவங்களுக்காக, பாவ நிவாரணப் பலியாகத் தம்மைத் தாமே கிறிஸ்து பலியாக்க வேண்டியது அவசியம் வேண்டியதாயிருந்தது:

1. எல்லா மனுஷருக்காகவும் ஒரேதரம் தம் சொந்த இரத்தத்தை சிந்தினார் (ஆதலால், வேறொரு பலி அவசியமில்லை) (எபிரெயர் 7:27; 9:11,12; 10:10).

2. முதலாம், இரண்டாம் உடன்படிக்கையின் காலத்தில் செய்யப்பட்டப் பாவங்களுக்காகப் பலியானார். (இவ்விரண்டு கூட்டத்தாரிலும் தமதுநீதியைச் செலுத்துகிறார்) (எபிரெயர் 9:15; ரோமர் 3:25,26)ஈ. வசனம்

4. "பூமியிலே அவர் (கிறிஸ்து) இருப்பாரானால் ஆசாரியராயிருக்க மாட்டார்." (கிறிஸ்து இந்த உலகில் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த போதிலும்) கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் இப்பூமிக்குரியதல்ல. பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தில் அவர் எந்த ஆசாரிய ஊழியத்தையும் நிறைவேற்றவில்லை. கிறிஸ்து ஆசாரிய ஊழியஞ் செய்யுமிடம் பரலோகத்திலுள்ள மெய்யான பரிசுத்த ஸ்தலமேயாகும்உ. வசனம் 5. "இவர்கள் செய்யும்ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது". பரலோகத்தில் கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான, சரியான கூடாரமும்; பரலோகத்தில் கிறிஸ்து ஊழியஞ் செய்கிறதுமான கூடாரத்திற்கு சாயலும், நிழலுமாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்தில் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் ஊழியஞ் செய்தார்கள்.

பிரதான ஆசாரியருடைய ஊழியத்தின் மேன்மையும், இயேசு கிறிஸ்துவால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையும்

எபிரெயர் 8:1-13

"சாயல்" என்பது ஓர் உண்மைப் பொருளின் பிரதிபலிப்பு அல்லது மாதிரி அல்லது வடிவமைப்பு ஆகும். "நிழல்" என்பதின் பொருள் உண்மைப் பொருளினால் ஏற்படும் உருவம் அல்லது வரைபடம் என்பதாகும்.

ஊ. மோசே ஆசரிப்புக் கூடாரத்தைச் செய்யும்படி வனாந்தரத்தில் கட்டளையைப் பெற்ற போது இதை நன்கு உணர்ந்து கொண்டான்: "மலையின் மேல் உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே வாசஸ்தலத்தை நிறுத்துவாயாக... உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே அவைகளைக் (குத்துவிளக்கு, தட்டுமுட்டு முதலானவைகள்) செய்ய எச்சரிக்கையாயிரு" (யாத்திராகமம் 26:30; 25:9,40).

எ. வசனம் 5. "உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்". இங்கே எச்சரிக்கப்படுதல் என்பதின் பொருள், முற்றிலும் கீழ்ப்படியும்படியாக பரலோகத்திலிருந்து தெய்வீகக் கட்டளையை, அதிகாரம் மிக்க வார்த்தையைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதாகும். கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே செய்து, ஆசரிப்புக் கூடார வேலையை முடித்தான் என வேதத்தில் கூறப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பழைய ஏற்பாட்டில் துல்லியமாக விவரிக்கப்பட்டுள்ளது (யாத்திராகம அதிகாரங்கள் 25-30).

3. இயேசுகிறிஸ்துவின் ஊழியமும், அவர் மத்தியஸ்தராயிருந்த புதிய உடன்படிக்கையும், பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியரின் ஊழியத்தையும், உடன்படிக்கையையும் விட மேன்மையானது (8:6-13).

அ. வசனம் 6, "இவரோ, விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்." இப்பூமியில் ஊழியஞ் செய்கிற சாயலும், நிழலுமான பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தைக் காட்டிலும், பரலோகத்திலுள்ள மெய்யான கூடாரத்தில் செய்யும் இயேசுவின் ஊழியம் மேன்மையுள்ளது என்பதை ஆக்கியோன் தெளிவுபடுத்துகிறார். சீனாய் மலையில் மோசே மூலம் கர்த்தர் பண்ணின பழைய உடன்படிக்கையைக் காட்டிலும், புதிய உடன்படிக்கை மேன்மையுள்ளது என்பதையும் அவர் விளங்கப் பண்ணுகிறார். இதற்காக, பழைய, புதிய உடன்படிக்கைகளை ஒப்பிட்டுக் கூறுகிறார். "மேன்மையுள்ளது" என்பதின் பொருள், இதன் சிறப்புக்கு மேம்பட்டது என்பதாகும்.

ஆ. "மத்தியஸ்தர்" என்பது இரண்டு குழுவினருக்கிடையே நடுவராக இருக்கும் சட்டரீதியான பதமாகும். புதிய உடன்படிக்கையின் கீழ் கிறிஸ்து (மாத்திரம்) மனிதருக்கும் தேவனுக்குமிடையில் மத்தியஸ்தராயிருக்கிறார். இந்த இரண்டு வகுப்பினருக்குள்ளும் அந்நியோந்நியத்தை ஏற்படுத்தி இதைப் பராமரிப்பதே இவருடைய வேலையாகும்.

இ. "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் அவரே... தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (1 தீமோத்தேயு 2:5. மேலும் காண்க எபிரெயர் 9:15; 12:24).இ. வசனம் 6-12. "விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டது".

பிரதான ஆசாரியருடைய ஊழியத்தின் மேன்மையும், இயேசு கிறிஸ்துவால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையும்
எபிரெயர் 8:1-13

ஜனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பழைய உடன்படிக்கை போதுமானதாக இருக்கவில்லை என நிரூபிக்கப்பட்டபடியால், புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட வேண்டியதாயிற்று. புதிய உடன்படிக்கை விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் அஸ்திபாரமிடப்பட்டிருக்கிறபடியால், பழைய உடன்படிக்கையை விட இது சிறந்ததாகும். எரேமியா தீர்க்கதரிசி மூலம் புதிய உடன்படிக்கை பற்றி முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தில் இந்த வாக்குத்தத்தங்கள் அடங்கியுள்ளன. (எரேமியா 31:31-34. எபிரெயர் 6:10-12-இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது).

1. இது உள்ளான மனுஷனை பற்றியதாகும். ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர் அவர்களில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கும், அதைப் பாதுகாக்கும் படிக்கும் நினைப்பூட்டுவார் (ரோமர் 8:4,9). இது கற்பலகைகளில் எழுதப்பட்ட நியாயப் பிரமாணத்தை மாற்றி அமைக்கும்:

அ. நியாயப்பிரமாணம் பாவத்தையும், அதன் விளைவுகளையும் தொடர்ந்து நினைப்பூட்டுகிறது (ரோமர் 3:20; 7:7,9; 4:15)

ஆ. பழைய உடன்படிக்கையின் கீழிருந்தவர்கள் அதைக் கைகொள்ள முடியவில்லை2. விசுவாசிக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியின் மூலம் பிதாவாகிய தேவனோடுள்ள நெருங்கிய, தனிப்பட்ட ஐக்கியமும் இதில் அடங்கும் (யோவான் 3:12; எபிரெயர் 4:16; 10:19-22).

3. கல்வாரியில் ஒரேதரம் பலியாக்கப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் உண்டாகும் பாவமன்னிப்பும் இதில் அடங்கும் (எபிரெயர் 10:1-10,14; மத்தேயு 26:28). இனிமேல் பழைய உடன்படிக்கையின் கீழ் வருஷந்தோறும் பாவங்களுக்காகப் பலிகள் செலுத்த வேண்டியதில்லை. நாம் தைரியமாகத் தேவனுடைய சமூகத்தில் பிரவேசிக்கும்படியாகத் தொடர்ந்து நல்மனச்சாட்சி உடையவர்களாயிருக்க வேண்டியதும் இதில் அடங்கும் (எபிரெயர் 9:9,14).

ஈ. வசனம் 13. "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்." "பழமையாக்கினார்" என்பதின் அர்த்தம், பயனற்றதாயிற்று, உருவழிந்தது, நாள்பட்டதாயிற்று என்பதாகும்.

உ. வசனம் 13. "உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது". வயது முதிர்ந்து மரித்து ஓர் வயோதிபனைப் போல பழைய உடன்படிக்கை மாறியுள்ளது. நமக்கு முன் கணப்பொழுதில் மறைந்து போகும் நீராவியைப் போன்றது. பழைய உடன்படிக்கையின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு, புது உடன்படிக்கைக்கான வழி வகுக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

அ. பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியனின் ஊழியத்தைக் காட்டிலும் கிறிஸ்து இயேசுவாகிய பிரதான ஆசாரியனின் ஊழியம் மேன்மையுள்ளது:

1. கிறிஸ்து மெய்யான பரலோகக் கூடாரத்தில் ஊழியஞ் செய்கிறார்.

2. இப்போது கிறிஸ்து ஊழியஞ் செய்யும் பரலோகக் கூடாரத்தின் சாயலுக்கும், நிழலுக்கும் ஒத்த கூடாரத்தில் பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன் ஊழியஞ் செய்தார்.

ஆ. சீனாய் மலையில் மோசேயின் மூலம் தேவனால் ஏற்படுத்தப்பட்டப் பழைய உடன்படிக்கையைக்

பிரதான ஆசாரியருடைய ஊழியத்தின் மேன்மையும், இயேசு கிறிஸ்துவால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையும்
எபிரெயர் 8:1-13

காட்டிலும்கிறிஸ்துவின்மூலம் தாபிக்கப்பட்ட புதியஉடன்படிக்கைமிகவும்விசேஷித்ததாயிருக்கிறது: ஏனெனில் இது விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது:

1.கற்பலகைகளில்எழுதப்பட்ட ரமாணங்களை விட இது உள்ளான மனுஷனைப் பற்றியதாகும் (உள்ளில்வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறது). பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டு பிரமாணங்களை நினைப்பூட்டுவது மட்டுமல்லாது, அதை நிறைவேற்றவும் உதவி செய்கிறார்.

2. பிதாவோடுள்ள நெருங்கிய தனிப்பட்ட ஐக்கியம் உண்டாகிறது. ஓர் மகன் தன் தகப்பனிடம்நெருங்குவது போல சுயாதீனத்தோடும், தைரியத்தோடும்பிதாவின் சமூகத்தில் கிட்டிச்சேரக் கூடும்.

3. பாவமன்னிப்பு உண்டாகிறது. நமது பாவங்களுக்காக செலுத்தப்படும் வேறொரு பலி வேண்டியதில்லை.

4.சுயாதீனத்தோடும், தைரியத்தோடும்பிதாவின்சமூகத்தில் பிரவேசிக்கும்படியானநல்மனச்சாட்சி உண்டாகிறது.

இ. இன்றைய கேள்வி இதுவே: "இயேசு கிறிஸ்து மூலம் பிதாவாகிய தேவனோடு தனிப்பட்ட, நெருங்கிய அந்நியோந்நியத்தை நீங்கள் ஏற்படுத்தியிருக்கிறாா்களா? சுயாதீனத்தோடும், தைரியத்தோடும் தேவ சமூகத்தில் நீங்கள் பிரவேசிப்பதற்கான தெளிவான நல்மனச்சாட்சி உங்களுக்கிருக்கிறதா?"

கிறிஸ்துவில் நமது ஒப்பற்ற நிலை (பரிசுத்தமாகுதல்) எபிரெயர் 10:10-16

முன்னுரை

அ. நம்முடைய (தனிப்பட்ட) பாவங்களின் மன்னிப்புக்காக கிறிஸ்துவின் சரீரம் பலி யிடப்பட்டது என்று நாம் விசுவாசிக்கும் பொழுது, நாம்:

1. பிதாவாகிய தேவனோடு ஓர் சிறந்த நிலையை அடைகிறோம்.

2. ஆவியின்படி தூய்மையாய், குற்றமற்றவர்களாய், சுத்தவான்களாய் இருக்கிறோம்.

3. முற்றிலும் தேவனுக்கென்று அர்ப்பணிக்கப் பட்டவர்களாய் இருக்கிறோம்.

4. தேவனுடைய கனத்தையும், தயவையும் அடைகிறோம்; (கடந்த காலத்தில் தேவனோடு தவறான இடத்தில் இருந்ததை ஒப்பிடுகையில்) இப்போது நாம் அவரோடு செம்மையாய் இருக்கிறோம்.

ஆ. இவை நம் வாழ்வில் இடம்பெறுவதால், நம்முடைய பாவங்களுக்காக வேறொரு பலியை எதிர்பார்க்க வேண்டிய தேவையில்லை. நமக்கு எப்போதும் அவசியமானவை இவைகளே.

இ. இருப்பினும், நமக்குள் வந்து வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர், முற்றிலும் நம்மை கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுரூபமாக்கும் பணியை நமக்குள் ஆரம்பிக்கிறார். ஆதலால், நாம் இதை நன்குணர்ந்து நமக்குள் பரிசுத்த ஆவியானவரின் வேலை தொடர்ந்து நடைபெற அனுமதிக்க வேண்டும்.

3. கிறிஸ்துவின் சரீரம் பரிசுத்தமாக்கப்பட்டதினாலே நாம் தொடர்ந்து பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கிறோம் (எபிரெயர் 10:10-16)

1. வசனம் 10. "நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்". விசுவாசிகள்:

1. பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கு முன்பாக சுத்தவான்களும் குற்றமற்றவர்களுமாயிருக்கிறார்கள்.

2. உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டு, தேவனுக்கென்று முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

3. தேவனுடைய கனத்தைப் பெற்றிருக்கிறோம்; தேவனோடு செம்மையாயிருக்கிறோம்.

இவ்விதமாக விசுவாசி கிறிஸ்துவோடு கூட அடியெடுத்து வைக்க ஆரம்பிக்கிறான். தன்னுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பை அருளும்படி கிறிஸ்துவின் சரீரம் பலி யிடப்பட்டது என விசுவாசிப்பதின் விளைவாக இது நேரிடுகிறது.

ஆ. வசனம் 10. "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே." கல்வாரி சிலுவையில் இயேசுவின் சரீரம் பலி யிடப்பட்டதின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். பவுல் இவ்விதம் நமக்கு கூறுகிறார்:" "அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையான அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபேசியர் 5:25,27).

கிறிஸ்துவில் நமது ஒப்பற்ற நிலை (பரிசுத்தமாகுதல்) எபிரெயர் 10:10-16

இ. வசனம் 10-13. "ஒரே தரம்". இனிமேல் வேறெந்த பலிக்கும் எந்தவிதமான அவசியமுமில்லை. இயேசு கிறிஸ்துவின் சரீரம் சிலுவையில் பலியிடப்பட்டதினால், அவரை விசுவாசித்து, ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ளும் எல்லாருக்குள்ளும் பரிசுத்தத்தின் வேலை நிறைவேறும். பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் பாவங்களுக்காக மீண்டும் மீண்டும் ஒரேவிதமான பலிகளைச் செலுத்தியது போல இனிமேல் பலி செலுத்த வேண்டியதில்லை (எபிரெயர் 7:26,27).

ஈ. வசனம்13. "இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும்வரை காத்துக் கொண்டிருக்கிறார்." நம்முடைய இரட்சிப்புக்குத் தேவையான எல்லாவற்றையும் கிறிஸ்து செய்து விட்டார். கல்வாரியில் அவருடைய வேலை முடிந்து விட்டது. அவர் தமது சபைக்காக வந்து, தம்முடைய சத்துருக்கள் எல்லார் மேலும் கடைசி ஜெயத்தைப் பெறும் வரைக்கும் பரலோகத்தில் காத்துக் கொண்டிருக்கிறார்!

உ. வசனம்14. "பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியி ருக்கிறார்." கல்வாரியில் கிறிஸ்து பலியிடப்பட்டதில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் விசுவாசிகள் பூரணமாக சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறார். பிதாவாகிய தேவனோடு சிறந்த இடத்தை நாம் அடைந்திருக்கிறோம். நாம் அவருடைய கண்களில் பூரணராயிருக்கிறோம்.

ஊ. இருப்பினும், "என்றென்றைக்கும் பூரணப்படுத்தி யிருக்கிறார்" என்பதினால், நாம் ஒருபோதும் மறுபடியும் பாவம் செய்யமாட்டோம் என்பதோ அல்லது நாம் ஒருபோதும் கிருபையிலி ருந்து விழமுடியாது என்பதோ அர்த்தமல்ல. நம்முடைய பாவங்களுக்காக வேறொரு பலி இனி ஒருபோதும் அவசியமில்லை என்பதே அதன் பொருளாகும்.

எ. 1. கிறிஸ்துவின் கல்வாரி பலியை விசுவாசிப்பதினால் நாம் பூரணத்தைப் பெறுகிறோம்.

2. நம்முடைய பாவங்களுக்காக இனி ஒருபோதும் வேறொரு பலி அவசியமில்லை.

நம்முடைய பாவங்களின் மன்னிப்புக்காக கிறிஸ்து பலியிடப்பட்டதை நாம் தொடர்ந்து விசுவாசிக்கும் வரைக்கும், நாம் தொடர்ந்து சுத்தவான்களும், பரிசுத்தரும், நீதிமான்களுமாய் காணப்படுவோம்.

ஏ. இது இயேசுவின் வார்த்தையில் வேறுவிதமாய் இவ்விதம் கூறப்பட்டுள்ளது: "என்னில் (தொடர்ந்து) நிலைத்திருங்கள், நானும் உங்களில் (தொடர்ந்து) நிலைத்திருப்பேன்," (யோவான் 15:4). "(தொடர்ந்து) என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான்; நானும் அவனிலே (தொடர்ந்து) நிலைத்திருக்கிறேன்" (யோவான் 6:56).

ஐ. வசனம் 14-16. "பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள்". (மேலும்) நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருந்து நம்மை மென்மேலும் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுருவப்படுத்துகிறார். அவர் நம்மைத் தொடர்ந்து (உலகத்திலிருந்து வேறுபிரித்து, தேவனுக்கென்று முற்றிலுமாய் அர்ப்பணித்து) பரிசுத்தமாக்குகிறார். தொடர்ந்து மேற்கோள் காட்டப்பட்ட (எபிரெயர் 10:15) எரேமியா 31:33-இன் பொருள் இதுவே.

கிறிஸ்துவில் நமது ஒப்பற்ற நிலை (பரிசுத்தமாகுதல்) எபிரெயர் 10:10-16

2. கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக நாம் தொடர்ந்து மறுரூபமாக்கப்படுகிறோம் (2 கொரிந்தியர் 3:18).

அ. "நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையை" காண்கிறோம். "கர்த்தருடைய மகிமை" என்பது கர்த்தருடைய குணாசீலம், அவர் வாழ்ந்த விதம் எனப் பொருள்படும். "காண்பது" என்பது கண்ணாடியில் ஏதோ ஒன்று பிரதிபலிப்பதைக் காண்பது போன்றதாகும்.

ஆ. மோசே சீனாய் மலையிலிருந்து இரண்டு கற்பலகைகளுடன் இறங்கி வந்தபோது அவருடைய முகம் பிரகாசித்தது. ஏனெனில், அவன் கர்த்தரோடிருந்தான். மோசே பிரகாசத்தையும், மகிமையையும் பிரதிபலித்தான். ஆதலால், மோசே மறுபடியும் கர்த்தருடைய சமூகத்திற்குப் போகும் வரைக்கும், இஸ்ரவேலர்களிடமிருந்து தனது முகத்தை மறைத்துக் கொள்ளும்படி தன் முகத்தில் முக்காடு போட்டுக் கொண்டான் (யாத்திராகமம் 34:29-35).

இ. இருப்பினும், விசுவாசிகள் மோசேயைப் போல ஒருபோதும் தங்களுடைய முகங்களில் முக்காடு போட வேண்டியதில்லை. அவர்கள் எப்போதும் கர்த்தருடைய குணாசீலத்தையும், ஜீவியத்தையும் பிரதிபலிக்கின்றனர். கண்ணாடியில் நம்முடைய உருவம் பிரதிபலிப்பது போல, நாம் கிறிஸ்துவின் குணாசீலத்தையும், வாழ்க்கை முறையையும் உலகுக்குப் பிரதிபலிக்க வேண்டும்.

ஈ. நாம் "அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்".

"மறுரூபமாதல்" என்பதின் அர்த்தம் தெய்வீக சுபாவத்தைப் பெற்று, அவருக்கொப்பாய் மாற்றப்படுதல் என்பதாகும். நாம் இப்பொழுது கிறிஸ்துவின் குணாசீலத்தையும், ஜீவியத்தையும் பிரதிபலிப்பது மட்டுமன்றி, முற்றிலும் அவருக்கொப்பாய் தொடர்ந்து மாற வேண்டும். அதற்காக,

1. கிறிஸ்துவின் குணாசீலத்தை பிரதிபலிக்க வேண்டும்.

2. கிறிஸ்து ஜீவித்தது போல ஜீவிக்க வேண்டும்.

உ. தனது இரண்டாம் நிருபத்தில் பேதுரு இவ்விதம் கூறுகிறார்: "உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்" (2 பேதுரு 1:5-7). நாம் கிறிஸ்துவில் வளருகிறோம். நாம் அவரைப் போல மாறும்படியாக, வளருவதற்கான வழிமுறையும் உள்ளது. (மேலும் காண்க ரோமர் 5:3).

ஊ. "ஆவியாயிருக்கிற கர்த்தரால் ... மறுரூபப்படுகிறோம்" இவை அனைத்தும் உள்ளத்தில் உறையும் பரிசுத்த ஆவியானவரின் வேலையே. பரிசுத்த ஆவியின் மூலம் கிறிஸ்து தமது சீஷர்களோடு தற்போது பூமியில் இருக்கிறார் (யோவான் 14:15-20,23). பேதுரு கூறுவதாவது: "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய (கிறிஸ்துவினுடைய) திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது" (2 பேதுரு 1:3). இயேசுவை ஆண்டவரும், இரட்சகராகவும் ஏற்றுக் கொண்ட பிறகு உள்ளத்தில் வந்து வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியின் வல்லமையையே அவர் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவில் நமது ஒப்பற்ற நிலை (பரிசுத்தமாகுதல்) எபிரெயர் 10:10-16

எ. பரிசுத்த ஆவியானவர் நம்மை

1. மரண தண்டனையிலிருந்து விடுதலையாக்குகிறார்.

2. நம்முடைய ஆவியைப் புதுப்பிக்கிறார்.

3. பிதாவோடு சரியான ஐக்கியத்தில் வைக்கிறர்.

4. நம்முடைய ஜீவியத்தில் தொடர்ந்து கிரியை செய்து, கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மென்மேலும் மறுரூபமாக் குகிறார் (மேலும் காண்க: வசனம் 8-10; பிலிப்பியர் 2:13; கலாத்தியர் 5:22-25; எபிரெயர் 2:11. நாம் நம்முடைய பகுதியில், நம் ஜீவியத்தில் கிரியை செய்வது யார், அவர் செய்ய முயற்சிப்பது என்ன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவர் (தனித்தாளிலும், கூட்டமாகவும்) அந்த வேலையை நிறைவேற்றுவாராக!

3. சாத்தானை மேற்கொள்ளும்படி நாம் தொடர்ந்து பிடிகளிலும், கட்டுகளிலுமிருந்து விடுவிக்கப்பட வேண்டும் (மத்தேயு 6:13).

அ. "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதிரும்" நாம் ஜெபிக்கும் பொழுது பரம பிதாவிடம் இவ்விதம் கூறுகிறோம்: "நாங்கள் தாங்கக் கூடாத அளவுக்கு வாழ்க்கைப் போராட்டங்களையும், சோதனைகளையும் சாத்தான் எங்களுக்கு முன் வைப்பதற்கு தயவுசெய்து இடங் கொடாதிரும்". இதன் சரியான பொருள் யாதெனில், "ஈட்டியினால் அல்லது பட்டயத்தால் குத்துவது போல, சாத்தானின் மூலம் குத்தப்பட்டு, ஆவியின்படி மரிப்பதற்கு இடங்கொடாதிரும்" என்பதாகும்.

ஆ. இது சாத்தானின் ஓர் சித்திரமாகும்:

1. நான் அடிக்கடி நடக்கும் பாதை நெடுகிலும் ஓர் பெரிய வலையை விரிக்கிறான்.

2. வலையின் நடுவில் மேல்நோக்கி நிற்கும் விதத்தில் ஓர் ஈட்டியை நாட்டுகிறான்.

3. அதன் பின் நான் பார்க்க கூடாத விதத்தில் வலையை மறைக்கிறான்.

4. நான் வலையில் விழுந்து, ஈட்டியினால் குத்துண்டு மரிப்பேன் என மனப்பால் குடிக்கிறான்.

இ. ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை ஏற்றுக் கொண்ட பின்னர், ஆதாமின் மூலம் அவன் சுதந்தரித்துக் கொண்ட பாவ சுபாவம் வலுவிழக்கிறது (ரோமர் 8:2) அவன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும் போது, பாவசுபாவத்தினால், அல்ல, உள்ளத்தில் வாசம்பண்ணும் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறான் (ரோமர் 8:9). இருப்பினும், பாவசுபாவம் அவனை விட்டு முற்றிலும் போய் விடுகிறது என்பது பொருளல்ல. அதற்கு மாறாக, அது மாம்சத்திலேதான் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது (ரோமர் 8:3). சில வேளைகளில் உலகத்தின் வழிகளிலும், காரியங்களிலும் பாவமானது வஞ்சிக்கிறது. ஆனாலும், நம்மில் வாசமாயிருக்கிறது ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார் (யாக்கோபு 4:5). ஒருவேளை விசுவாசி சோதிக்கப்படும் பொழுது, சாத்தான் ஜெய மெடுத்ததைப் போலக் காணப்படலாம். ஆனால், ஜெயம் தேவனுடைய பிள்ளைக்குரியதே. ஏனெனில், சரியான விதத்தில் தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் (1 யோவான் 5:18).

ஈ. "தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்". தீமையினின்று இரட்சிக்கும்படியாக ஜெபிக்கும் படிக்கு இயேசு தமது சீஷர்களுக்குக் கற்பித்தார்.

கிறிஸ்துவில் நமது ஒப்பற்ற நிலை (பரிசுத்தமாகுதல்) எபிரெயர் 10:10-16

இதன் அர்த்தம், "நான் இயேசுவை விசுவாசித்ததிலிருந்து பிசாசுடன் இணைக்கப்பட்டு, கட்டப்பட்டிருந்தால் அவற்றை உடைத்தெறியும். என்னுடைய சோதனைகளின் மத்தியில் நான் இருந்தால், உம்முடைய கரிசனையையும், பாதுகாவலையும் சந்தேகிப்பதிலிருந்து என்னை விடுவியும். நான் மீண்டும் சிக்குண்டிருக்கும் சூழ்ச்சியிலிருந்து என்னை விடுதலையாக்கும்" என்பதாகும்.

உ. விசுவாசி விடுதலையாக்கப் படும்படியான தொடர்ந்த அவசியம் உள்ளது:

1. தேவனுடைய கரிசனையையும், பாதுகாப்பையும் சந்தேகித்தல்.

2. இச்சையினால் இழுப்புண்டு, சிக்குண்டு போதல், இயேசுவை விசுவாசித்த பிறகும் பிசாசினாலுண்டாகும் பிடிகளிலும், கட்டுகளிலும் விடுதலையாக்கப்படுவது அவசியமென்பதைத் தேவன் அறிந்திருந்தார். ஆதலால், நாம் ஒவ்வொரு நாளும், "தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்று பிதாவை வேண்டுக்கொள்ள வேண்டும்.

ஊ. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9). அப்படியானால், நம்மைச் சுத்தவான்களாகவும், பரிசுத்தராகவும், செம்மையானவர்களாகவும், நீதிமான்களாகவும் அவர் நம்மைக் காண்பார். ஆதலால், கெட்ட குமாரனைப் போலக் காத்திருங்கள்.

நம்முடைய பாவங்களையும், நாம் தேவனை சந்தேகிப்பதையும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உணர்த்தும் பொழுது, நாம் கிறிஸ்துவிடம் ஓடுவோம், தேவனைக் கிட்டிச் சேருவோம், பாவ மன்னிப்புக்காக வேண்டிக் கொள்ளுவோம்!

முடிவுரை

அ. விசுவாசிக்குக் கிறிஸ்துவில் அற்புதமான, ஒப்பற்ற நிலை உண்டு. அவன்

1. கிறிஸ்துவின் சரீரம் பலியானதில் தொடர்ந்து விசுவாசம் வைப்பதினால் பிதாவுக்கு முன்பாகத் தொடர்ந்து சுத்தவானாகக் காணப்படுகிறான்.

2. பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்கு ஒப்பாக மென்மேலும் மறுரூபமாக்கப்படுகிறான்.

3. சாத்தானின் பிடிகளிலிருந்தும், கட்டுகளிலிருந்தும் தொடர்ந்து விடுதலையாக்கப்படுகிறான்.

ஆ. இருப்பினும், இக்கிரியை நமக்குள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்க வேண்டும்:

1. கிறிஸ்துவில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.

2. நம்முடைய குணாசீலத்தையும், வாழ்க்கை முறையையும் மறுரூபப்படுத்தும் வேலையைப் பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து நடப்பித்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர வேண்டும்.

3. மறுரூபமாகும் கிரியை நமக்குள் நிறைவேற்றும் விதத்தில் நம்முடைய சூழ்நிலைகளையும்,சந்தர்ப்பங்களையும்ஆவியானவர் ஆட்கொள்ளும்படி இடமளிக்கவேண்டும்.

4. நாம் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, வலையில் சிக்கி விழவிருக்கும் வேளையில் உடனடியாக நம் பாவங்களை அறிக்கை செய்து, விடுதலையாக்கப்பட வேண்டும்.

கல்வாரியில் கிறிஸ்துவின் கிரியையினால் உண்டான பலன்களை அனுபவித்தல் எபிரெயர் 10:19-25

முன்னுரை

அ. இந்த வேதபகுதியிலுள்ள உருவகம் எல்லாம் பழைய ஏற்பாட்டு பரிசுத்த ஸ்தலத்திலும், பாவநிவர்த்தி நாளில் பிரதான ஆசாரியனின் பிரதிஷ்டையிலும், ஊழியத்திலு மிருந்தும் எடுக்கப்பட்டதாகும் அவன் தேவ சமூகத்தில் பிரவேசிப்பதுடன் சம்பந்தப்பட்டதாகும்.

ஆ. பரிசுத்த ஸ்தலத்துக்கும், மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும் நடுவில் இருந்த திரைச்சீலையின் வழியாக பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள், தேவனுடைய சமூகத்துக்குள் பிரவேசித்ததுபோல, நாம் தேவனுடைய சமூகத்தில் பிரவேசிக்கக்கூடும். கிறிஸ்து தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை தேவசமூகத்தில் பிரவேசிக்கும்படி உண்டு பண்ணியிருக்கிறார்.

இ. நாம் கிறிஸ்துவின் பலியின் மூலம் தேவனுடைய சமூகத்தில் பிரவேசிப்பது, பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியனின் பழைய வழியைக் காட்டிலும் வித்தியாசமானது. பிரதான ஆசாரியன் வருஷத்துக்கு ஒருமுறை இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தோடு, பயத்தோடும், நடுக்கத்தோடும் தேவசமூகத்தில் பிரவேசித்தான். நம்முடைய மார்க்கமோ ஒரே தரம் பலியிடப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டான "புதிய" மார்க்கமாகும். நாம் இதில் சுயாதீனத்தோடும், தைரியத்தோடும், பயமின்றி பிரவேசிக்கிறோம் (மத்தேயு 27:51). மேலும், இது "ஜீவனுள்ள மார்க்கமாகும்" நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் மூலம் நாம் தேவசமூகத்தில் ஜீவிக்கிறோம்.

ஈ. கிறிஸ்து கல்வாரியில் பலியானதினாலும், தேவனுடைய வீட்டின் (சபை) மகா பிரதான ஆசாரியராக இப்பொழுது ஊழியஞ்செய்வதினாலும் (மோசே தேவனுடைய வீட்டில் பணிவிடைக்காரனாக மட்டும் இருந்தான் - எபிரெயர் 3:1-6) நாம்

1. பிதாவாகிய தேவனிடம் எல்லாரும் கிட்டிச் சேர முடியும்.

2. அறிக்கையிடும் நம்பிக்கையில் உறுதியாயிருக்கக் கூடும்.

3. அன்புக்கும் நற்கிரியைக்கும் ஏவப்படுவோம்.

4. ஒருவரையொருவர் சந்தித்து, தைரியப்படுத்தி, புத்தி சொல்லுகிறோம்.

கல்வாரியில் கிறிஸ்து முடித்த கிரியைகளினால் நாம் அனுபவிக்கும் சில நன்மைகள் இவைகளாகும். கொடிய நாட்கள் வந்துள்ளன. அநேகர் கிறிஸ்துவின் விசுவாசத்திலிருந்து வழுவிப் போகின்றனர். ஆதலால், இந்நன்மைகளை நாம் அனுபவமாக்கிக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

1. நாம் தேவனிடம் கிட்டிச் சேரும்பொழுது, கல்வாரியில் கிறிஸ்து முடித்த கிரியைகளினாலுண்டான பலன்களை நாம் அனுபவிப்போம் (10:22).

அ. நாம் தேவனிடம் "சேரக்கடவோம்." இந்நாளில், இக்காலத்தில் தேவனிடம் கிட்டிச் சேருவதை அசட்டை செய்யும் விசுவாசிகளுக்கு இது பெரும் அழிவாகும். அன்றாட தனிப்பட்ட தியானத்துக்கும், ஜெபத்துக்கும் நேரமற்றவர்கள் தற்கொலையாளிகளே. இவற்றில் தவறுகிறவர்கள் ஆபத்தில் தங்கள் விசுவாசத்தை வைக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

கல்வாரியில் கிறிஸ்துவின் கிரியையினால் உண்டான பலன்களை அனுபவித்தல்
எபிரெயர் 10:19-25

நாம் தேவனிடம் கிட்டிச் சேருவது மாத்திரமல்ல, தேவனும் நம்மோடு உறவாடி (தகப்பனும் பிள்ளையும் போல), நம்முடைய ஒவ்வொரு தேவைக்கும் பதில் அளிக்க விரும்புகிறார் (4:16-லும் "சேரக்கடவோம்" என எழுதப்பட்டுள்ளது).

ஆ. "உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும்". நாம் தேவனைக் கிட்டிச் சேரும்போது, இவற்றைச் செய்ய வேண்டும்:

1. உண்மையுள்ள இருதயம் -- "இருதயம்" என்பது விசுவாசியின் முழுமையான உள்ளான ஜீவியத்தைக் குறிக்கிறது. ஆதலால், நாம் தேவனைக் கிட்டிச் சேரும்போது, முற்றிலும் நாம் உண்மையாயும், செம்மையாயும் இருக்க வேண்டியது முக்கியமாகும். யாக்கோபின் கிணற்றருகில் சமாரியா ஸ்திரீயுடன் இயேசு பேசியபொழுது, "(பிதாவை) அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள்.. உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்" (யோவான் 4:23,24). இதன் அர்த்தம் யாதெனில் நாம் தேவனைக் கிட்டிச்சேரும் போது, எதையும் அவரிடம் மறைக்க முயற்சிக்கக் கூடாது. அவர் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வரையறுக்கிறபடியால், தெள்ளெந் தெளிவறக் காணக்கூடிய கண்ணாடியைப் போல இருக்க வேண்டும் (எபிரெயர் 4:12).

2. "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு"--தேவனோடு நமக்குள்ள சிலாக்கியத்தைப் பற்றி எந்தவிதமான சந்தேகமுமில்லை.

பரலோக பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவ கிரியை இதை உறுதிப்படுத்துகிறது. பிதா நம்முடைய ஜெபங்களைக் கேட்கிறார் என்பதிலும், ஏற்ற சமயத்தில் இரக்கத்தையும், சகாயஞ் செய்யுங் கிருபையையும் பெறுவோம் என்பதிலும் எந்த விதமான சந்தேகமுமில்லை. கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ளும் போது, விசுவாசிகளுக்குத் தேவனால் அருளப்படும் ஈவு விசுவாசம் ஆகும். (ரோமர் 10:17).

இ. "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்." கிறிஸ்துவின் பலியின் இரத்தத்தினால் துர்மனச்சாட்சியிலிருந்தும், தேவனிடமிருந்துஎன்றென்றுமாகவேறுபிரிக்கப்பட்டு நரகத்தில் ஆக்கினை அடைவதிலிருந்தும், விசுவாசி முன்செய்த பாவங்களை மீண்டும் செய்வதிலிருந்தும் விடுதலையளிக்கிறது. இது வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இரத்தத்தினாலல்ல, கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் விடுதலை உண்டாகிறது (எபிரெயர் 9:9,14). கர்த்தருக்கு முன்பாக ஆரோனும், அவன் குமாரர்களும் பிரதிஷ்டை பண்ணப்பட்ட போது இரத்தம் தெளிக்கப்பட்டதிலிருந்து இது எடுக்கப்பட்டுள்ளது (யாத்திராகமம் 29:21; மேலும் காண்க 24:8)

ஈ. "சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்." எல்லாப் பாவத்திலும், தீமையிலுமிருந்து உள்ளான சுத்திகரிப்பைப் பெறுவதை இது காட்டுகிறது. தமது சீஷர்களின் கால்களை இயேசு கழுவிய போது இயேசு கொடுத்த போதனையும் இதுவே (யோவான் 13:8). ஆதலால், தண்ணீர் ஞானஸ்நானத்திற்கென்று தன்னை ஒப்புக் கொடுக்கும் ஒவ்வொரு விசுவாசியின் சாட்சியும் இதுவாகவேயிருக்க வேண்டும். கர்த்தருக்கு முன்பாக ஊழியஞ் செய்வதற்கு முன்னர் பிரதான ஆசாரியர்கள் தங்களை சுத்திகரிப்பதிலிருந்து இது எடுக்கப்பட்டுள்ளது.(யாத்திராகமம்30:17-21;லேவியராகமம் 8:6; மேலும் காண்க எபேசியர் 5:26).

உ. இவ்விதமாக கிறிஸ்துவின் பலியின் இரத்தத்தினால் நமக்குள் உள்ளான சுத்திகரிப்பு உண்டாவதால்

கல்வாரியில் கிறிஸ்துவின் கிரியையினால் உண்டான பலன்களை அனுபவித்தல்
எபிரெயர் 10:19-25

1. பரலோகத்திலிருக்கும் பிதாவாகிய தேவனுடைய சமூகத்திற்குச் செல்லும்படியான சிலாக்கியம் உண்டாகிறது.

2. நம்முடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு, பதில் கிடைக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் விசுவாசத்தை நாம் பெறுகிறோம்.

3. ஏற்ற சமயத்தில் இரக்கத்தையும், கிருபையையும் பெற்றுக் கொள்ளுகிறோம்.

2. நாம் அறிக்கையிடுகிற நம்பிக்கையில் உறுதியாயிருப்போமானால் கல்வாரியில் கிறிஸ்துவின் கிரியையினாலுண்டான பலன்களை நாம் அனுபவிப்போம் (10:23).

அ. "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்." "நாம் அறிக்கை செய்யும் நம்பிக்கை" என்பது, கிறிஸ்து மூலம் தேவன் செய்த வாக்குத்தத்தங்களை, குறிப்பாக, சபை எடுத்துக் கொள்ளப்படும் போது மகாதேவனும், இரட்சகருமாகிய இயேசு மகிமையில் வெளிப்படும் போது நிறைவேற்றுவார் என்பதே அந்த நம்பிக்கையாகும் (தீத்து 2:13). அப்பொழுது இந்த சம்பவங்களும் நிகழும்:

1. நமக்கு மகிமையடைந்த சரீரம் உண்டாகும்.

2. மரித்தவர்கள் உயிர்த்தெழும்புவார்கள்

3. கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக பிரதிபலன் அளிக்கப்படும்.

4. பூமியில் கிறிஸ்துவோடு கூட 1,000 வருஷம் ஆளுகை உண்டாகும்.

5. புதிய எருசலேம், புதிய வானம், புதிய பூமியில் தேவனோடும் கிறிஸ்துவோடும் நித்திய ஜீவனை அனுபவிப்பார்கள்.

ஆ. இவையெல்லாம் சம்பவிப்பதற்கு முன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்படுவதாவது:

1. பிதாவுக்கு முன்பாக நீதியும், பரிசுத்தமும் உள்ளவர்களாக நிறுத்தப்படுதல்.

2. தேவனுடைய குடும்பத்தில் சுவிகார புத்திரராதல்.

3. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலையாக்கப்படுதல் (மீட்பு)

4. பாவங்களிலிருந்து தொடர்ந்து மன்னிக்கப்படுதல் (எபேசியர் 1:4-7).

5. எந்தச் சமயத்திலும் பயமின்றி தைரியமாகத் தேவனிடம் கிட்டிச் சேர்ந்து, ஏற்ற சமயத்தில் இரக்கத்தையும், கிருபையையும் கண்டடைதல் (எபிரெயர் 10:22; 4:16).

இ. "அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்". நமது நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் "அசைவில்லாமல்" என்பதின் அர்த்தம் சந்தேகமில்லாமல், தயக்கமில்லாமல் என்பதாகும். "உறுதியாயிருத்தல்" என்பதின் அர்த்தம் அதை இழந்து போகாதபடிக்குப் பற்றிக் கொள்ளுதல்; இந்த எண்ணம் நீங்காதபடி நம் மனதில் இருத்திக் கொள்ளுதல்; அதை ஓர் உடமையாகப் பற்றிக் கொண்டு தக்கவைத்தல் என்பதாகும் (காண்க 4:14-நாம் பண்ணின அறிக்கையை (விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம்).

கல்வாரியில் கிறிஸ்துவின் கிரியையினால் உண்டான பலன்களை அனுபவித்தல்
எபிரெயர் 10:19-25

ஈ. "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவ ராயிருக்கிறாரே". நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் "அசைவில்லாமல் உறுதியாயிருக்க" வேண்டியதின் முகாந்தரத்தை எபிரெய நிருபக்காரன் (அப்பொல்லோ அல்லது பர்னபாஸ்) இப்பொழுது கூறுகிறார். வாக்குத்தத்தங்களை நமக்குத் தந்த தேவன் அவற்றை நிறைவேற்றும்படியான பயங்கரமான வல்லமையுடையவர் மாத்திரமல்லாது, அவர் உண்மையுள்ளவராயுமிருக்கிறார்.

1. தம்முடைய ஜனத்தோடுள்ள ஐக்கியத்தில் அவர் உண்மையுள்ளவர் (1 கொரிந்தியர் 1:9).

2. அவர் தம்மில் தாம் உண்மையுள்ளவர் (2 தீமோத்தேயு 2:13).

3. அவர் பண்ணின உடன்படிக்கைகளைக் காப்பதில் உண்மையுள்ளவர் (உபாகமம் 7:9; ரோமர் 15:8).

4. தமது குமாரனை விசுவாசிப்பவர்களைத் தீமையினின்று விலக்கிக் காப்பதில் உண்மையுள்ளவர் (2 தெசலோனிக்கேயர் 3:3).

5. தமது ஜனம் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுகிறதற்கு இடங்கொடாமலிருப்பதில் உண்மையுள்ளவர் (1 கொரிந்தியர் 10:13).

உ. தேவன் முற்றிலும் வல்லவரும், நம்பிக்கைக் குரியவருமாக இருக்கிறார். ஆதலால், தேவனுடைய ஜனங்கள் அவருடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்ளலாம் (எண்ணாகமம் 23:19; ஏசாயா 25:1; 2 கொரிந்தியர் 1:20). இதினிமித்தமாக, நாம் கிறிஸ்துவிலுள்ள நம்முடைய நம்பிக்கையில் அசையாமல் உறுதியாயிருக்கலாம்! நம்முடைய அசைவில்லாத நம்பிக்கை நிலைகுலைந்து, தடுமாறிப் போகக் கூடாது. நம்பிக்கை இடது அல்லது வலது புறம் சாயவும் கூடாது. நம் நம்பிக்கை எப்போதும் திடமாயும், நேர்மையாயும் இருக்க வேண்டும்!

3. நாம் ஒருவரையொருவர் கவனிக்கும்படி ஏவப்படும் பொழுது கல்வாரியில் கிறிஸ்து நிறைவேற்றிய கிரியைகளின் பல பலன்களை அனுபவிக்கிறோம் (10:24).

அ. "நாம் ஏவப்படும் படி ஒருவரையொருவர் கவனித்து" "கவனித்தல்" என்பதற்கு ஏதோ ஒன்றின் மீது கவனம் செலுத்துதல், அதன் அருகில் சென்று அதனை முழுமையாகவும், தெளிவாகவும் அறிந்து கொள்ளுதல் என்று பொருளாகும். மற்ற விசுவாசிகளுக்கு நாம் எவ்வளவு தூரம் நன்மையானவைகளைச் செய்யக் கூடும் என்பதைத் தீர்மானிப்பதற்கு முயற்சியும், ஆழ்ந்த சிந்தையும் தேவையாகும்.

ஆ. "ஏவப்படுதல்" என்பதின் அர்த்தம் தூண்டுதல், செயலாற்றும்படி யாராவது ஒருவரை ஏவுதல்; ஏதோ ஒன்றை செய்யும்படி தட்டியெழுப்புதல் என்பனவாகும். இது, குதிரைச் சவாரி செய்பவன் தாற்றுமுள்ளினால் குதிரையின் விலாவில் குத்தி, அதை வேகமாக ஓடச் செய்வது போன்றதாகும்.

இ. "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும்". நாம் ஒருவரையொருவர் தட்டியெழுப்ப வேண்டிய இரண்டு காரியங்கள் உண்டு:

1. அன்பு—அன்பின் பிரயாசங்கள், அக்கறை ஆகியவற்றின் மூலம் அன்பு நிரூபணமாகிறது. தேவைப்படும்பொழுது அன்பு தியாகமாகிறது (1 யோவான் 4:10)

கல்வாரியில் கிறிஸ்துவின் கிரியையினால் உண்டான பலன்களை அனுபவித்தல்
எபிரெயர் 10:19-25

2. நற்கிரியைகள்--மற்றவர்களின் தேவைகளை சந்திப்பதற்கான காரியங்களே நற்கிரியைகள். இவை மதிப்பிலும், தோற்றத்திலும் விசுவாசிகளுக்குக் கவர்ச்சிகரமானது. இவை அர்த்தமற்ற வெறும் வார்த்தைகள் அல்ல. (யாக்கோபு 2:16)

ஈ. ஆதலால், நாம் ஒருவரையொருவர் சந்திக்கும்போது சுயநலமற்றவர்களாயிராமல், நாம் தனிப்பட்ட விதத்தில் எதைச் செய்யக் கூடும் என்பதை எப்போதும் உற்று நோக்க வேண்டும். கூடியவரையில் மற்றவர்களை ஊக்குவிக்க வேண்டும். மற்றவர்களைத் தைரியப்படுத்தி ஊக்குவிக்கும் படிக்கு நாம் கூடி வரும்போது ஆவிக்குரிய வரங்களைப் பிரயோஜனப்படுத்த வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு எழுதுகிறார். நாம் மற்றவர்களை (ஆவிக்கேற்றபடி) பலப்படுத்தி, ஊக்குவித்து, ஆறுதல்படுத்த வேண்டும் (1 கொரிந்தியர் 14:3,12,26).

உ. இதன் விளைவாக மற்றவர்களும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் தூண்டப்படுகிறார்கள். ஒருவரை யொருவர் தூண்டுவது தொற்றுநோய் போன்றது. தூண்டப் படுகிறவர்களும் ஊக்குவிக்கப்பட்டு சபை கூடி வருவதில் உற்சாகங் கொள்கிறார்கள். எனவேதான், ஆக்கியோன் இவ்விதம் எழுதுகிறார்: "சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்".

4. நாம் சபை கூடி வந்து ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தும்பொழுது கல்வாரியில் கிறிஸ்து முடித்த வேலைகளின் பலாபலன்களை அனுபவிக்கிறோம் (10:25).

அ. "சபைகூடி வருதலை நாம் விட்டு விடாமல் இருப்போம்." "விட்டு விடுதல்" என்பதின் அர்த்தம் சபைகூடி வருதலைக் கைவிடுதல், புறக்கணித்தல் என்பதாகும். இது, படைத்துறையைச் சார்ந்த ஒருவன் சேவையிலிருந்து இசைவு பெறாமல் தப்பியோடுவதைப் போன்றதாகும் கிறிஸ்துவும் கல்வாரியில் கைவிடப்பட்டார் (மத்தேயு 27:46; மேலும் காண்க 2 தீமோத்தேயு 4:10,16).

ஆ. "சிலர் விட்டு விடுகிறது போல". இரட்சிக்கப் பட்டவர்களில் சிலர் சபை கூடி வரும் பழக்கத்தையும், மற்ற விசுவாசிகளுடன் பழகுவதையும் விட்டு விட்டார்கள். இவர்களில் சிலர் யூத இயக்கத்தை அமைக்கும்படி திரும்பிச் சென்றவர்களாயிருக்கலாம். இது ஐக்கியத்தை விட்டு விடுவது (கைவிடுதல்) மட்டுமல்லாது, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தையே விட்டு விடுவதாகும்.

இ. பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் இவ்விதம் கூறுகிறார்: "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற (திரும்பிச்சென்ற) நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" (கலாத்தியர் 5:4). ஆதலால் இதர விசுவாசிகளுடன் நெருங்கி, முறையான ஐக்கியம் வைத்திருப்பது சிறந்த கருத்து மட்டுமல்ல. நாம் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மிகவும் அத்யாவசியமானதாகும்.

ஈ. நாம் "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்". நம் வீடுகளில் சிறிய அளவில் விசுவாசிகள் கூடிவருவ தானாலும், குறிப்பிட்ட நாட்களில் முழு சபையும் கூடிவருவதானாலும், அதன் முக்கியக் காரணம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, உற்சாகப்படுத்துவ தேயாகும்.

கல்வாரியில் கிறிஸ்துவின் கிரியையினால் உண்டான பலன்களை அனுபவித்தல்

எபிரெயர் 10:19-25

"புத்தி சொல்லுதல்" என்பதின் அர்த்தம், யாராவது ஒருவரை ஆற்றித் தேற்றி, செயலாற்றும்படி தூண்டுவதேயாகும்.

உ. "நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ". சபைக்காகக் கிறிஸ்து வரும் நாளை நெருங்க நெருங்க சபையிலும் உலகிலும் நிகழும் காரியங்கள் விசுவாசிக்கு சாதகமாய் இருக்காது. தம் வருகைக்கு முன் சம்பவிக்கப் போகிற காரியங்களைக் கிறிஸ்து தாமே கூறியிருப்பதை மத்தேயு சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறோம்:

1. கள்ளத் தீர்க்கதரிசிகளும், கள்ளப் போதகர்களும் அநேகரை வஞ்சிப்பார்கள்.

2. யுத்தங்களும், பஞ்சங்களும், பூமியதிர்ச்சிகளும் பெருகி தீவிரமடையும்.

3. உலகெங்கும் விசுவாசிகளின் உபத்திரவங்கள் மிகவும் அதிகரிக்கும்.

4. வன்முறைச் சம்பவங்கள், கொலை, ஒழுக்கக்கேடுகள், துன்மார்க்கம் ஆகியவை பெருகும். (மத்தேயு 24:4-14).

முடிவுரை

அ. இக்கடைசி நாட்களில் கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட கிறிஸ்துவின் கிரியைகளினாலுண்டான பலாபலன்களை நாம் அனுபவிப்பது மிக நிச்சயமானதாகும். நம் ஆத்துமாவின் இரட்சிப்பு கீழ்க்கண்டவற்றைச் சார்ந்துள்ளது:

1. நாம் அனுதின தியானத்தினாலும், ஜெபத்தினாலும் தேவனண்டை நெருங்க வேண்டும்.

2. நாம் அறிக்கை பண்ணும் விசுவாசத்தில் அசைபாமல் உறுதியாயிருக்க வேண்டும்; அதை விட்டு விலகாதபடி பற்றிக் கொள்ள வேண்டும், அதை ஓர் உடமையாக அடைந்து, தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

3. அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் தூண்ட வேண்டும்.

4. அடிக்கடி ஒருவரையொருவர் சந்தித்து, உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களை உங்கள் அருகில் அழைத்து, ஆற்றித் தேற்றிப் புத்தி சொல்ல வேண்டும்.

விசுவாசத்தைக் கைவிடுதலின் விளைவுகளும் கிறிஸ்துவிலுள்ள தைரியத்தில் நிலைத்திருப்பதும்

(எபிரெயர் 10:26-39)

முன்னுரை

அ. ஆக்கியோன் இந்த வேதபகுதியை எழுதியபோது விசுவாச மறுதலிப்பு (கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தைக் கைவிடுதல், துறத்தல்) அவர் மனதில் இருந்தது என்பது தெளிவு. இது 6:4-9 வசனங்களிலுள்ள எச்சரிப்புக்கு ஒத்தது.

ஆ. கிறிஸ்துவக்குள்ளான அவருடைய நண்பர்களில் அநேகர் விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள் என்ற அவருடைய தைரியத்தை அவர் வெளிப்படுத்தியபோது,

1. தங்களுடைய விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போனவர்களுக்கும்,

2. மனப்பூர்வமாய்ப் பாவத்தில் நிலைத்திருப்பவர் களுக்கும் ஏற்படும் விளைவுகளைப் பற்றித் தெளிவுபடுத்து கிறார். அவர்கள் அனைவரும் நியாயந்தீர்க்கப்பட்டு, நித்திய அக்கினிக் கடலில் தள்ளப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள்.

1. கிறிஸ்துவிலுள்ள நமது தைரியத்தை நாம் விட்டு விடுமேயானால், நாம் நியாயந்தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்படுவோம் (10:26-31).

அ. வசனம் 26. "நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால்." "மனப்பூர்வம்" என்பதின் அர்த்தம், தவறு என்று அறிந்த ஓர் பாவத்தை ஏதாகிலும் ஒரு விதத்தில் தொடர்ந்து துணிகரமாகச் செய்தல் என்பதாகும். எனவே, அந்தப் பாவத்தைச் செய்தவன் தான் செய்த பாவங்களுக்குத் தேவனுக்காக முன்பாக உத்தரவாதி ஆகிறான். நியாயப் பிரமாணத்தின்படி "அறியாமையினால்" பாவஞ் செய்தவனுக்கு மன்னிப்புண்டு, ஆனால் துணிகரமாய்ச் செய்தவனுக்கு மன்னிப்பில்லை (எண்ணாகமம் 15:27-31).

ஆ. வசனம் 26. "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு". "அறிவு" என்பதின் அர்த்தம் சரியான விளக்கம் என்பதாகும். "சத்தியம்" என்பது, கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியைக் குறிப்பதாகும். கிறிஸ்துவை ஆண்டவரும், இரட்சகருமாக மனதில் ஏற்றுக் கொண்ட சிலர் பாவமானது என்றறிந்த செயல்களில் துணிகரமாகத் தொடர்ந்து (வழக்கமாக) ஈடுபடுகின்றனர்.

இ. வசனம் 26,27. "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயந்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்". தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, தாழ்மையோடு மன்னிப்புக்காகக் கேட்டவர்களுக்குக் கிறிஸ்து மன்னிப்பை அருளியிருக்கிறார் (1 யோவான் 1:9; 2:1,2; மேலும் காண்க யாக்கோபு 4:7-10). ஆனாலும் இந்தக் கூட்டத்தார் மன்னிப்பைப் புறக்கணித்து, இதற்கு மாறாக, தங்கள் பாவ வழிகளிலேயே தொடர்ந்து ஜீவிக்கின்றனர்.

ஈ. இவர்கள் மனந்திரும்பவோ, கிறிஸ்துவின் மன்னிப்பைத் தேடவோ மனமற்றிருப்பதால்:

1. பாவங்களுக்காக வேறொரு பலி இனியில்லை—தங்கள் பாவங்களுக்கான கிறிஸ்துவின் பலியைப் புறக்கணிப்பது,

விசுவாசத்தைக் கைவிடுதலின் விளைவுகளும் கிறிஸ்துவிலுள்ள தைரியத்தில் நிலைத்திருப்பதும்

(எபிரெயர் 10:26-39)

பாவங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரே பலியைப் புறக்கணிப்பதாகும் (மாற்கு 2:7,10; மேலும் காண்க அப்போஸ்தலர் 4:12; 1 தீமோத்தேயு 2:5).

2. நியாயத்தீர்ப்பை எதிர்பாக்குதலும், பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்--மன்னிக்கப்படாத பாவத்தின் விளைவு எப்போதும் தேவனுடைய நியாயந்தீர்ப்பேயாகும். நியாயந்தீர்ப்பு என்பது அவரிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டு அக்கினிக் கடலில் பங்கடைவதாகும் (ஏசாயா 26:11; 2 தெசலோனிக்கேயர் 1:6-9).

உ. நியாயத்தீர்ப்பின் எதிர்பார்ப்போடு ஜீவிப்பது பயங்கரமானது என எபிரெய நிருபக்காரன் உணருகிறான். இந்த பயங்கரத்தை 31-ஆம் வசனத்திலும் ஆக்கியோன் இவ்விதம் வெளிப்படுத்துகிறான்: "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது (தேவன் நியாயந்தீர்த்து, தமது கோபாக்கினையை ஊற்றும் போது) பயங்கரமாயிருக்குமே" (மேலும் காண்க எபிரெயர் 12:29). இத்தகைய விசுவாசிகள் உலகத்தோடுள்ள சிநேகத்தைப் புதுப்பிப்பதால், அவர்கள் தேவனுக்கு சத்துருக்களாகி, கோபாக்கினைக்குப் பாத்திரராகிறார்கள் (யாக்கோபு 4:4).

ஊ. வசனம் 28. "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே." பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி ஒருவனைக் குற்றவாளியாக அல்லது அக்கிரமக்காரனாகத் தீர்த்து, சாகும்படி ஒப்புக் கொடுக்க வேண்டுமானால் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் அவசியமாயிருந்தன (உபாகமம் 19:15; 17:2-7) அதையே இங்கு மேற்கோள் காட்டுகிறார்.

எ. வசனம் 29. "தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரனான யிருப்பான்." பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கும் விசுவாசிகள் நியாயந் தீர்க்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு இங்கே மூன்று சாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதிக்கிறார்கள்--அவர்கள் கிறிஸ்து கல்வாரியில் எதைச் செய்து முடித்தார் என்பதை மறந்து, அவருடைய மார்க்கத்தை விட்டுப் பிரிந்தபடியால், தேவகுமாரனைப் பகிரங்கமாக அவமானப்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள்.

2. தன்னைப் பரிசுத்தஞ் செய்த இரத்தத்தை அசுத்தமென்று எண்ணுகிறார்கள்--இவர்கள் ஒருகாலத்தில் இரட்சிக்கப்பட்டு, பாவத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் வேறுபிரிக்கப்பட்டு, தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த வர்கள். இருப்பினும், அவர்களுக்கும் தேவனுக்கும் இடையில் கிறிஸ்துவின் பலியின் இரத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை அவர்களுடைய உண்மைக்கும், மதிப்புக்கும் பாத்திரமானதாகக் கருதத் தவறினார்கள்.

3. கிருபையின் ஆவியை நித்திக்கிறார்கள்-- அவர்களைக் கிறிஸ்துவினண்டை இழுத்து, அவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய கிருபையை அருளியவர் பரிசுத்த ஆவியானவரே. இப்பொழுது அவர்கள் அவருக்கு விரோதமாக இறுமாப்புடையவர்களாகி, கிறிஸ்துவிடமிருந்து பிரிந்ததின் மூலம் அவரை முற்றிலும் புறக்கணித்துவிட்டார்கள்.

விசுவாசத்தைக் கைவிடுதலின் விளைவுகளும் கிறிஸ்துவிலுள்ள தைரியத்தில் நிலைத்திருப்பதும்

(எபிரெயர் 10:26-39)

ஏ. வசனம் 30. "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." இந்த வசனம் உபாகமத்திலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோளாகும் (32:35,36; மேலும் காண்க 32:40,41). இந்த மூன்று கூட்டத்தாரும் கிறிஸ்துவிலுள்ள தங்களுடைய விசுவாசத்தை விட்டு விட்டதால் தேவன் அவர்களை நியாயந்தீர்ப்பார் எனத் தான் அறிந்திருப்பதாக ஆக்கியோன் கூறுகிறார். அவர்கள் யாரெனில்:

1. தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதிக்கிறவர்கள்.

2. தங்களைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணுகிறவர்கள்.

3. கிருபையின் ஆவியை நித்திக்கிறவர்கள்.

ஓ. ஆக்கியோனின் வார்த்தைகளுக்கு வேதவாக்கியங் களில் ஆதாரங்கள் உண்டு. (உபாகமம் 32:5; 19-25). ஒருவன் தேவனுடைய குடும்பத்தில் ஒரு முறை அங்கத்தினனாக இருந்தான் என்பதற்காக, அவன் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்த பாவத்துக்காக நியாயந்தீர்ப்புக்காகத் தப்ப முடியாது (மேலும் காண்க எசேக்கியேல் 18:24-26)

2. கிறிஸ்துவிலுள்ள தைரியத்தை நாம் விட்டு விடாமலிருப்போமானால், மகிமையான பிரதிபலனைப் பெறுவோம் (10:32-39).

அ. வசனம் 32-34. நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள். "நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த நாட்கள்" என்பது, அந்தகாரத்திலிருந்து அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வெளிச்சத்திற்குள் கொண்டு வரப்பட்டு, கிறிஸ்தவர்களான நாட்களைக் குறிக்கிறது. (யோவான் 8:12; மேலும் காண்க எபிரெயர் 6:4). இந்த நாட்களை அவர்கள் பின்னிட்டுப் பார்க்கும் படி (நினைவுபடுத்தும்படி) ஆக்கியோன் விரும்புகிறார்:

1. வசனம் 32. "உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டங்களை சகித்தீர்களே". கிறிஸ்தவ ஜீவியம் என்பது ஓர் விளையாட்டுப் போட்டியைப் போன்றது., இங்கே, கிறிஸ்தவன் எதிரிக்கு முன்பாக நிற்கிறான் (ஒருவேளை மனதின் யுத்தமாக இருக்கலாம் எபேசியர் 6:10-13). சுவிசேஷத்தினிமித்தம் வரும் துன்பங்களாகிய தடைகளையும் மேற்கொள்ள வேண்டியதிருப்பதால் இதை ஓர் "தடகள ஓட்டத்திற்கும்" ஒப்பிடலாம்.

2. வசனம் 33. "நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டீர்கள்"--இந்த விசுவாசிகள் பகிரங்கமாக வேடிக்கை பார்க்கப்பட்டார்கள்., அரங்க மேடையில் உலா வருகிறவர்களுக்கு ஒப்பானார்கள். கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும், அவர்கள் நிந்திக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டார்கள் (ரோமர் 15:3)

3. வசனம் 33. "அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள்". சுவிசேஷத்திற்காக யாராகிலும் பகிரங்கமாக அவமானப்படுத்தப்படுவார்களானால், அங்கிருந்து நழுவிச் சென்று விட வேண்டுமென்ற சோதனைகள் வருவதுண்டு.

விசுவாசத்தைக் கைவிடுதலின் விளைவுகளும் கிறிஸ்துவிலுள்ள தைரியத்தில் நிலைத்திருப்பதும்

(எபிரெயர் 10:26-39)

சமுதாயத்தில் மற்றும் நண்பர்கள், உறவினர்கள், அறிமுகமானவர்கள், அயலகத்தார் ஆகியோர் மத்தியில் நமது கௌரவம் அசையக் கூடும். ஆதியில் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்துவர்கள் இவ்விதமாயிருக்க வில்லை.

4. வசனம் 34. நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக் குறித்துப் பரிதபித்தீர்கள்--ஆதிச் சபையின் காலத்தில் காவலில் இருப்பவரைப் பார்க்கச் செய்பவரும் அதே தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்படுவார். காவலில் இருக்கும் சகோதர, சகோதரிகளைச் சந்திப்பதை மெச்சத்தகும் செயலாகக் கிறிஸ்து கருதினார். (மத்தேயு 25:36). "பரிதபித்தல்" என்பது கட்டப்பட்டவர்கள் எதை உணருகிறார்களோ அதை நாம் உணருவது, அவர்கள் எவ்விதம் துன்புறுகிறார்களோ அவ்விதம் நாமும் துன்புறுவது ஆகும்.

5. வசனம் 34. "உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்,"--அரசியல் கலவரம் மிக்க நாடுகளில் இதை நாம் நேரில் காணலாம். கொள்ளை போன்ற மோசமான செயல்களில், கீழ் வரிசையிலுள்ள பாதுகாவலர்களே ஈடுபடுகிறார்கள். கிறிஸ்தவ மார்க்கத்தின் செல்வாக்கை தடை பண்ணுவதற்காக, இது உயர் பதவியிலுள்ள காவல் அலுவலர்களால் கண்சாடையாக விடப்படுகிறது. கும்பல் கொள்ளையர்களால் இவ்விதம் சம்பவித்தது என சிலர் எண்ணுகிறார்கள்.

"சந்தோஷமாய்க் கொடுத்தார்கள்" என்பதின் அர்த்தம், கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும், பூலோக உடமைகளை இழக்க மனமார அனுமதித்தார்கள் என்பதே.

ஆ. வசனம் 34. "பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்திரம் உண்டென்ற அறிந்து". ஆதி நாட்கள் எளிதாயிருக்கவில்லை. அச்சூழ்நிலையிலும், அவர்கள் சத்தியத்திற்காக உபத்திரவங்களையும், பகிரங்க அவமானங்களையும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள், தங்கள் ஆஸ்திகளையும் கூடக் கொள்ளையிடக் கொடுத்தார்கள், ஏனென்றால் அவர்களுடைய கண்கள் பரலோகத்தின் நித்திய சுதந்திரத்தின் மீது பதிக்கப்பட்டிருந்தது (மத்தேயு 6:19). இப்பொழுது தங்களுடைய வாழ்க்கையில் அவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் கஷ்டங்கள், உபத்திரவங்கள் மத்தியில் முந்தின நாட்களைப் போல செயலாற்றும்படிக்கு ஆக்கியோன் இவற்றை அவர்களை நினைப்பூட்டி, தைரியப்படுத்துகிறார்!

இ. வசனம் 35. "ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள்." "விட்டு விடாதிருங்கள்" என்பதின் அர்த்தம், வீணான அல்லது அசுத்தமான ஒரு பொருளை வீசியெறிவதைப் போலத் தூக்கிப் போட்டு விடாதிருங்கள் என்பதே. "தைரியம்" என்பதின் பொருள், ஒருவரை பகிரங்கமாக, ஒளிவுமறைவின்றி, பயமின்றி, வெளிப்படையாக கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும் நிற்கவும், அறிவிக்கவும் பண்ணும் நிச்சயமேயாகும்.

ஈ. "மிகுந்த பலன்" என்பது கிறிஸ்துவின் நியாயாசனத்தைக் குறிக்கலாம் (2 கொரிந்தியர் 5:10; 1 கொரிந்தியர் 3:11-15; மேலும் காண்க லூக்கா 19:11-26). இருப்பினும் கீழ்க்கண்டவையும் இதில் அடங்கும்.

1. சபை எடுத்துக் கொள்ளப்படுதல்.

2. மகிமையடைந்த சரீரத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

விசுவாசத்தைக் கைவிடுதலின் விளைவுகளும் கிறிஸ்துவிலுள்ள தைரியத்தில் நிலைத்திருப்பதும்

(எபிரெயர் 10:26-39)

3. கிறிஸ்துவோடு 1,000 ஆண்டுகள் அரசாட்சி செய்தல்.

4. புதிய எருசலேமிலும், புதிய வானத்திலும், புதிய பூமியிலும், பிதாவும் கிறிஸ்துவும், எல்லா யுகங்களிலுமுள்ள மீட்கப்பட்டவர்களும் இருக்கும் இடத்தில் நித்தியமாக வாழ்தல்.

உ. வசனம் 36. "வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டிய தாயிருக்கிறது" "பொறுமை" என்பதின் அர்த்தம் இங்கே பிடிவாதமாய் காத்திருத்தல், தொடர்ந்து விடாமுயற்சியுடன் கஷ்டங்களையும், உபத்திரவங்களையும் சகித்தல் என்பதாகும். விசுவாசத்தின் பலவிதமான கஷ்டங்கள் விசுவாசிக்குள் பொறுமையை உண்டாக்கும் என யாக்கோபு கூறுகிறார் (யாக்கோபு 1:2,3). எபிரெய நிருபக்காரன் முந்தின நாட்களில் சுவிசேஷத்தினிமித்தம் விசுவாசிகள் சோதனைகளையும், உபத்திரவங்களையும் சகித்ததை நினைப்பூட்டி அவர்களைத் தைரியப்படுத்துவதில் ஆச்சரியமில்லையே!

ஊ. வசனம் 37 "வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார்; தாமதம் பண்ணார்." இன்னும் கொஞ்ச காலத்திற்கு அவர்கள் தங்களுடைய தைரியத்தைப் பாதுகாப்பார்களேயானால், கிறிஸ்து வெளிப்படும் போது அவரோடு கூட எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:17). இந்த வேதபகுதி ஏசாயா 26:20,21-இல் முன்னுரைக்கப்பட்டதாகும்.

இது, கர்த்தர் வரும்படியாக இஸ்ரவேலர் காத்திருப்பதையும், அவர்களுக்காகக் கிரியை செய்வதையும் குறிக்கிறது. இதுபோலவே, இன்னும் கொஞ்ச காலத்திற்கு விசுவாசிகள் பொறுமையோடு காத்திருப்பார்களேயானால் அவர்களுக்குக் கிறிஸ்து வெளிப்பட்டு, செயல்படுவார்!

எ. வசனம் 38. "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்." இது ஆபகூக் 2:2-4லிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இரட்சிப்புக்காக விசுவாசத்தில் தொடர்ந்து இருக்க வேண்டியதின் அவசியத்தைப் பவுல் ரோமருக்கு நிருபத்தில் எழுதிய போது இதே வசனத்தை மேற்கோள் காட்டுகிறார் (ரோமர் 1:17).

ஏ. இந்த வேதபாகம் இஸ்ரவேலர் பாபிலோனியரால் ஜெயிக்கப்பட்டு, சிறையிருப்புக்குக் கொண்டு சொல்லப் படுவதைக் குறிப்பதாகும். இருப்பினும், வெகுவிரைவில் அவர்களுடைய கரங்களிலிருந்து கர்த்தர் அவர்களை விடுதலையாக்கப் போகிறார். இந்த விடுதலைக்காக அவருடைய ஜனங்கள் பொறுமையோடும், உண்மையோடும் காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது. இதே விதத்தில், விசுவாசிகள் பொறுமையோடு இன்னும் கொஞ்ச காலம் காத்திருப்பார்களேயானால் கிறிஸ்து வெளிப்பட்டு, அவர்களுடைய எல்லா உபத்திரவங்களிலும், கஷ்டங்களிலு மிருந்து அவர்களை விடுதலையாக்குவார்.

ஐ. வசனம் 38. "பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது". இது தேவகுமாரனைக் காலின் கீழ் மிதித்து, கல்வாரியின் பலியை உதாசீனப்படுத்தி, தங்களுக்குள் வாசம் பண்ணும்படி பெற்ற பரிசுத்த ஆவியானவரை நிந்தித்து, கிறிஸ்தவ மார்க்கத்தையே கைவிடும் விசுவாசிகளைக் குறிப்பதாகும்.

ஒ. வசனம் 39. "நாமோ கெட்டுப் போகப் பின் வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர் களாயிருக்கிறோம்."

விசுவாசத்தைக் கைவிடுதலின் விளைவுகளும் கிறிஸ்துவிலுள்ள தைரியத்தில் நிலைத்திருப்பதும்

(எபிரெயர் 10:26-39)

இங்கே "கெட்டுப் போதல்" என்பது, நியாயந்தீர்க்கப்பட்டு, பட்சிக்கும் அக்கினியில் தள்ளப்படுவதாகும் (வசனம் 27). இருப்பினும் தங்களுடைய விசுவாசத்தில் நிலைத்திருந்து, தைரியத்தைப் பாதுகாக்கிறவர்கள் (இந்த நிருபத்தை வாசிக்கிறவர்களில் அநேகர்) இந்த பயங்கரமான நிலையிலிருந்து தங்களுடைய ஆத்துமாவை இரட்சித்துக் (பாதுகாத்துக்) கொள்கிறார்கள்.

முடிவுரை

அ. கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தை விட்டுவிடுகிறவர்களுக்கும், பாதுகாக்கிறவர்களுக்கும் ஏற்படும் விளைவுகளுண்டு.

1. விசுவாசத்தைக் கைவிடுகிறவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு, பட்சிக்கும் அக்கினியில் பங்கடைவார்கள்.

2. விசுவாசத்தைப் பாதுகாக்கிறவர்களுக்கு மிகுந்த பலனுண்டு.

ஆ. அரசியல் காரணங்களால் சுவிசேஷம் தடைபண்ணப் பட்ட நாடுகளில், குறிப்பிட்ட வேளைகளில் ஒவ்வொரு விசுவாசியின் ஜீவியத்திலும் கிறிஸ்துவோடுள்ள வாழ்க்கையிலிருந்து பின்வாங்கிப் போகத்தக்கதான சோதனைகள் மிகக் கடுமையாக இருக்கும்.

இ. இந்த வேதபகுதியிலுள்ள எச்சரிப்பு நம் ஒவ்வொருவருக்கும் உரியது. குறிப்பாக, நம்மிடையே விசுவாசத்தைக் கைவிடும்படியாகக் கடுமையாகச் சோதிக்கப்படுகிறவர்களுக்கும், ஏற்கெனவே விசுவாசத்தைக் கைவிட்டவர்களுக்கும் இது பொருந்தும். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவினிடம் திரும்புங்கள். அவர் உங்களைப் பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்தி, உற்சாகப்படுத்துவாராக!

விசுவாசம்
எபிரெயர் 11:1-3

அ. 11-ஆம் அதிகாரத்தில் எபிரெய நிருபக்காரன் ஒரு விசுவாசியின் விசுவாசத்தை இரண்டு விதங்களில் விளக்குகிறார்:

1. நம்முடைய வருங்காலத்திற்காகத் தேவன் கொடுத்த வாக்குத்தங்களுக்காக ஒருவர் தேவனை நம்பப் பண்ணும்படியான விசுவாசம்.

2. பெரும் கஷ்டங்கள், உபத்திரவங்கள் மத்தியில் ஒருவர் இருக்கும் பொழுது அவரைத் தாங்கும் படியாகத் தேவனில் வைக்கும் விசுவாசம்.

ஆ. அதன் பின் 11,12-ஆம் அதிகாரங்கள் முழுவதும் விசுவாசிகள் விசுவாசத்தைப் பாதுகாக்கும்படியாக

1. விசுவாசத்தின் வார்த்தைகள், புத்திமதிகள், எச்சரிப்புகள் போன்றவற்றையும்,

2. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் மாதிரிகளையும் எழுதி அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

1. விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (11:1,2).

அ. வசனம் 1. விசுவாசமானது நம்புகிறவைகளின் உறுதியாயிருக்கிறது. இங்கே "விசுவாசம்" என்பது, உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டியது, அசைபாத உணர்வுடையது, தேவன் கூறிய உண்மை பற்றி நிச்சயிப்பது என்பதாகும்.

ஆ. இங்கே "நம்புதல்" என்பதின் அர்த்தம், வருங்காலத்தில் சம்பவிக்கும்படியாக தேவன் தமது ஜனத்திற்கு வாக்குத்தத்தம் பண்ணினவைகளைத் தைரியத்தோடு எதிர்பார்ப்பது என்பதாகும்.

இ. இந்த விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபிரெயர் 11:6). நாம் முற்றிலும் தேவனுக்குப் பிரியமாயிருக்கும்படிக்கும், அவர் முற்றிலும் நம்மில் பிரியமாயிருக்கும்படிக்கும் இத்தகைய விசுவாசம் நமக்கிருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். தேவன் நம்மில் இந்த அனுபவத்தைக் காணும் போது, இயேசுவானவர் தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்த போது அவர் பேசிய அதே வார்த்தைகளை நம்மோடு பேசுவார்: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத்தேயு 3:17).

ஈ. வசனம் 1. "(விசுவாசம்) காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." தேவனுடைய வார்த்தையில் வாக்குப்பண்ணப்பட்டதும், நம் கண்கள் காணாததுமான காரியங்கள் நிச்சயம் நிறைவேறும் என நம் இருதயங்களில் நிச்சயம் நமக்கிருக்கவேண்டும். கீழ்க்கண்டவைகளைப் பற்றிய நிச்சயம் நமக்குண்டு:

1. இந்த நிச்சயத்தை நாம் பிரதிபலிக்கும் விதத்தில் நம்முடைய தற்கால வாழ்க்கை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இந்த உலகத்தின் காரியங்கள், இந்த உலகம் செய்யும் காரியங்கள், இந்த உலகம் நமக்கு அளிப்பவைகள் இந்த உலகம் நமக்குச் செய்யக் கூடியவைகள் ஆகியவற்றை நம் வருங்காலம் சார்ந்திருக்கவோ, அதை அடித்தளமாகக் கொள்ளவோ, அல்லது அதைப்பே சிந்தித்திருக்கவோ கூடாது.

2. இந்த நிச்சயமே நம்முடைய வாழ்க்கையின் மையமாகவும், எண்ணமாகவும் இருக்க வேண்டும். இந்தப் பொருள்படவே ஆக்கியோன், "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று கூறுகிறார் (எபிரெயர் 10:38).

விசுவாசம்

எபிரெயர் 11:1-3

உ. நாம் எதைக் காணக் கூடாமலிருக்கிறோமோ, அதை நம்புறவைகளின் உறுதியும், நிச்சயமும் பற்றிய சில எடுத்துக் காட்டுகள்:

1. தற்காலத்துக்குரியது:

அ. நம்முடைய வருங்காலத்தின் அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறைவிடம் சந்திக்கப்படுகிறது.

ஆ. நம்முடைய திராணிக்கு மேலாக சோதிக்கப் படுவதற்கு இடங்கொடுக்க மாட்டார்.

இ. தீமையினின்று நம்மைக் காக்கிறார்.

ஈ. வானமண்டலங்களிலுள்ள ஆவிக்குரிய யுத்தத்தைச் செய்யும் தூதர்கள் நமக்குண்டு.

உ. தூதர்கள் நமக்குப் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்.

ஊ. காரியங்கள் மேலோட்டமாக எவ்விதம் தோற்றமளித்தாலும் தேவன் எப்போதும் நமக்கு நன்மையானவற்றையே செய்கிறார்.

எ. நம் இருதயங்களிலுள்ள நம்பிக்கை நமக்காகவும், மற்றவர்களுக்காகவும் உண்மையான ஜெபத்தை ஏறெடுக்கிறது. நாம் இந்த உலகத்தில் இருக்கும் காலமளவும் நம்பிக்கையிலிருந்து, நம்பிக்கைக்குக் கடந்து செல்கிறோம்.

2. வருங்காலத்துக்குரியது:

அ. நாம் மரித்ததும் நம் ஆவி சரீரத்தை விட்டுப் பிரிந்து, உடனடியாகப் பரதீசில் பரலோகப் பிதாவும், கிறிஸ்துவும் இருக்கும் இடம் செல்லுகிறோம் *(2 கொரிந்தியர் 5:6-8; பிலிப்பியர் 1:21-24)*.

ஆ. கிறிஸ்து தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் வெளிப்படும்போது, நாம் மகிமை வாய்ந்து உயிர்த்தெழுந்த சரீரத்தை பெறுவோம் *(தீத்து 2:13; யோவான் 14:1-3; 1 கொரிந்தியர் 15:51,52; 1 தெசலோனிக்கேயர் 4:13-18)*.

இ. கிறிஸ்துவிடமிருந்து மிகுந்த பலனைப் பெற்றுக் கொள்வோம்.

ஈ. கிறிஸ்துவோடு கூட ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவோம் *(2 கொரிந்தியர் 5:10; ரோமர் 14:10-12; 2 தீமோத்தேயு 2:12; வெளிப்படுத்தின விசேஷம் 20:6)*.

உ. என்றென்றுமாக புதிய பூமியிலும், புதிய எருசலேமிலும் வாழ்வோம் *(வெளிப்படுத்தின விசேஷம் 21:1-4)*. அதற்கேற்றபடி, நாம் நம்முடைய ஜீவியத்தை இந்த உலகத்தில் ஒழுங்குபடுத்துகிறோம். நாம் இதை நம் வாழ்க்கையின் மையமும், எண்ணமும் ஆக்குகிறோம். இதுவே நம்முடைய ஆராதனையின் மையமாகவுமிருக்கிறது.

ஊ. வசனம் 2. "அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்." தாங்கள் காணாமலிருந்ததை நம்புகிறவைகளின் உறுதியும், நிச்சயமுமாக கிறிஸ்துவின் யுகத்துக்கு முன் வாழ்ந்த விசுவாச வீரர்களின் பட்டியலை எபிரெய நிருபக்காரன் கொடுக்கிறான். ஓர் நீளப் பட்டியல் இந்த அதிகாரத்தில் உள்ளது:

1. வசனம் 4. ஆபேல்--விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்

விசுவாசம்

எபிரெயர் 11:1-3

(அவனால் காண முடியாத தேவனை அவன் விசுவாசித்தான், அவரை உண்மையில் காண முடியா விட்டாலும் அவரைக் கனப்படுத்தினான்).

2. வசனம் 5. ஏனோக்கு--விசுவாசத்தினாலே மரணத்தைக் காணாதபடிக்கு சரீரத்திலும், ஆவியிலும் எடுத்துக் கொள்ளப்பட்டான்.

3. வசனம் 7. நோவா--விசுவாசத்தினாலே தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்.

4. வசனம் 8,11,17 -- ஆபிரகாம் -- விசுவாசத்தினாலே 1) தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் தேவன் காண்பித்த இடத்திற்குப் புறப்பட்டான்; 2) வயது சென்றவனாயிருந்த போதிலும் தகப்பனாகும்படி பெலனடைந்தான்; 3) தேவனால் சோதிக்கப்பட்ட போது ஈசாக்கைப் பலியாக ஒப்புக் கொடுத்தான் (மரித்தோரிலிருந்து தேவன் அவனை எழுப்பக் கூடும் என விசுவாசித்தான்).

5. வசனம் 20--ஈசாக்கு--விசுவாசத்தினாலே வருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்.

6. வசனம் 21. யாக்கோபு--விசுவாசத்தினாலே வருங்காரியங்களைக் குறித்து யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்தான்.

7. வசனம் 22. யோசேப்பு--விசுவாசத்தினாலே இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப் பற்றிப் பேசி, தன் எலும்புகளைக் குறித்தும் கட்டளை கொடுத்தான்.

8. வசனம் 23. மோசேயின் பெற்றோர்கள்--விசுவாசத்தினாலே ஆண் பிள்ளைகள் எல்லாரும் கொல்லப்பட வேண்டுமென்ற இராஜாவின் கட்டளைக்கு எதிராக, மோசேயை மூன்று மாதம் ஒளித்து வைத்தார்கள். ஏனெனில், அவன் பெற்றோர் அவனை அசாதாரணமான பிள்ளையாகக் கண்டார்கள் (அவனுடைய வாழ்க்கைக்கு தேவனுடைய திட்டங்கள் உண்டென்று விசுவாசித்தார்கள்).

9. வசனம் 24-28. மோசே--விசுவாசத்தினாலே

1) பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து

2) எகிப்தில் இதர இஸ்ரவேலுடன் கஷ்டப்படுவதைத் தெரிந்து கொண்டு

3) ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டு வெளியேறி,

4) கர்த்தரின் வாக்குப்படி இஸ்ரவேலரின் முதற்பலன் கொல்லப்படாமல் இருக்கும்படி பஸ்காவை ஆசரித்தார்.

10. வசனம் 29,30. யூத ஜனங்கள்--விசுவாசத்தினாலே

1) சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைப் போலக் கடந்தார்கள்.

2) எரிகோ பட்டணத்தின் மதில்கள் விழுந்தது.

விசுவாசம்
எபிரெயர் 11:1-3

11. வசனம் 31. ராகாப் வேசி--விசுவாசத்தினாலே வேவுகாரரை ஏற்றுக் கொண்டு, மற்றவர்களோடே கூடச் சேதமாகாதிருந்தாள்.

12. வசனம் 32. கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்-- விசுவாசத்தினாலே செய்த மகத்தான காரியங்களை 33-முதல் 38 வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறோம்.

எ. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய இவர்கள் யாவரும் விசுவாசத்தினால் ஜீவித்து, விசுவாசத்தோடே மரித்தார்கள். அதில் முக்கியமானது யாதெனில், அவர்கள்:

1. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி, அணைத்துக் கொண்டார்கள். (எபிரெயர் 11:13,39).

2. தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு காத்திருந்தார்கள்.

3. அதிலும் மேன்மையான பரம தேசத்தையே (பரலோகம்) விரும்பினார்கள் (11:16).

ஏ. இன்றைக்கும் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்திருக்கும் நமக்கும் இந்த அனுபவங்கள் உண்டு! நாம் நம்முடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி, நமக்கடுத்ததும் தூரத்திலுள்ளதுமான வருங்காலத்தைப் பற்றி தேவன் மேல் உள்ள விசுவாசத்தை நம் நடக்கையில் பிரதிபலிக்கிறோம். நாம் நம்முடைய விசுவாசத்தைப் பேசுகிறோம், விசுவாசத்தினால் ஜீவிக்கிறோம், விசுவாசத்தையே சிந்திக்கிறோம். விசுவாசத்தையே பாடுகிறோம்!

ஐ. தேவன் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கும், சபை யுகத்திலுள்ள விசுவாசிகள் அனைவருக்கும் அளித்த நாட்களின் முடிவுக்கான வாக்குத்தத்தங்களை நிறைவேற்று வதற்கான காலத்தைத் திட்டமிட்டிருக்கிறார் எபிரெய நிருபக்காரன் இவ்விதம் கூறுகிறார்: "அவர்கள் நம்மை யல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (11:40).

ஆதலால், கீழ்க்கண்டவற்றில் அவர்கள் நம்மோடு பங்கு பெறுவார்கள்:

1. உயிர்த்தெழுதலில்

2. நாம் மகிமை வாய்ந்த சரீரத்தைப் பெறும் போது.

3. கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு முன் நாம் நிற்கும் போது.

4. கிறிஸ்துவோடுள்ள 1000 வருட ஆளுகையின் போது

5. புதிய எருசலேமிலும், புதிய பூமியிலும்

ஒ. இவ்வுலகத்தின் தற்போதைய தேவைகள் அல்ல, மேற்கண்ட முக்கியமான காரியங்களே ஒரு விசுவாசியின் விசுவாசமாகும். நாம் இவற்றைக் காணாமலிருந்தாலும் இவையே நம்முடைய நம்பிக்கையாக, நிச்சயமாக இருக்கிறதென்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

2. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (11:3).

விசுவாசத்திற்கு உண்டாகும் பாடுகளும், உபத்திரவங்களும் (எபிரெயர் 12:1-13)

முன்னுரை

அ. இதுவரைக்கும் எபிரெய நிருபக்காரன் கீழ்க்கண்டவற்றைத் தெளிவுபடுத்தினார்:

1. கிறிஸ்து கடந்த காலத்திலோ அல்லது நிகழ் காலத்திலோ எல்லா சிருஷ்டிகளிலும் எந்த விதமானஊழியமானாலும், மனுஷரானாலும் அல்லது பிரிவினரானாலும் அவற்றையெல்லாம் விட மேன்மை உள்ளவர் (அதிகாரங்கள் 1-7).

2. பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியர்களைக் காட்டிலும் கல்வாரியில் நிறைவேற்றிய கிறிஸ்துவின் கிரியையும், இப்பொழுது தேவனுடைய மகா பிரதான ஆசாரியராக பரலோகத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் செய்யும் ஊழியமும் மகா மேன்மையுள்ளது (அதிகாரங்கள் 8-10).

3. நம்முடைய விசுவாசமே தேவனைப் பிரியப்படுத்துகிறது (அதிகாரம் 11)

ஆ. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நேராகத் தன் கவனத்தைச் செலுத்துவதுடன் தனது நிருபத்தை ஆக்கியோன் முடிக்கிறார். நாம் பாடுகளினாலும், உபத்திரவங்களினாலும் துன்புறும்போது நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொள்வதே முதற்கண் கவனிக்கப்படத்தக்கதாகும்.

1. கிறிஸ்துவின் பாடுகளை நீங்கள் கவனிப்பீர்களேயானால் உங்களுடைய பாடுகளின் வேளையில் இளைப்படையவும், சோர்ந்து போகவும் மாட்டீர்கள் (12:1-4)

அ. வசனம் 1. "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க." இது நீண்ட தூரத்துக்கு ஓடும் விளையாட்டுப் போட்டியைப் போன்றது. நாம் இந்த ஓட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறோம். "மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள்" பழைய ஏற்பாட்டில் விசுவாசத்திற்காக வாழ்ந்த பரிசுத்தவான்கள். இவர்கள் அனைவரும் வழி நெடுகிலும் நின்று கொண்டு, பந்தயத்தில் ஓடும் நாம் அவர்களைக் கடந்து செல்கையில் நம்மைப் பெருமளவில் ஊக்குவித்து, உற்சாகப்படுத்துகிறார்கள் (1 தீமோத்தேயு 6:12). இந்தப் பாதை ஒரு வட்டமான அரங்கத்துக்குள்ளேயே உள்ளது. ஆதலால்தான் பூர்வகால விசுவாச வீரர்கள் பெருமளவில் நம்மைச் சூழ்ந்து நிற்கின்றனர்.

ஆ. வசனம் 1. "பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு." உன்னதமான சாட்சிகள் நம்மை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறபடியால், நாம் எந்த விதத்தில் ஓட வேண்டுமோ அந்த விதத்தில் முன்னோக்கி ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும். அதன் பொருட்டு தவிர்க்கப்பட வேண்டியவைகளை நாம் முற்றிலும் உதறித் தள்ள வேண்டும்:

1. நம்முடைய ஓட்டத்தைத் தாமதப்படுத்தும் அநாவசியமான பாரங்கள் அகற்றப்பட வேண்டும். பாரம் அற்றவர்களாக நம் பிரயாணத்தைத் தொடர வேண்டும். அதாவது, இந்த உலகத்தின் காரியங்களை நாடுதல், அடைதல், அவற்றில் ஈடுபடுதல் போன்றவைகள் தள்ளிவிடப்பட வேண்டும்.

2. நெருங்கி நிற்கும் பாவம்: விசுவாசி ஆவிக்குரிய ஓட்டத்தைத் தொடரக் கூடாதபடிக்கு பாவம் அவனை முடவனாக்குகிறது. அவன் மனந்திரும்பினா லொழிய பந்தயத்திலிருந்து தள்ளப்படுவது நிச்சயம்.

விசுவாசத்திற்கு உண்டாகும் பாடுகளும், உபத்திரவங்களும் (எபிரெயர் 12:1-13)

இ. வசனம் 1. "நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." "பொறுமையோடே ஓடுதல்" என்பதின் அர்த்தம், நம்முடைய சத்துருக்களுக்கு எதிராக நாம் கடினமான ஓட்டத்தில் ஓடிக் கொண்டிருப்பதால் நமக்கு சகிப்புத் தன்மையும், தாங்கிக் கொள்ளும் தன்மையும் அவசியம் என்பதாகும்.

ஈ. விசுவாச வீரர்கள் தங்களுடைய காலத்தில் இப்படிப்பட்ட ஓட்டத்தையே ஓடினார்கள் (எபிரெயர் 11:33,38). நாம் இப்பொழுது ஓடிக்கொண்டிருப்பதும் இத்தகையதே! பூர்வ நாட்களின் வீரர்களைப் போல நாமும் பொறுமையோடே ஓடி நம் ஓட்டத்தை முடிக்க வேண்டும்!! பவுல் தன் ஊழியத்தின் முடிவை நெருங்கிய போது தீமோத்தேயுவுக்கு இவ்விதம் எழுதுகிறார்: "நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்." (2 தீமோத்தேயு 4:7).

உ. வசனம் 2. "விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி," இதன் அர்த்தம் என்னவெனில், நாம் இரண்டு காரியங்களை, அதாவது, உலகத்தையும் அதிலுள்ளதையும்; இயேசுவையும் ஒருங்கே நோக்கிக் கொண்டிருக்கக் கூடாது. அநேகப் பாடுகள், அவமானங்கள் ஆகியவற்றின் நடுவில் தம் விசுவாசத்தை காத்துக் கொண்டு, மனுக்குலத்தின் பூரணமான எடுத்துக் காட்டாகத் திகழும் இயேசுவை, இயேசுவை மாத்திரமே நாம் நோக்க வேண்டும். அவருடைய விசுவாச வாழ்க்கை நமக்கு உயிரூட்டுவதாக!

ஊ. வசனம் 2. "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து," தம்மை ஆண்டவரும், இரட்சகருமாக விசுவாசித்து, ஏற்றுக் கொள்ளப் போகிறவர்களுக்கு உண்டாகப் போகும் சந்தோஷத்தை, தம்முடைய பாடுகளுக்கும், வேதனைகளுக்கும் அப்பால் கண்டு, இயேசுவானவர் கல்வாரிக்குச் சென்றார் (யோவான் 15:11,13).

எ. "அவமானத்தை எண்ணாமல்" என்பதின் அர்த்தம், தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு வரப்போகும் சந்தோஷத்துடன், தம்முடைய கல்வாரிப் பாடுகளையும், அவமானத்தையும் ஒப்பிட்ட போது அவை ஒன்றுமேயில்லை யென்று கிறிஸ்து கண்டார் என்பதேயாகும்.

ஏ. வசனம் 2. "தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்." புதிய ஏற்பாட்டில் கல்வாரியானது, பரலோகத்தின் பிதாவின் வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள (வல்லமையும், அதிகாரமும்) கிறிஸ்துவோடு எப்போதும் இணைக்கப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 2:23,32,33; ரோமர் 8:34; எபிரெயர் 1:3). இதனிமித்தம், கல்வாரி அபஜெயமல்ல, அது எப்போதும் ஜெயமேயாகும். (கொலோசெயர் 2:12).

ஐ. வசனம் 3. "ஆகையால் நீங்கள் இளைப் புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்.":

1. நீங்கள் சோர்ந்து, உங்களுடைய ஓட்டத்தை முடிக்க முடியாது என உணரும்போது, கிறிஸ்துவின் பாடுகளையும், அவமானங்களையும் கவனமாகக் கவனியுங்கள்.

விசுவாசத்திற்கு உண்டாகும் பாடுகளும், உபத்திரவங்களும் (எபிரெயர் 12:1-13)

2. கிறிஸ்துவைப் போல, நீங்கள் சகிக்கவிருக்கும் பாடுகள், அவமானங்களுக்கு அப்பால், உங்களுடைய சுவிசேஷ ஊழியம், கிறிஸ்துவுக்காகத் தொடர்ந்து சாட்சியாயிருத்தல் ஆகியவற்றின் மூலம் நீங்கள் ஆதாயம் பண்ணவிருப்போரின் சந்தோஷத்தை நோக்குங்கள். அப்படியானால் சுவிசேஷத்திற்காக நீங்கள் அநேகத் துன்பங்களையும், அவமானங்களையும் நீங்கள் சகிக்கும்படி அழைக்கப்படும் பொழுது, இது உங்களை இருதய இளைப்பிலும், சோர்விலுமிருந்து பாதுகாக்கும்.

ஒ. வசனம் 4. "பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே." "இரத்தஞ் சிந்தப்பட்டத்தக்கதாக" என்பது இரத்த சாட்சியைக் குறிப்பதாகும். ஒருவேளை "பாவம்" என்பது கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களினால் விசுவாசத்தைக் கைவிடுவதைக் குறிப்பதாக இருக்கலாம். இருப்பினும், கிறிஸ்துவுக்காக நாம் படவேண்டிய பாடுகளும், அவமானங்களும் கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மனுக்குலத்தின் பாவங்களுக்காகத் தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுத்தபோது, பொல்லாத மனிதரின் கைகளினால் பட்ட பாடுகளுக்கும், அவமானத்துக்கும் ஒப்பிடத் தக்கவைகளே அல்ல.

ஓ. கிறிஸ்து அவதரிப்பதற்கு முன்னர் தேவனுக்கு சமமாயிருப்பதைப் பற்றிக் கொள்ளாதவராயிருந்தார். தம்மைத் தாமே தாழ்த்தி, பேரும் புகழுமற்றவராக இவ்வுலகத்தில் பிரவேசிக்க விரும்பினார். மனுக்குலத்தின் பாவங்களுக்காகப் பாவிகளின் கைகளினால் பாடுபடவும், அவமானத்தின் சின்னமான சிலுவையின் மேல் அறையப்படவும் தம்மைத்தாமே தத்தம் செய்தார் (பிலிப்பியர் 2:6-8).

ஔ. ஆதலால், நமக்கு:

1. பெரும் துன்பங்கள், உபத்திரவங்கள் மத்தியில் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்ட சாட்சிகள் மேகத்தைப் போல சூழ்ந்திருக்கிறார்கள்.

2. உங்களுடைய விசுவாச ஓட்டத்தில் இன்னல்களும், உபத்திரவங்களும் எதிர்ப்படும் வேளையில் அவற்றை சகித்த கிறிஸ்துவின் ஒப்பற்ற மாதிரியைக் கவனிப்பீர்களானால் இளைப்படையவோ, அல்லது சோர்ந்து போகவோ மாட்டீர்கள்!

2. சிட்சை நம்மை சரிப்படுத்துகிறது என எண்ணி சகியுங்கள் (12:5-9).

அ. வசனம் 5,6. "பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்." இந்த வாசகத்தை ஓர் கேள்வியாகவும் எடுக்கலாம். மகனை சிட்சித்து, ஒழுங்குபடுத்தும் இந்த மேற்கோள் நீதிமொழிகள் 3:11,12-லிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இது அன்பான ஓர் தகப்பனின் சாதாரண நடத்தையே என வேதாகமம் கூறுகிறது! இருப்பினும், விசுவாசிகளில் பெரும்பாலானோர் கிறிஸ்துவோடுள்ள தங்களுடைய பகுதியை மறந்து போகின்றனர்.

ஆ. தகப்பன் தன் குமாரனை கடிந்து கொண்டு (பிரம்பினால், தண்டனையினால்), பயிற்சி (கல்வி) அளிக்கிறார். தேவனும் விசுவாசிகளை (அவருடைய புத்திரர்) நேசிப்பதால் அவர்களை அடித்தும், தண்டித்தும் பயிற்சி அளிக்கிறார். அவர்களுடைய வருங்காலத்தைக் குறித்து அவர் கரிசனை உடையவராயிருக்கிறார். அவர்கள் அவருடைய புத்திரர் அன்றோ! இக்காரணத்தினால், நாம் நம்முடைய பரம பிதாவினால் ஒழுங்குபடுத்தப்படும்போது, சோர்ந்து போவதற்குப் பதில் தைரியப்பட வேண்டும்.

விசுவாசத்திற்கு உண்டாகும் பாடுகளும், உபத்திரவங்களும் (எபிரெயர் 12:1-13)

இ. லவோதிக்கேயாவிலுள்ள விசுவாசிகளுக்கு இயேசு இவ்விதம் கூறுகிறார்: "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்," (வெளிப்படுத்தின விசேஷம் 3:19). நீதிமொழிகள் ஆக்கியோன் இவ்விதம் கூறுகிறார்: "பிள்ளையைத் தண்டியாமல் விடாதே - நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே" (நீதிமொழிகள் 23:13,14).

ஈ. வசனம் 7. "நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்." நாம் சுவிசேஷத்திற்காக உபத்திரவங்களையும், ஜீவியத்தில் சிட்சைகளையும் சந்திக்கும்போது அவைகளைப் பரலோகத் தகப்பனிடமிருந்து வந்த சிட்சைகளாகக் காண வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், நித்திய நன்மைக்காகவும் அவற்றை அவர் அனுமதிக்கிறார் (பரலோக அங்கீகாரம் அளிக்கிறார்).

உ. வசனம் 8. "சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே." விசுவாசிகளில் அநேகர் சிட்சைகள், கஷ்டங்கள், உபத்திரவங்களைக் காணும் போது அவை தாக்குறைவானது, அழிவுக்குரியது, கிறிஸ்தவனாயிருக்க அருகதையற்றது என்பது போலக் காண்கின்றனர். ஆதலால், ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியாகிய தேவனிடத்திலிருந்து வரும் சிட்சை, பயிற்சி ஆகியவற்றைப் புறக்கணிக்கின்றனர்.

இப்படிப்பட்டவர்கள் வேசிப் பிள்ளைகளே, இந்த மனப்பான்மையில் அவர்கள் நிலைத்திருக்கும் வரைக்கும் அவர்கள் தேவனுடைய குடும்பத்தின் ஓர் அங்கமாகத் திகழ முடியாது. வெகு சீக்கிரத்தில் இந்த அடிப்படை சுவிசேஷ சத்தியத்தைக் கொண்ட சபையிலிருந்து மறைந்தே போவார்கள்.

ஊ. வசனம் 9. "நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க," பூர்வ காலத்தில் பிள்ளைகளை உருவாக்குதல் சிட்சை ஓர் பங்காக உலக அளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது (நீதிமொழிகள் 22:6; 13:24; லூக்கா 6:40). ஆதிச் சபையிலும் இது எதிர்பார்க்கப்பட்டது (எபேசியர் 6:4; 2 தீமோத்தேயு 3:16; தீத்து 2:4). இவ்வித சிட்சையினால், பிள்ளைகள் தங்கள் பெற்றோரை மதித்து, கனப்படுத்தி வந்தார்கள்.

எ. இந்நாட்களில் அநேக மேலை நாடுகளிலும், தொழில் வர்க்க சமுதாயத்திலும் பிள்ளைகளுக்கு சிட்சை ஏற்றதல்ல எனக் கருதப்படுவது நமக்குப் பயத்தையும், திகிலையும் ஊட்டுவதுடன், அவர்தம் வாழ்வை சீர்குலைத்து, சமுதாயத் தரக்குறைவுக்கு வித்திடுகிறது! அமெரிக்காவில் நலவாழ்வு வட்டாரங்களில் பயிற்சியும், கல்வியும் பிள்ளைக்கு அழிவுண்டாக்கும் என போதிக்கப்படுகிறது ஓ. ஆதலால், நமக்கு:

ஏ. வசனம் 9. "நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா?" நம்முடைய பூமிக்குரிய தகப்பன்மார் நமக்களிக்கும் ஏற்ற பயிற்சிக்கும், சிட்சைக்கும் நாம் அடங்கி நடப்போமானால் இவ்வுலகில் நாம் பெரிதும் பயனடைவோம்.

விசுவாசத்திற்கு உண்டாகும் பாடுகளும், உபத்திரவங்களும் (எபிரெயர் 12:1-13)

நாம் நம்முடைய பரம தகப்பனுக்கு நம்மை அர்ப்பணித்து (கீழ்ப்படிந்து, அவரின் கீழ் அடங்கி), வாழ்க்கையின் பாடுகளையும், உபத்திரவங்களையும் ஏற்று ஜீவித்தால் ஆவிக்குரிய முதிர்ச்சியை நாம் அடைவதுடன், நித்திய ஜீவனையும் அடைவோம் (யாக்கோபு 1:2,3,12; 1 பேதுரு 1:7). அவரே நம் வாழ்க்கையை முற்றிலும் ஆட்கொள்ளுகிறார். நமக்கு மிகச் சிறந்தது இன்னதென்ற அவர் அறிந்து, நம்முடைய நன்மைக்காகவே இக்காரியங்களை அவர் அனுமதிக்கிறார்.

3. சிட்சையாக ஏற்றுக் கொள்ளும் துன்பங்கள் நீதியாக சமாதான பலனைக் தரும் (12:10-13).

அ. வசனம் 10. "அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள் இவரோ நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்." இங்கே நாம் நம்முடைய பூமிக்குரிய பெற்றோரும், நம்முடைய பரம பிதாவும் சிட்சிப்பதற்கு இடையிலான வேற்றுமையைக் காண்கிறோம்:

1. பூமிக்குரிய பெற்றோர் கொஞ்சக் காலம் மட்டுமே சிட்சித்தார்கள். அவர்கள் தங்களாலான சிறந்ததைச் செய்திருக்கலாம், ஆனால் தவறுகளை இழைத்தார்கள். சிலவேளைகளில், அவர்களுடைய இருதயங்களில் சொந்த விருப்புகள் இருந்தன. தற்காலத்தில் மட்டுமே சிட்சிப்பார்கள்.

2. மறுபக்கத்தில் நமது பரலோகப் பிதா நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் முடிவு முழுவதும் தொடர்ந்து நம்மை சிட்சிக்கிறார்.

நமக்காக வேண்டிய சிறந்த விருப்பங்கள் எப்போதும் அவர் இருதயத்திலுண்டு. நம்முடைய வருங்கால நன்மையைக் கருத்திற் கொண்டவரும், பூரண விருப்பங்களை உடைய பூரணப் பிதாவாக இருக்கிறார்.

ஆ. வசனம் 10. "இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு." நம்முடைய பரலோகப் பிதா நம்மை (அவருடைய பிள்ளைகளை) சிட்சிக்கும்போது, நாம் அவருடைய சாயலுக்கும், குணாசீலத்துக்கும் ஒத்தவர்களாக இருக்க வேண்டுமென்பதே அவருடைய இலட்சியமாயிருக்கிறது. இங்கே "பரிசுத்தம்" என்பதின் அர்த்தம் சரீரத்தின்படி தூய்மையையும், ஆவியின்படி குற்றமற்றவர்களுமாயிருப்பது; பாவத்திலிருந்தும் தீமையிலிருந்தும் வேறு பிரிக்கப்படுவது, சுத்தவான்களாயிருப்பது என்பனவாகும்.

இ. கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில் அப்போஸ்தலர் பவுல் நமக்கு இவ்விதம் கூறுகிறார்: "நாமெல்லாரும் ... ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே (கர்த்தருடையது) மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." (2 கொரிந்தியர் 3:18; மேலும் காண்க 2 பேதுரு 1:5-7; ரோமர் 5:3). தேவனுடைய ஒழுங்கில் வளருவதற்கான வழிமுறை உண்டு. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் இம்முறை தொடர வேண்டும். நம்முடைய வாழ்க்கையிலுள்ள இந்த முடிவுறா வேலையில் சிட்சைகளும், உபத்திரவங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன.

ஈ. வசனம் 11. "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்" எனவேதான் அநேகர் இதைப் புறக்கணித்து, தேவனுடைய பயிற்சித் திட்டத்திற்குள் பிரவேசிக்க மறுக்கின்றனர். இது தோட்டக்கலையிலிருந்து எடுக்கப்பட்ட உருவகம். அங்கே, வேதனை மிக்க நறுக்குதல் (சிட்சை) மிகுதியான பலனை (பரிசுத்தம்) உண்டாக்குகிறது என்பது உண்மையாகும்.

விசுவாசத்திற்கு உண்டாகும் பாடுகளும், உபத்திரவங்களும் (எபிரெயர் 12:1-13)

இயேசு தமது சீஷர்களுக்கு இவ்விதம் கூறினார்: "கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி (என்னுடைய பிதா) அதைச் சுத்தம் பண்ணுகிறார்" (யோவான் 15:1,2).

உ. வசனம் 11. "ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." இங்கே "அதில்" என்பது சிட்சையைக் குறிக்கிறது. இது சிட்சைகளுக்கும், உபத்திரவங்களுக்குமான மறைமுகமான குறிப்பாகும். தேவனுடைய பயிற்சித் திட்டம் (சிட்சைகளையும், உபத்திரவங்களையும் சகித்தல்) நீதியும், சமாதானமுமாகிய ஆவிக்குரிய அறுவடையைத் தரும். தங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் ஒழுங்குபடுத்தும் வேலையை ஏற்றுக் கொள்கிறவர்களுக்குள் தேவனோடுள்ள சமாதானம் உண்டாகும்.

ஊ. வசனம் 12,13."ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செம்மைப்படுத்துங்கள்." இது ஏசாயா 35:3, நீதிமொழிகள் 4:26 ஆகிய இரண்டிலுமிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் மேற்கோளாகும்.ஆதலால்.பாடுகள், உபத்திரவங்கள் மூலமாக ஆவிக்கேற்றபடி பெலப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியாகியதேவனுக்கு இடங்கொடுங்கள். வாடிப்போனக் கிளைகளை அவர் நறுக்கட்டும். உங்களுடைய பரிசுத்தத்தின் நேரானப் பெரும் பாதையில் தோன்றும் துன்மார்க்க, அவபக்தியான வளைவான, கூர்மையானத் திருப்பங்களை அவர் நேராக்கட்டும். உங்களுடைய ஆவிக்குரிய பாதையில் கிடக்கும் அவபக்தியென்னும் கொம்புகள், கற்கள், குண்டுகுழிகள் ஆகியவற்றை அவர் தாமே சுத்தப்படுத்தி, நிரப்பட்டும்.

எ. நெகிழ்ந்த கைகளும், தளர்ந்த முழங்கால்களும் ஆவிக்குரிய பெலவீனத்தைக் காட்டுகிறது. செவ்வையான பாதை என்பது பரிசுத்தத்தின் நேர்பாதையையே காட்டுகிறது.

ஏ. வசனம் 13. "முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு". உங்களை ஒழுங்குபடுத்துவதின் மூலம் (பாடுகளும் உபத்திரவங்களும்), நீங்கள் விசுவாச ஓட்டத்தில் தொடர்ந்து ஓடக் கூடாதபடிக்கு ஆவிக்குரிய முடமாயிராமல், பரிசுத்த ஆவியானவர்தாமே ஆவிக்குரிய ஆரோக்கியத்தை அளிப்பாராக!

முடிவுரை

அ. விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவோடுள்ள தங்களுடைய விசுவாசப் பந்தய ஓட்டத்தில் பாடுகளையும், உபத்திரவங்களையும் சந்திக்கின்றனர். இவர்களுடைய வாழ்க்கைப் போராட்டங்களையும், சுவிசேஷத்தினிமித்தமாக வரும் உபத்திரவங்களையும் தேவன் சிட்சையாகப் பயன்படுத்தி அவர்களுடைய நடக்கையை சரிப்படுத்தி, நீதியில் பயிற்சிக்கிறார்.

ஆ. பாடுகளையும், உபத்திரவங்களையும் சந்திக்கும் நமக்கு எபிரெய நிருபக்காரன் இவ்விதம் சொல்லுகிறார்:

1. கிறிஸ்துவும், பூர்வகால விசுவாச வீரர்களும் சகித்த பாடுகளையும், துன்பங்களையும் கவனித்துப் பாருங்கள்.

2. நமக்கு வரும் பாடுகளும், துன்பங்களும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும்படி தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறபடியால் அவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். அப்படியானால், நாம் ஆத்துமாவில் இளைப்புண்டு சோர்ந்து போக மாட்டோம். மேலும், இது நமக்கு தேவனோடுள்ள சமாதானத்தையும், பரிசுத்தத்தையும் அளிக்கிறது.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

விசுவாசத்திற்கு உண்டாகும் பாடுகளும், உபத்திரவங்களும் (எபிரெயர் 12:1-13)

இ. ஆதலால், இங்கே சில கேள்விகள் உள்ளன:

1. அடிப்படை சுவிசேஷ சத்தியங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டு, உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய வேலையைத் தொடரும்படிக்கு பரிசுத்த ஆவியானவரை நீங்கள் அனுமதிப்பீர்களா?

2. பாடுகள், உபத்திரவங்கள் மூலம் மென்மேலும் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாகத் தொடர்ந்து உருவாக்கும்படி அவரை அனுமதிப்பீர்களா?

3. இதற்காகவே உங்களுடைய வாழ்க்கையில் தேவன் பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுமதிக்கிறார் என்பதை நீங்கள் காண்கிறீர்களா?

தேவனுடைய கிருபை

எபிரெயர் 12:14-29

முன்னுரை

அ. விசுவாசத்தைக் கைவிடுகிறவர்களும், உதறித் தள்ளுகிறவர்களும் இந்த வேதாகமப் பகுதியில் கடுமையாக எச்சரிக்கப்படுகிறார்கள். சாதாரணமாக இவற்றை உண்டு பண்ணக் கூடியவற்றை விசுவாசிகள் தவிர்க்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. விசுவாசிகளுக்கிடையபே கசப்பு

2. மாம்ச இச்சை

3. கிறிஸ்துவுக்குள் தங்களுக்கிருக்கும் புதிய " சேஷ்ட புத்திரத்தை" உலகத்தின் காரியங்களோடும் வழிகளோடும் பரிமாற்றல் செய்கின்றனர்.

ஆ. இந்த எச்சரிப்பை ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து பரலோகப் பிதாவுக்கு ஊழியஞ் செய்து, அவரைக் கனப்படுத்துகிறவர்கள் கிறிஸ்து வெளிப்படும்போது அவரைக் கண்டு, தேவனோடும் கிறிஸ்துவோடும் அசைபாத ராஜ்யத்தில் என்றென்றும் வாசம் பண்ணுவார்கள்.

1. சமாதானத்தோடு ஜீவித்து, பரிசுத்தத்தைப் பின்தொடரும்படி பிரயாசப்படுகிறவர்கள் தேவகிருபையை இழந்து போகமாட்டார்கள் (12:14-24).

அ. வசனம் 14. "யாவரோடும் சமாதானமாயிருக்கவும் நாடுங்கள்." "நாடுங்கள்" என்பதின் அர்த்தம் முயற்சியுங்கள், ஆவலோடு பின்தொடருங்கள், என்பதாகும். கூடுமானால் உங்களால் ஆனமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் (குறிப்பாகக் கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய சகோதரர், சகோதரிகளுடன்--ரோமர் 12:18; சங்கீதம் 34:14). "சமாதானம்" என்பதின் அர்த்தம் ஒருவரோடொருவர் ஒற்றுமையாயிருத்தல், இளைப்பாறுதல், அமைதியாக வாழ்தல், மற்றவரோடு நல்லுறவுடனிருத்தல் போன்றதாகும்.

ஆ. வசனம் 14. "பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." "பரிசுத்தம்" என்பதின் அர்த்தம் நடக்கையில் தூய்மை; சுத்திகரிக்கப்படுதல், தீமையிலிருந்தும் உலகத்திலிருந்தும் வேறுபிரிக்கப்பட்டு கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்படுதல் என்பதாகும். ஒருவர் இயேசுவை ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொண்டவுடன் நிகழ்வதாகும் (எபிரெயர் 10:10; எபேசியர் 5:26), இது சுத்திகரிக்கப்படுதலின் உடனடி வேலையாகும் தனது முதலாம் நிருபத்தில் பேதுரு இவ்விதம் எழுதுகிறார்: "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள், நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1 பேதுரு 1:15,16; லேவியராகமம் 11:44; மேலும் காண்க 1 யோவான் 3:2,3).

இ. "தரிசிப்பதில்லையே." இங்கே "கர்த்தரைத் தரிசிப்பது" என்பதின் அர்த்தம், சபை எடுத்துக் கொள்ளப்படும்போது அல்லது, ஒருவர் மரிக்கையில் அவரது ஆவி பிரிந்து பரலோகத்தில் கர்த்தரைத் தரிசிப்பதாகும் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்திலும், பிதாவோடுள்ள அர்ப்பணிப்பிலும் தொடர்ந்து இருப்பவர்கள் தேவனுடைய பார்வையில் பரிசுத்தர்களாகத் திகழ்வதுடன், நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

தேவனுடைய கிருபை

எபிரெயர் 12:14-29

ஈ. வசனம் 15-17. "ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் வேசிக்கள்ளனாகவும்... சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்." "தேவனுடைய கிருபையை இழந்து போதல்" என்பதின் அர்த்தம் கீழ்த்தரமாதல், விழுந்து போதல், தரக்குறைவாதல், குறைந்து போதல், தேவையிலிருத்தல், தாழ்வடைதல், தேவனுடைய அளவற்ற தயவை இழந்து போதல் என்பனவாகும். கிறிஸ்துவின் மூலமாகப் பெறும் அளவற்ற தேவதயவை விசுவாசிகள் இழந்து போவதற்கான சில காரணங்கள்:

1. கசப்பான வேர் முளைத்தெழும்ப அனுமதிப்பது—மற்ற விசுவாசிகளின் மேல் கசப்பெண்ணம் கொள்வதாகும். வளர்ந்து, செடியாகி, கசப்பான கனிகளைத் தரும் வேருக்கு இது ஒப்பாகும். விசுவாசிகளின் வாழ்க்கையில் கசப்பு வளரும்படி அனுமதிக்கப்படும்போது, அது அவர்களின் ஜீவியத்தைத் தீட்டுப்படுத்தி, தேவனுடைய சமூகத்தில் நிற்பதற்குத் தகுதியற்றவனாக்குகிறது.

2. வேசிக்கள்ளன் ஆதல்—இதன் பொருள் நேர்மையற்றப் பாலுறவு, விபச்சாரம் ஆதல் (குறிப்பாக ஆண் விபச்சாரரைக் குறிக்கிறது). திருமணமாகாத, திருமணமான ஆண், பெண்களிடையே உள்ள தகாத பாலுறவுகள் ஆகும்.

3. சீர்கெட்டவனாதல்—சீர்கெட்ட வாழ்க்கைக்கு ஏசாவை ஆக்கியோன் மேற்கோள் காட்டுகிறார். அவன் தனது சேஷ்டபுத்திரனுக்குரிய சுதந்திர உரிமையை ஒரே ஒரு போஜனத்துக்காகப் பரிமாறிக் கொண்டான் (ஆதியாகமம் 25:29-34). இதே விதத்தில், விசுவாசிகள் மேன்மையான கிறிஸ்தவ அனுபவங்களை (கிறிஸ்துவின் மூலமுள்ள அவர்களுடைய சேஷ்டபுத்திர உரிமைகளை) இவ்வுலகக் காரியங்களை அடைதல், இவ்வுலக வழிகளில் ஈடுபடுதல் போன்றவற்றோடு பரிமாற்றம் செய்து கொள்ளுகின்றனர்.

உ. வசனம் 18-21. "அன்றியும் தொடக் கூடியதும், அக்கினி பற்றியெரிகிறதுமான மலையினிடத்திற்கும்,... நீங்கள் வந்து சேரவில்லை;" இந்த வசனங்கள் சீனாய் மலையில் பிரமாணம் கொடுக்கப்பட்டபோது நிலவிய பயங்கரமான காட்சியை வருணிக்கிறது. (யாத்திராகமம் 19:10-25; 20:18,19; உபாகமம் 11:12; 5:22-27). இந்த விளக்கமானது, பரிசுத்தமான தேவனுடைய பிரசன்னத்துக்கு பரிசுத்தமற்ற மனுக்குலம் வரக் கூடாமலிருக்கிறதை மையமாகக் கொண்டுள்ளது:

1. தொடக்கூடியதும், அக்கினி பற்றியெரிகிறதுமான மலை.

2. பாவிகளுக்கும், பொல்லாதவர்களுக்குமான மந்தாரம், இருள், பெருங்காற்று.

3. தேவனுடைய நியாயத் தீர்ப்பைக் (கடைசி காலத்தைக்) குறிப்பிடும் எக்காள முழக்கம்.

4. மலையிலிருந்து கர்த்தரின் பயங்கரமான சத்தம் இவ்விதமாகக் கட்டளையிட்டது: ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால், அது கல்லெறியப்பட வேண்டும். தேவனோடு விசேஷித்த ஐக்கியம் கொண்டிருந்த மோசேயுங்கூட "நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது." (வசனம் 21).

தேவனுடைய கிருபை

எபிரெயர் 12:14-29

ஊ. வசனம் 22-24. இந்த பயங்கரமானதும், பழையதுமான தேவ உடன்படிக்கையின் கீழ் நாம் ஜீவிக்கவில்லை என்பதை நாம் காணும்படி விரும்பி எபிரெய நிருபக்காரன் இதை எழுதுகிறார். கிறிஸ்துவின் மூலமாக உள்ள புதிய தேவ உடன்படிக்கை நம்மீது அவர் பாராட்டிய தேவ கிருபையையும், அவருடைய அன்பையும், அவருடைய அளவற்ற தயவையும் வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு விதத்திலும் புதிய உடன்படிக்க பழையஉடன்படிக்கையை விட மேன்மையானதே! இதில் மிக முக்கியமானது யாதெனில், இதினிமித்தமாக (குறிப்பாக கிறிஸ்துவின் தெளிக்கப்பட்ட இரத்தத்தினால்) தேவனுடைய சமூகத்தில் பரலோகத்தில் உள்ள யாவருக்கும் முன்பாக நாம் பயமும், திகிலும் இன்றி தைரியமாகப் பிரவேசிக்கிறோம் (எபிரெயர் 4:16; 10:22; எபேசியர் 3:12)!

எ. ஏதோ ஒன்று நிச்சயம் அவசியம்; ஆம்! நம்முடைய பகுதியில் சில முயற்சிகள் அவசியமே. அவையாவன:

1. யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்த மாயிருக்கவும் போராட வேண்டும்.

2. நேர்மையற்றப் பாலுறவு சோதனைகளை மறுக்க வேண்டும்.

3. இவ்வுலகத்தின் அநித்தியமான சந்தோஷங்களை வெறுக்க வேண்டும்.

2. அவருடைய எச்சரிப்பை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் தேவகிருபையை இழந்து போக மாட்டார்கள் (12:25-27).

அ. வசனம் 25. "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்:" "பேசுகிறவர்" என்பது, இஸ்ரவேலருக்கு நியாயப் பிரமாணத்தின் கட்டளைகளைக் கொடுத்த போது சீனாய் மலையில் மோசே மூலம் அவர்களோடு பேசிய பிதாவாகிய தேவனைக் குறிக்கிறது (உபாகமம் 5:1-22).

ஆ. வசனம் 25 "ஏனெனில் பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப் போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப் போவோம்?" இங்கே "விலகினவர்கள்" என்பது வனாந்திரத்திலிருந்த இஸ்ரவேலரைக் குறிக்கிறது. இவர்கள் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமற் போனபோது, தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும், கோபாக்கினைக்கும் தப்பவில்லை. (உபாகமம் 8:19,20).

இ. மோசே மூலம் பூமியில் எச்சரிக்கப்பட்டபொழுது, வனாந்தரத்திலிருந்த இஸ்ரவேலர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும், கோபாக்கினைக்கும் தப்பவில்லையானால், பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்த கிறிஸ்துவின் (மோசேயைக் காட்டிலும் பெரியவர்) விசுவாசத்தைக் கைவிடுவோமானால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும், கோபத்துக்கும் தப்புவோமென்று எவ்விதம் எதிர்பார்க்கக் கூடும்? (எபிரெயர் 1:1-3; 4:14; 6:20; 7:26; 9:24).

ஈ. வசனம் 26. "அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப் பண்ணிற்று." சீனாய் மலையில் மோசே மூலம் தேவன் இஸ்ரவேலருடன் பேசிய பொழுது பூமி குலுங்கி அசைந்தது (யாத்திராகமம் 29:18; நியாயாதிபதிகள் 5:5; சங்கீதம் 68:8; 77:18; 114:7).

தேவனுடைய கிருபை

எபிரெயர் 12:14-29

உ. வசனம் *26*. "இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப் பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்". இது ஆகாய் தீர்க்கதரிசியின் வார்த்தைகளின் மேற்கோளாகும்: "கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன்" (ஆகாய் *2:6*). இந்த வார்த்தைகளை எபிரெய நிருபக்காரன் எடுத்து, இப்பொழுதிருக்கிற வானமும் பூமியும் ஒழிந்து போகும் நாளைப் பற்றிக் கூறுகிறார் (2 பேதுரு *3:10,12;* மத்தேயு *24:29,35;* மேலும் காண்க ஏசாயா *13:10; 34:4*).

ஊ. வசனம் *27*. "இன்னும் 'ஒருதரம்' என்கிற சொல்லானது அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது." கிறிஸ்து மறுபடியும் வந்து, தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, நாம் இப்பொழுது காணும் மனுஷர் வாழும் தற்கால உலகம் அகன்று போகும் (வெளிப்படுத்தின விசேஷம் *11:15*).

எ. வசனம் *27*. "அசையாதவைகள் நிலைத்திருக்க." காலத்தின் முடிவில் தற்போதைய வானங்களும், பூமியும் அசைந்து மாறிப் போகும்போது அசையாமல் நிலைத்திருப் பவர்கள்:-

1. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, உண்மையாய் நிலைத்திருப்பவர்கள்.

2. பரிசுத்த ஆவியினால் மகிமையடைந்து கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மாற்றப்பட்டவர்கள் (2 கொரிந்தியர் *3:18*). இவர்கள் நித்திய ஜீவனை அடைந்து, தேவனோடும், கிறிஸ்துவோடும் நித்திய ராஜ்யத்தில் வாசம் செய்வார்கள்!

3. தொடர்ந்து பயத்தோடு அவரை ஆராதிக்கிறவர்கள் தேவ கிருபையை இழந்துபோக மாட்டார்கள் (12:28,29).

அ. வசனம் *28*. "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் ...கிருபையைப் பற்றிக்கொள்ளக் கடவோம்." "கிருபையைப் பற்றிக்கொள்வோம்" என்பது நாம் நன்றி உள்ளவர்களாக இருத்தல், நம்முடைய இருதயங்களில் உண்டாகும் தேவனுடைய நேரிடையான பலன் என்பதாகும்.

1. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மன்னிப்பும், விடுதலையும் அடைகிறோம்.

2. சுத்தமான நல்மனச்சாட்சி உண்டாகிறது.

3. அவருடைய நித்திய ராஜ்யத்தில் வாசம் பண்ணுவோம் என்ற வாக்குத்தத்தம் அடைகிறோம்.

ஆ. வசனம் *28*. "நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி" பரிசுத்த ஆவியின் மூலம் நம்முடைய இருதயங்களில் தேவனுடைய கிரியைகள் உண்டாகின்றன.

1. ஆராதனை செய்தல் -- கூலிக்கு அமர்த்தப்பட்ட வேலையாளைப் போல நாம் அனைத்து ஊழியத்தையும் செய்யவேண்டும், ஆராதிக்க வேண்டும். எந்த விதத்திலும் அவர் விரும்புகிறபடி தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி சேவை செய்ய வேண்டும்.

2. பயத்தோடும், பக்தியோடும் -- தேவன் உயரமும், உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது (அவர் மகத்துவமுள்ளவர்). நாம் இவருடைய அற்பமான, தாழ்மையான ஊழியர்களாயிருக்கிறோம் (ஏசாயா *6:1;* மேலும் காண்க வெளிப்படுத்தின விசேஷம் *4:1-8*).

தேவனுடைய கிருபை

எபிரெயர் 12:14-29

இ. பவுல் இவ்விதம் கூறுகிறார்: "நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று ... வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்பத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1). தற்போதுள்ள வானங்களும், பூமியும் ஒழிந்துபோகும்போது அவர் மாத்திரமே நம்முடைய நம்பிக்கையாக இருப்பதால் நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும் அவருக்கு ஆராதனை செய்வோமாக!

ஈ. வசனம் 29. "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே." இது உபாகமம் 4:24-இல் இருந்து எடுக்கப்பட்ட மேற்கோளாகும். கிறிஸ்துவின் மூலம் அருளப்படும் இரட்சிப்பை மறுக்கிறவர்களுக்கு ஏற்படவிருக்கும் அழிவை இது குறிக்கிறது. இருப்பினும், இது குறிப்பாக, கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைக் கைவிட்டு, தங்களுடைய பழைய வாழ்க்கைக்குத் திரும்புகிறவர்களைக் குறிக்கிறது.

உ. தேவன் இரக்கமுள்ளவர். அதேவேளையில் அவர் பரிசுத்தமும், நீதிபரருமாயிருக்கிறபடியால் பாவத்தையும், தீமையையும் தண்டிக்கிறார். தங்களுடைய முரட்டாட்டத்திலும், விசுவாச துரோகத்திலும் தொடர்ந்திருப்பவர்கள் இதனை உண்மை எனக் கண்டறியும் ஓர் நாளுண்டு!

முடிவுரை

அ. இந்த வேதபகுதி கிறிஸ்துவின் மூலம் நமக்குக் கிடைக்கப் பெற்ற "தேவகிருபையைப்" பற்றியதாகும்.

1. நாம் சமாதானத்தையும், பரிசுத்தத்தையும் பின்தொடரும்படி முயற்சி மேற்கொள்வோமானால் கிருபையை இழந்து போக மாட்டோம்.

2. விழுந்து போகிறவர்களைப் பற்றிய தேவனுடைய எச்சரிப்பை நாம் ஏற்றுக்கொள்வோமானால், தேவனுடைய கிருபையை இழந்து போக மாட்டோம்.

3. நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும் தொடர்ந்து தேவனுக்கு ஊழியஞ் செய்வோமானால், நாம் தேவனுடைய கிருபையை இழந்து போக மாட்டோம்.

ஆ. எபிரெயர் நிருபத்தில் கிறிஸ்துவின் மேலுள்ள நம்முடைய விசுவாசத்தை கைவிட்டு விடுவதைப் பற்றி ஒன்றுக்குமேற்பட்ட தடவைகளில் நாம் எச்சரிக்கப்படுகிறோம். விசுவாச துரோகம் ஏற்படக் காரணமாயிருக்கும் மூன்று காரியங்கள் இந்தப் பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. மற்ற விசுவாசிக்கு விரோதமாக வளரும் கசப்பான வேர்.

2. நேர்மையற்ற பாலுறவுக்கு உள்ளாதல்.

3. இவ்வுலகக் காரியங்களுக்காகவும், வழிகளுக்காகவும்கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய "சேஷ்டபுத்திரத்தை" பரிமாற்றம் செய்தல்.

இ. நீங்கள் தற்போது இத்தகையக் காரியங்களில் ஈடுபட்டிருந்தால், கிறிஸ்துவினிடம் திரும்பவும், உங்களுடைய தேவையின் வேளையில் இரக்கத்தைப் பெறவும் இதுவே சரியான நேரம். நீங்கள் இதைச் செய்யத் தவறினால் உங்களுக்கு வேறெந்த நம்பிக்கையும் இல்லை, கீழ்க்கண்டவை மட்டுமே உங்கள் எதிர்பார்ப்பாயிருக்கும்:

1. காலத்தின் முடிவில் நீங்கள் அசைக்கப்படுவீர்கள்.

2. பட்சிக்கிற அக்கினியுள்ள நரகத்தில் வாதிக்கப்பட்டு, வேதனைப்படுவீர்கள்.